


# வருடாந்த அறிக்கை

# 2013

இலங்கை தேயிலை சபை

தபால் முகவரி
இலங்கை தேயிலை சபை
547, காலி வீதி
கொழும்பு 03
இலங்கை.

இலங்கைத் தேயிலை சபை,
கொழும்பு

தொலைபேசி
+94 - 112587814
+94 - 112582121
+94 - 112583687

பக்ஸ்

+941 12587341
+941 12589132

இலத்திரணியல் முகவரி
teaboard@pureceylontea.com

இணைத்தள முகவரி:
www.pureceylontea.com

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| நோக்கம் மற்றும் பணிக்கூற்று | ......... | 04 |
| இலங்கைத் தேயிலை சபையின் அங்கத்தவர்கள் | ......... | 05 |
| கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள் | ......... | 06 |
| ஊக்குவிப்பு மற்றும் விற்பனைக் குழுவின் அங்கத்தவர்கள் | ......... | 07 |
| சிரேஷ்ட முகாமைத்துவப் பணியாளர்கள் | ......... | 09 |
| தலைவரின் வாழ்த்துச் செய்தி | ......... | 10 |
| அடிப்படை ஒப்பீட்டுச் சுட்டி | ......... | 14 |
| இணைந்த பின்னனி | ......... | 15 |
| கைத்தொழிலின் பக்கத் தோற்றம் - 2013 | ......... | 19 |
| சபையினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் | ......... | 54 |
| தேயிலை ஆணையாளர் பிரிவு | ......... | 54 |
| தேயிலை ஏற்றுமதிப் பிரிவு | ......... | 61 |
| தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு | ......... | 64 |
| தேயிலை சுவை பரீட்சிப்புப் பிரிவு | ......... | 80 |
| பகுப்பாய்வு ஆராய்ச்சிக் கூடம் | ......... | 84 |
| நிர்வாகப் பிரிவு | ......... | 89 |
| உள்ளகக் கணக்காய்வு மற்றும் தகவல் விஞ்ஞானப் பிரிவு | ......... | 91 |
| நிதி மீளாய்வு | ......... | 92 |
| இலங்கைத் தேயிலை சபையின் அலுவலகம் | ......... | 110 |

# நோக்கு

இலங்கைத் தேயிலையை கோளமய சந்தையில் அதிஉன்னத கவர்ச்சிமிக்க பாணங்களில் முன்னிலைப் பாணமாக மாற்றியமைத்தல்.

# பணிக்கூற்று

கைத்தொழிலின் நீடித்த நிரந்தர அபிவிருத்தியின் ஊடாக நாட்டிற்குக் கிடைக்கும் அந்நிய நாட்டுச் செலாவணி உழைப்பினை மேம்படுத்தல் மற்றும் அதன் மூலம் பொருந்தோட்ட கைத்தொழிலில் ஈடுபடும் சமூகத்தின் பொருளாதார அபிவிருத்தியினை உறுதிப்படுத்தல்.

# இலங்கைத் தேயிலை சபையின் அங்கத்தவர்கள்

| | |
|---|---|
| தலைவர் | திருமதி. ஜானகி குருப்பு |
| குழுவின் செயலாளர் | திரு. டீ.டப்.எஸ். நாறங்கொட (21.08.2013 வரை)<br>பணிப்பாளர் நாயகம் இலங்கை தேயிலை சபை |
| குழுவின் அங்கத்தவர்கள் | |
| அங்கத்தவர் | திரு. பி.எல்.யூ. திசாநாயக்க<br>மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)<br>பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் பிரதிநிதி<br>(2013.05.16 வரை)<br>திரு.பீ.டீ.என்.யு.கே.எஸ். மஹிந்துசூரிய<br>(2013.09.13 தொடக்கம்) |
| அங்கத்தவர் | நிதி மற்றும் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் பிரதிநிதி<br>திரு. புஸ்பா வெல்லப்பிலி<br>பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளர், அரச நிதித் திணைக்களம் |
| அங்கத்தவர் | திரு. என். சீ. காரியவசம்<br>தலைவர், இலங்கை சிறுதேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை |
| அங்கத்தவர் | திரு. ஜயந்த கேரகல<br>தலைவர், கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கம் |
| அங்கத்தவர் | திரு.எஸ்.கே.எல். ஒபேசேகர, தலைவர்<br>இலங்கை பெருந்தோட்ட கைத்தொழிலாளர்கள் சங்கம் (2013.09.23 வரை)<br>திரு. ரோசான் ராஜதுரி (2013.09.07 தொடக்கம்) |
| அங்கத்தவர் | திரு. தீபலால் ஜயமான்ன, தலைவர்<br>தரகர்களின் சங்கம் (2013.09.26 வரை)<br>திரு. ஜெஹான் அல்கம் (2013.05.17 தொடக்கம்) |
| அங்கத்தவர் | திரு. ரோஷான் பர்னாந்து<br>தலைவர், தேயிலை ஏற்றுமதியாளர் சங்கம் (2012.11.14 தொடக்கம்) |
| அங்கத்தவர் | திரு. நெவில்ல ரத்நாயக்க<br>தலைவர், இலங்கை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் சங்கம்,<br>(2012.12.31 தொடக்கம்) |
| அங்கத்தவர் | திரு. அனில் பெரேரா<br>தலைவர், இலங்கைத் தேயிலை தொழிற்சாலை உரிமையாளர் சங்கம் |
| அங்கத்தவர் | திரு. ஜேப் அலோசியஸ்<br>கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரினால் நியமிக்கபட்ட |
| மேற்பார்வையாளர் | டாக்டர். எஸ்.எஸ்.பீ.டீ.ஜீ. ஜயவர்தன<br>திரு. ரீ. சாம்பசிவம் |

# கணக்காய்வுக் குழுவின் அங்கத்த்வர்கள்

| | |
|---|---|
| தலைவர் | திருமதி. புஸ்பா வெல்லபிலி<br>திறைசேரியின் பிரதிச் செயலாளர்<br>நிதி மற்றும் திட்டமிடல்<br>பொது நிதித் துறை அமைச்சு |
| குழுவின் அங்கத்தவர்கள்<br>அங்கத்தவர் | திரு. பீ.எல்.யூ. திசாநாயக்க<br>மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) (2013.03.25 வரை) |
| | திரு. ஜீ.டீ.டப். ஜயவர்தன<br>மேலதிக செயலாளர் (நிர்வாகம்)<br>பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு (2013.05.22 தொடக்கம் 2013.08.23 வரை) |
| அங்கத்தவர் | திரு. ஜயந்தா கேரகல<br>தலைவர்,<br>தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம் |
| அங்கத்தவர் | திரு. அனில் பெரேரா<br>தலைவரின் பிரிதிநிதி<br>இலங்கைத் தேயிலை கைத்தொழில் உரிமையாளர்கள் சங்கம் |
| மேற்பார்வையாளர் | சீ.எம்.எஸ். அன்ரனி<br>கணக்காய்வுப் பரிசோதகர்<br>கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம் |
| அமைப்பாளர் | திரு. டீ.டப்.எஸ். நாறங்கொட<br>பணிப்பாளர் நாயகம்<br>இலங்கைத் தேயிலை சபை<br>(2013.01.01 தொடக்கம் 2013.08.21 வரை) |
| | திரு. என்.ஏ.யூ.கே.எஸ். மிஹிந்துகுலசூரிய<br>பணிப்பாளர் நாயகம் (பதில்)<br>இலங்கைத் தேயிலை சபை (2013.09.23 தொடக்கம்) |

# ஊக்குவிப்பு மற்றும் விற்பனைக் குழுவின் அங்கத்தவர்கள்

ஊக்குவிப்பு மற்றும் விற்பனைக் குழு இலங்கைத் தேயிலை விற்பனை மற்றும் ஊக்குவிப்புப் பணிகள் தொடர்பாக சபைக்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட உப குழு

**தலைவர்**

திருமதி. ஜானகி குருப்பு
தலைவர், இலங்கைத் தேயிலை சபை

**குழு அங்கத்தவர்கள்**

**பொதுத் துறை**

திரு. பி.எல்.யூ. திசாநாயக்க
மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)
பொருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
(2013.04.05 வரை)

திரு. டீ.டப்.எஸ். நாறங்கொட
பணிப்பாளர் நாயகம்
இலங்கைத் தேயிலை சபை
(2013.04.05 வரை)

திரு. ஹசிதா டீ அல்விஸ்
பணிப்பாளர் (ஊக்குவிப்பு)
இலங்கை தேயிலை சபை

திரு. என்.ஏ.யூ.கே.எஸ்.மிஹிந்துகுலசூரிய
பணிப்பாளர் நாயகம்
இலங்கைத் தேயிலை சபை
(04.11.2013 தொடக்கம்)

திரு. பீ.டீ. பர்னாந்து
பணிப்பாளர் நாயகம்
வர்த்தகத் திணைக்களம்
(05.04.2013 வரை)

திரு. ஆர்.டீ.எஸ். குமாரரத்ன
பணிப்பாளர் நாயகம்
வர்த்தகத் திணைக்களம்
(04.11.2013 தொடக்கம்)

**தனியார் துறை**

திரு. மலின் கோனேதிலக்க
செயலாளர் நாயகம்
இலங்கை பெருந்தோட்ட சங்கம்

திரு. ரவி அபேவர்தன
அங்கத்தவர், தனியார் தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம்

திரு. அனில் குக்
பிரதி நிதி
கொழும்பு தரகர்கள் சங்கம்
(2013.04.05 வரை)

திரு. ரோஹந்த அதுகொறள
தலைமை தேசிய சேவை அபிவிருத்தி, யுனொப்ஸ்

திரு. எஸ்.எஸ்.பீ.டீ.ஜீ. ஜயவர்தன
தலைவர்,
தேயிலை ஆராய்ச்சி சபை

திரு. நெவில்ல ரத்நாயக்க
தலைவர், இலங்கைக் கூட்டமைப்பு சிறுதேயிலைத் தோட்ட அபிவிருத்தி சங்கங்கள்

டாக்டர். காமினி அபேவிக்ரம
முகாமைத்துவப் பணிப்பாளர்
பைசிலுார் தேயிலை ஏற்றுமதி (தனியார்) கம்பனி

திரு. முப்பதில் ஜப்பர்ஜீ
முகாமைத்துவப் பணிப்பாளர்
ஜப்பர்ஜீ பிரதர்ஸ்

திரு. ரொமேஸ் மொரியஸ்
பணிப்பாளர், பின்லய்ஸ் கொழும்பு தனியார் கம்பனி

திரு. ஜயந்த கருனாரத்ன
தலைமை நிர்வாக அதிகாரி
இம்பீரியல் டீஸ் தனியார் கம்பனி

திரு. மலிக் பர்னாந்து
பணிப்பாளர்
எம்.ஜே.எப். குருப்

திரு. ரொஹான் பர்னாந்து
தலைமை நிர்வாக அதிகாரி
எச்.பீ.ஏ. குருப்

திரு. நிராஸ் டீ. மேல்.
முகாமைத்துவப் பணிப்பாளர்
வன் றீஸ் சிலோன் லிமிட்டட் (04.11.2013 வரை)

திரு. டையப் அக்பர்அலி
பணிப்பாளர்
அக்பர் பிரதர்ஸ் லிமிட்டட்

திரு. அவில் டீ. சில்வா
பணிப்பாளர்
தேயிலைப் பிரிவு தலைமை
யுனிலீவர் சிலோன் லிமிட்டட்

# சிரேஷ்ட முகாமைத்துவ சபை

| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் | திரு. டீ.டப்.எஸ். நாறங்கொட (2013.08.21) |
| பணிப்பாளர் நாயகம் (பதில்) | திரு. என்.ஏ.யூ.கே.எஸ். மிஹிந்துகுலசூரிய (2013.09.23) |
| பணிப்பாளர் (ஊக்குவிப்பு) | திரு. ஏ.எச். டீ அல்விஸ் |
| தேயிலை ஆணையாளர் | திரு. ஈ.ஏ.ஜே.கே. எதிரிசிங்க |
| உதவி பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) | திரு. எஸ்.ஐ.சீ. பெரேரா |
| உதவிப் பணிப்பாளர் நாயகம் (நிதி) | திரு. ஏ.டீ.டப். பண்டாரகே |
| பணிப்பாளர் (ஆராய்ச்சி சேவை) | டாக்டர். எம்.ஏ.எம். ஜயதிலக |

# தலைவரின் வாழ்த்துச் செய்தி



மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் இலங்கைத் தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் எட்டியுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக இவ் வாழ்த்துச் செய்தியினை முன்வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 2013 ஆம் ஆண்டில் இலங்கைத் தேயிலைக் கைத்தொழில் துறையில் அதுவரையில் உருவாக்கப்பட்டிருந்த பிரதான செயற்சாதனைச் சுட்டியினைத் தாண்டி புதிய சாதானைகள் படைக்கப்பட்டமை விசேட அம்சமாகும். 146 வருட கால வரலாற்றிற்கு உரிமை கோரும் இக்கைத்தொழில்துறை இதுவரையில் ஈட்டப்பட்ட அதிகூடுதலான உற்பத்தியான 340 மில்லியன் கிலோகிராம் அளவு அதாவது 2012 ஆம் ஆண்டின் உற்பத்தியினை விட 3.5% அதிகரிப்பு மற்றும் தேயிலை ஏற்றுமதியில் இதுவரையில் பெறப்பட்ட அதிகூடுதலான வருமானமாக ரூபா. 10.5% அபிவிருத்தி தொடர்பான விளக்கங்கள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. கடல் மட்ட நிலப்பரப்பிலிருந்து அதிகரித்துச் செல்லும் உற்பத்தி முன்னேற்றங்கள் தொடர்பாக உயர்ந்த நிலப்பரப்புக்கள் மற்றும் தாழ்ந்த நிலப்பரப்புக்களின் உற்பத்தி அபிவிருத்திகள் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளன. ஏற்றுமதி அளவு தொடர்பாக கவனம் செலுத்தும் போது திடீர் தேயிலை ஏற்றுமதியில் 19% அதிகரிப்பு மற்றும் பச்சைத் தேயிலை ஏற்றுமதியில் 21% அதிகரிப்பு இடம்பெற்றுள்ளதுடன், புதிய சந்தை வாய்ப்பிற்கான சந்தர்ப்பங்களை எட்டும் வகையில் உற்பத்திப் பல்வகைப்படுத்தல்களின் தேவைகள் இதன் மூலம் எழுகின்றன. மேலும் 2013 ஆம் ஆண்டில் 12 மாதங்களுக்குள் செலவினம் குறைந்த சாதாரண விலைக்கமைய ரூபா. 623.91 காணப்பட்டதுடன் அது 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 10.6% வளர்ச்சியினைக் காணப்பிக்கின்றது. அதவாது 4.8 அமெரிக்க டொலரில் 9.3% அதிகரிப்பாகும். இவ்வாறான பின்னனியில் 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 358 மில்லியன் உற்பத்தியை இலங்கை எட்டுவது இலங்கைத் தேயிலை சபையின் இலக்காகும்.

இலங்கைத் தேயிலை சபையின் மானிட வளம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்குரிய செயற்பாட்டு முறைகளை விருத்தி செய்யும் திட்டங்களில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளது. தற்போது பணியாளர் சபையின் அநேகமான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதுடன் இதன் செயற்சான்றிதழின் விருத்திக்காக தேவையான இருப்பினும் நீண்டகாலமாக நிரப்பப்படாது இருந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன. மேலும் இலங்கைத் தேயிலை சபையின் பணியாளர் சபை தொழில்நுட்ப மற்றும் ஏனைய பிரிவுகளின் பயிற்சிக்காக நாளாந்தம் ஈடுபடுத்தப்படுகின்றது. சபையில் வரலாற்றின் முதல் தடவையாக கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ சபைக்காக வெளிப்பயிற்சி முகாம் குக்குலகங்க விடுதியில் நடாத்தப்பட்டது. இதில் இவர்களுக்கு புதிய அனுபவம் கிடைக்கப்பெற்றதுடன் சகலரதும் திருப்திகரமான முறையில் பயிற்சிகளில் ஈடுபட்டனர்.

அபிவிருத்திப் பிரிவு மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் 143.5 ஹெட்டெயர் நிலப்பிரப்பினைத் தழுவக்கூடியவாறு தேயிலை மீள் செய்கைக்காக மானிய உதவியாக 14 மில்லியனுக்கு அண்மித்த நிதி செலவிடப்பட்டதுடன் கைத்தொழில்சாலைகள் நவீனமயப்படுத்தும் மானிட உதவியாக கைத்தொழில்சாலைகளுக்கு வழங்கலாக 18 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. இவ்மானிட உதவிகள் தேயிலை சபையில் பகிர வேண்டிய தேவைகள் காணப்பட்ட போதிலும் இம்மானிட உதவிகள் வழங்கப்படும் வேளையில் ஏற்பட்ட சம்பவங்கள் காரணமாக மானிட உதவியினை துரிதகதியல் வழங்குவதற்கான செயற்பாடுகள் முழுமையாக சபையின் நிர்வாகத்தின் கீழ் நடைபெறவில்லை. இருப்பினும் மானிட உதவிக்கான விண்ணப்பப்படிவங்கள் கம்பனிகளுக்கு மாத்திரம் தேயிலை செய்கையாளர்களுக்கு மானிட உதவியின் முழுமையான நிதி கிடைப்பதற்கு முன்னர் மீள் பயிர்ச் செய்கை மற்றும் நவீனமயப்படுத்தும் பல கட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டி ஏற்பட்டன. அறுவடைக்கு முன்னர் ஏற்படக்கூடிய இழப்புக்களை கட்டுப்படுத்தல் மற்றும் தேயிலையின் அதிஉயர் தரத்தினை விருத்தி செய்யும நோக்குடன் அமுல்படுத்தப்பட்ட B- Leaf 60 வேலைத்திட்டம் அதிஉயர் பெறுபேற்றினைப் பெற்றுத் தந்ததுடன் தேயிலையின் தரம் மற்றும் பெற்றுக் கொண்ட விலைகள் தொடர்பாக சிறந்த பெறுபேறுகள் காணப்பட்டமையினால் அநேகமான கைத்தொழில்சாலைகள் தமது முயற்சியின் ஊடாக இவ்வேலைத்திட்டங்களை ஊக்குவிப்பதற்கான கவர்ச்சியினை இவ்வேலைத்திட்டம் பெற்றிருக்கின்றது.

மேலும் மேற்பார்வை செயற்பாடுகளின் போது தேயிலை சபையின் வரலாற்றில் முதலாவது தடவையாக கொழும்பு மற்றும் சனநெரிசல் கொண்ட பிரதேசத்தில் அமைந்துள்ள 250 தை விட மேற்பட்ட தேயிலை மற்றும் கலப்பு பொதியிடும் களஞ்சியசாலைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவற்றின் நிலைமைக்கேற்ப தரப்படுத்தப்பட்டன. குறைந்த பட்சம் தரத்தில் காணப்படாத களஞ்சியசாலைகள் அடுத்த ஆண்டில் பதிவு செய்வதற்கு முன்னர் அவற்றின் தரத்தினை விருத்தி செய்தல் வேண்டும் என இறுதி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

கைத்தொழில்சாலைக்காக உயர் பரிசோதனை வசதிகள் வழங்கப்படுவதனைப் போன்று தரப்பரிசோதனைக்காக தேயிலை சபைக்கு தேவைப்படும் மேலதிக பரிசோதனைகளை மேற்கொள்ளக்கூடியவாறு மேலதிக பணியாளர் சபை மற்றும் உபகரணங்களுடன் தேயிலை சபையின் பரிசோதனை ஆய்வுகூடம் பலப்படுத்தப்பட்டது.

இலங்கை தேயிலை சபை 2013 ஆம் ஆண்டில் விசேட வரலாற்று சாதனையினை படைத்தது. 2013 ஜுலை 07 ஆம் திகதி சர்வதேச தேயிலை உற்பத்தியாளர்களின் அமைப்பு இலங்கையில் தாபிக்கப்பட்டதுடன், இலங்கை, இந்தியா, கென்யா, இந்தோனேசியா, பேன்டர், மலாவி, மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் இதன் ஆரம்பகால உறுப்பினர்களாக அங்கத்துவம் பெற்றுக் கொண்டனர். இதற்கு முன்னர் இவ்வாறான அமைப்பினைத் தாபிப்பது தொடர்பில் தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளினால் சுமார் 30 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட தோல்விகரமான முயற்சியின் பின்னர் பெற்றுக் கொண்ட வெற்றியாக இது கருதப்படுகின்றது. இதன் அங்குராட்பண விழா தேயிலை உற்பத்தி செய்யும் சகல நாடுகள் மற்றும் தேயிலை சபையின் அங்கத்தவர்களின் மற்றும் கென்யா, இந்தியா மற்றும் இலங்கையில் உரிய வியடத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் தலைமையில் கொழும்பில் நடாத்தப்பட்டது. இதன் விசேட அம்சமாகக் கருதப்பட்டது. உலக மயமாக்கலுக்கமைய தேயிலைக் கைத்தொழில் நலனுக்காக அமைப்பின் பிரமாணக்குறிப்பிற்கு மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் 7 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன.

ஏனைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக அமைவது இலங்கைக்குச் சொந்தமான உலகின் பரபல்யமான இரு நாமங்களை இணைத்து மூன்று வருட காலத்திற்காக இலங்கைத் தேயிலை சபை இலங்கை கிரிக்கட் அணி சர்வதேச அனுசரணையாளராக மாற்றம் பெற்றதாகும்.

இது இலங்கைத் தேயிலையை கோளமய ரீதியில் பிரபல்யப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முதலாவது முயற்சியாக இதனைக் குறிப்பிட முடிவதுடன், விசேடமாக இலங்கைத் தேயிலைக்கான புதிய சந்தை வாய்ப்புக்கள் மற்றும் முன்னர் காணப்பட்ட சந்தையினை இலக்காகக் கொண்டு சர்வதேச தொலைக்காட்சி அலைவரிசை ஊடாக உரிய நாமம் தொடர்பில் அறிவுறுத்தும் பணிகளை உயர்ந்த பட்சம் மேற்கொள்ளும் வகையில் இலங்கைத் தேயிலை சபை மற்றும் இலங்கை நாமத்தை ஒன்றுடன் ஒன்று இணைக்கும் நாமத்தில் இது அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இலங்கைத் தேயிலையை 2013 CHOGM மாநாட்டில் வர்த்தக அமைப்பின் விசேட அனுசரனையாளராக மாற்றப்பட்டதுடன் வர்த்தக மாநாடு, ஊடாக மாநாடு மற்றும் மக்கள் கலைக் கோந்திரத்தின் இடம் பெற்ற கண்காட்சியில் பங்குபற்ற 1000 க்கு மேற்பட்ட வர்த்தகர்களுக்கிடையே இலங்கைத் தேயிலையை ஊக்குவிப்பதற்கு இது சந்தர்ப்பமாகக் கொள்ளப்பட்டது.

இலங்கைக் கைத்தொழில் மற்றும் இலங்கைத் தேயிலையின் நாமத்திற்காக தேயிலை வர்த்தகத்தின் உரிமைக்கான பலம்மிக்க அடிப்படை உருவாக்கி இருப்பது எனது நம்பிக்கையாகும். இலங்கை தேயிலைக் கைத்தொழில் துறையில் புதிய எழுச்சி தற்போது ஏற்பட்டுள்ளது. உரிய சந்தர்ப்பங்களில் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள நாம் மிகுந்த விருப்பதுடன் காணப்படுவது இதற்குத் தேவையான சந்தர்ப்பத்தினை பெற்றுக் கொள்ள எமக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

ஜானகி குறுப்பு
தலைவி
இலங்கை தேயிலை சபை

# அடிப்படை ஒப்பீட்டுச் சுட்டி

| தேயிலை உற்பத்தி | 2011 | 2012 | 2013 | 2012 மற்றும் 2013 ஒப்பீடு (%) |
|---|---|---|---|---|
| மொத்த தேயிலை உற்பத்தி (மில்.கி.கிராம்) | 327.5 | 328.3 | 340.0 | 3.5 |
| உயர் வகைப்படுத்தல் (மில். கிலோ கிராம்) | | | | |
| உயர் | 78.2 | 73.6 | 75.8 | 2.9 |
| மத்திய | 52.6 | 52.6 | 56.1 | 6.6 |
| தாழ் | 196.7 | 202.1 | 208.1 | 2.9 |
| சம்பிரதாய முறை மூலம் வகைப்படுத்தல் (மில். கி.கிராம்) | | | | |
| சம்ரதாய (உயிரியல், தொழில்நுட்பவியல், மீளப்பெற்றுக் கொண்ட) | 302.0 | 302.1 | 314.0 | 3.9 |
| சீ.டீ.சீ | 22.6 | 23.3 | 13.7 | 41.2 |
| பச்சை | 3.0 | 3.0 | 3.7 | 23.3 |
| **தேயிலை விற்பனை** | | | | |
| மொத்த தேயிலை விற்பனை - அளவு ( மில்.கி.கிராம்) | 323.3 | 325.4 | 335.5 | 3.1 |
| மொத்த தேயிலை விற்பனை - அலகு விலை (ரூபா. கி.கிராம்.) | 360.53 | 392.03 | 444.75 | 13.4 |
| **ஏற்றத்திற்கமைய விற்பனை அளவு ( மில்.கி.கிராம்)** | | | | |
| உயர் | 73.8 | 69.8 | 71.4 | 2.3 |
| மத்திய | 52.4 | 52.4 | 54.4 | 3.8 |
| தாழ் | 197.1 | 203.2 | 209.8 | 3.2 |
| **ஏற்றத்திற்கமைய அலகு விலை (ரூபா. கி.கிராம்)** | | | | |
| உயர் | 333.28 | 379.18 | 407.91 | 7.6 |
| மத்திய | 319.48 | 350.86 | 396.97 | 13.1 |
| தாழ் | 381.65 | 407.06 | 469.67 | 15.4 |
| **தேயிலை ஏற்றுமதி (மீள் ஏற்றுமதியைத் தவிர)** | | | | |
| அளவு ( மில்.கி.கிராம்) | 303.2 | 306.0 | 311.1 | 1.7 |
| பெறுமதி (ரூபா. பில்லியன்) | 151.8 | 169.0 | 190.8 | 12.9 |
| கருந்தேயிலை | 298.8 | 302.0 | 306.3 | 1.4 |
| பச்சைத் தேயிலை | 2.5 | 2.4 | 2.9 | 20.8 |
| திடீர் தேயிலை | 1.9 | 1.6 | 1.9 | 18.8 |
| **மொத்த தேயிலை ஏற்றுமதி (மீள் ஏற்றுமதியுடன்)** | | | | |
| அளவு ( மில்.கி.கிராம்).) | 322.6 | 319.9 | 319.7 | 0.1 |
| பெறுமதி (ரூபா. பில்லியன்) | 164.9 | 180.4 | 199.4 | 10.5 |

# 01.நிலையியற் சபை பின்னனி

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கைத் தேயிலை சபை 1985 இலக்கம் 17, 1990 இலக்கம் 44, 2003 இலக்கம் 29 மற்றும் 2006 இலக்கம் 44 கொண்ட சட்டங்களினால் மறுசீரமைக்கப்பட்ட 1975 இலக்கம் 14 கொண்ட இலங்கை தேயிலை சபைச் சட்டத்தின் கீழ் 1976 ஜனவரி 01 ஆம் திகதி தாபிக்கப்பட்டது.

இலங்கையில் தேயிலைக் கைத்தொழிலை விருத்தி செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் மற்றும் இலங்கைத் தேயிலையை கோளமய ரீதியில் ஊக்குவித்தல் தேயிலை சபைச் சட்டத்தின் கீழ் தேயிலை சபையின் பிரதான நோக்கமாகும். இக்கைத்தொழில் துறையினை மேற்பார்வை செய்வது தொடர்பிலும் பொறுப்புக் கொண்ட நிறுவனமாக இலங்கைத் தேயிலை சபையினால் உற்பத்தி, மேற்பார்வை தரச்சான்றிதழ் தேயிலையை புதிதாகப் பயிரிடல், மீள் பயிரிடல், பழைய தேயிலைத் தோட்டங்களை மீன் கட்டமைத்தல், கைத்தொழில்சாலைகளைத் தாபித்தல் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ளல், கைத்தொழில்சாலைகளை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் மானிய உதவி தொடர்பாக மேற்பார்வை கொள்ளைகளை வகுத்தல் மற்றும் தேயிலையின் தரத்தினை உறுதிப்படுத்தல், அமுல்படுத்தல் மற்றும் ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

விற்பனைச் சந்தர்ப்பங்களில் தேயிலையின் தரத்தினை மேற்பார்வை செய்தல், ஏற்றுமதிக்கு முன்னர் தேயிலை மேற்பார்வை, தரகர்கள், தேயிலை கலப்பு செயற்பாடுகளில் மற்றும் ஏற்றுமதியாளர்களின் களஞ்சியசாலைகளை பரிசோதனை செய்தல் மற்றும் சுகாதார பாதுகாப்பு மிகுந்ததாக தேயிலை கலப்பு மற்றும் பொதியிடல் தொடர்பான ஆலோசனை சேவைகளை வழங்குதல் ஆகிய பணிகள் தொடர்பாகவும் இலங்கைத் தேயிலை சபை இணைந்த செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. இதற்கு மேலதிகமாக தேயிலைத் தோட்ட முகாமைத்துவம் மற்றும் தேயிலை உற்பத்தி உட்பட விற்பனையில் ஈடுபட்டுள்ள சகல நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களை மேற்பார்வை செய்தல், நிர்வாகித்தல் மற்றும் வழிநடத்தல்களும் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆர்வம் கொண்ட தரப்பினர் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை, வெளிவிவகார அமைச்சு, வர்த்தக மற்றும் வாணிபத் திணைக்களம், இலங்கை சுற்றுலாச் சபை போன்ற அரசின் ஏனைய அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் “இலங்கைத் தேயிலை” உலகளாவிய ரீதியில் ஊக்குவிப்புச் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக இலங்கைத் தேயிலை சபை திட்டமிட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இலங்கை தேயிலை நாமத்தை கோளமய ரீதியில் மற்றும் உள்நாட்டில் பாதுகாப்பதற்காக ஏற்கனவே தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரதம செயலாளர் அலுவலகம், தேயிலை ஆணையாளர் பிரிவு, தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு, மற்றும் பகுப்பாய்வு ரீதியிலான பரிசோதனை ஆய்வுகூடம், இலங்கை தேயிலை சபையின் பிரதான பிரிவாகச் செயற்படுவதுடன் இச்சகல பிரிவுகளும் தேயிலைக் கைத்தொழிலின் மேம்பாட்டிற்காக செயற்பாடுகளை மேற்கொள்கின்றன.

# இலங்கைத் தேயிலை சபையின் கட்டமைப்பு

## 1.1 பிரதம செயலாளர் அலுவலகம்

சபையினால் மேற்கொள்ளப்படும் சகல செயற்பாடுகள் தொடர்பாகவும் முழுமையான மேற்பார்வைப் பணிகள் பிரதம செயலாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. பிரதம செயலாளர் அலுவலகம், தலைவரின் அலுவலகம், பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம், நிர்வாகப் பிரிவு, நிதிப் பிரிவு, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, புள்ளி விபரவியல் பிரிவு மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவு, நூலகம் ஆகிய பிரிவுகளை இது உள்ளடக்கியுள்ளது.

### 1.1.1 நிர்வாகப் பிரிவு

மானிட வள முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி, பெறுகை உட்பட களஞ்சியசாலை பராமரிப்புச் செயற்பாடுகள், உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி மற்றும் போக்குவரத்துச் செயற்பாடுகள் தொடர்பிலான முழுமையான பொறுப்பு நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## 1.1.2 நிதிப் பிரிவு

இலங்கை தேயிலை சபையின் முழுமையான நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பிலான பொறுப்புக்கள் நிதிப் பிரிவினால் வகிக்கப்படுகின்றன. சபைக்கான நிதிக் கொள்கைகளை வகுக்கும் வகையில் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல், வருடாந்த வரவு செலவு, வருடாந்த நிதி அறிக்கை, மாதாந்தக் கணக்கு மற்றும் இடைக்கால அறிக்கையினைத் தயாரித்தல், பொருட் பதிவேடு மற்றும் வருடாந்த பொருள் ஆய்வு அறிக்கையினைப் பேணுதல் உட்பட வருடாந்தக் கணக்குகளை கணக்காய்வாளருக்குச் சமர்ப்பித்தல் போன்றன நிதிப் பிரிவின் பிரதான செயற்பாடுகளாகும்.

## 1.2 தேயிலை ஆணையாளர் பிரிவு

தேயிலைப் பயிர்ச் செய்கை வருமானம், உற்பத்தி, பண்பு சார் விருத்தி, முடிவுத் தேயிலை வெளியேற்றம், தேயிலை களஞ்சியப்படுத்தல், பொதியிடல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பிலான சகல பணிகளையும் மேற்பார்வை செய்தல் போன்றன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. ஆறு (06) பிரதேச அலுவலகங்களின் வலையமைப்பின் ஊடாக இப்பிரிவின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 1.3 தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு

வெளிநாட்டு அலுவலகங்களின் ஒத்துழைப்புடன் இலங்கைத் தேயிலையினை உள்நாட்டைப் போன்று சர்வதேச ரீதியில் ஊக்குவித்தல் மற்றும் அதனுடன் தொடர்பான சகல பொறுப்புக்களும் இப்பிரிவினால் வகிக்கப்படுகின்றன. மேலும் கைத்தொழிலின் கோரிக்கைக்கமைய சந்தை தொடர்பான அறிவினையும் இப்பிரிவினால் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. உள்நாட்டு கொள்வனவாளர்களைப் போன்று வெளிநாட்டவர்களுக்கும் பயன்மிக்கதான தேயிலை விற்பனை வாய்ப்புக்களும் இப்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. தேயிலை சுவைப் பரீட்சிப்பாளர்களைக் கொண்டு சுயாதீன குழு மூலம் குறைந்த பட்சம் பண்புசார் தரம், சிங்க இலட்சினையின் கீழ் உரிய தரம் தொடர்பாக பரிசோதனை செய்வதனைப் போன்று ஏனைய தேயிலை வகை தொடர்பாகவும் பரிசோதனை செய்யும் பொறுப்பு தேயிலை உக்குவிப்புப் பிரிவின் கீழ் செயற்படும் தேயிலை பரிட்சிப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் ஊடக பிரச்சாரப் பணிகளை மேற்கொள்ளல், வெளிநாடுகளில் இலங்கை நூதனசாலை சேவைகளுக்கு இணைக்கப்பட்டுள்ள தேயிலை ஊக்குவிப்பு அலுவலகம் மற்றும் வர்த்தக அலுவலகங்களின் உதவியுடன் சர்வதேச உணவுப் பாண

சந்தைகளில் பங்கேற்றல், நாமத்தை ஊக்குவித்தல் மற்றும் வகை ஊக்குவிப்பு, வேலைத்திட்டங்களில் பங்கேற்றல் போன்றன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. சா்வதேச தேயிலை சங்கங்கள் மற்றும் சாலைகள் தேயிலை தொடா்பாக அரசிற்கு இடையிலான குழுக்களுடன் இணைந்து செயற்பாடுகளை மேற்கொள்வது இப்பிரிவினால் இடம் பெறக்கூடிய பணிகளாகும்.

## 1.4 பகுப்பாய்வுப் பரிசோதனைப் பிரிவு

தேயிலையின் தரத்தை பேணும் வகையில் உயா் தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி தேயிலையின் இரசாயண நுண்ணுயிரியல் மற்றும் கிருமிநாசினிகள் குறித்து பரிசோதனைகளை மேற்கொள்ளல் மற்றும் தரச்சான்றிதழ்களை வழங்குதல் இப்பிரிவின் பொறுப்பாகும். இதற்கமைய சகல பிரிவுகளிலும் பண்புசாா் தரத்தினை உறுதிப்படுத்தல் தொடா்பில் தனிப்பட்ட ரீதியில் தமது பங்களிப்புக்கள் வழங்கப்படுவதுடன் இதன் மூலம் "இலங்கைத் தேயிலை" என்ற நாமத்தை பாதுகாப்பதற்கான உதவிகள் வழங்கப்படுகின்றன.

# 02 கைத்தொழிலின் பக்கத்தோற்றம் - 2013

இத்துறையில் முன்னெடுக்கப்பட்ட இலவச உள்ளீடு மற்றும் சிறந்த விவசாய ஒழுங்கு விதிமுறைகளுக்கு மேலதிகமாக காணப்பட்ட பொருத்தமான காலநிலை காரணமாக இவ்வாண்டின் தேயிலை உற்பத்தியில் அபிவிருத்திகள் ஏற்பட்டன. பசளை மானியத்தை தொடர்ச்சியாக வழங்குவதும் இவ்வாண்டில் இம்முன்னேற்றத்தை எட்டுவதற்கு காரணமாக அமைந்தது. இலங்கையில் தேயிலை உற்பத்தி 340.0 மில்லியனுடன் ஒப்பீடு செய்யும் 3.5% வளர்ச்சியினை காண்பிக்கின்றது. தற்போது முதிர்ந்த (அறுவடை மேற்கொள்ளதா) 194.508 ஹெக்டெயர் அளவிற்குக் காணப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டயருக்குத் தேயிலை உற்பத்தி அளவு 1688 கிலோ கிராம் தொடக்கம் 1748 கிலோ கிராம் வரை (முதிர்ந்த தேயிலை அளவிற்கமைய) விருத்தியடைந்துள்ளது. ஆண்டு இறுதியில் கொழும்புத் தேயிலை ஏல விற்பனையில் 444.42 ரூபாவிற்கு ஒரு தேயிலை கிலோவின் பொதியின் விலையினை பேணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டை விட 52.109 ரூபா வளர்ச்சியினைக் காண்பிக்கின்றது.

## 2.1. தேயிலை காணியின் பரம்பல்

தற்போது இலங்கையில் தேயிலை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள மொத்தக் காணியின் அளவு 204.406 ஹெக்டெயர் ஆகும். இவற்றின் முகாமைத்துவ ஒப்பளவுகளுக்கமைய இவ்அளவில் 59% தனியார் துறையினராலும், 36% கூட்டுத்தாபனங்கள் மூலமாகவும், 5% அரச துறையையும் கொண்டமைந்துள்ளது. தேயிலை செய்கைக்காக பொருத்தமான காலநிலை காணப்படுவதினால் பிரதானமாக ஈரழிப்பு வலையமைப்புப் பிரதேசங்கள் உட்பட பல மாவட்டங்களில் தேயிலை செய்கை விரிவடைந்துள்ளது.




அட்டவணை 2.1 தேயிலைக் கணியின் உரிமை

## 2.2.இலங்கைத் தேயிலை உற்பத்தி

அட்டவணை 2.2 மொத்தத் தேயிலை உற்பத்தி

| அளவு | உற்பத்தி (கி.கிராம்) |
|---|---|
| உயர் | 75,776,810 |
| மத்திய | 56,127,362 |
| தாழ் | 208,122,315 |
| மொத்தம் | 340,026,480.77 |

2013 ஆம் ஆண்டில் முதல் பகுதியில் தேயிலை செய்கை மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களில் காணப்பட்ட பாதிப்பு மிகுந்த காலநிலையைத் தொடர்ந்து ஆண்டின் தேயிலை உற்பத்தி 340.0 மில்லியன் வரை விருத்தியடைவதுடன் அது 2012 ஆம் ஆண்டுகளில் பதிவாகி 328.3 கிலோ மில்லியன் தேயிலை உற்பத்தியுடன் ஒப்பீடு செய்யும் போது 3.5% உயரிய முன்னேற்றம் காண்பிக்கின்றது.

இலங்கையின் பல்வேறுபட்ட உயர் இடங்களில் தேயிலை செய்கை மேற்கொள்ளப்படுவதுடன் இதில் கூடுதலானவை தாழ்ந்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் உற்பத்தியாகும். இவற்றின் அமைவிடம் கடல் மட்டத்திலிருந்து 60 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது. இப்பரம்பல் விரிவடைந்துள்ளதுடன் இத்தேயிலை வகைகளின் இரசாயனத்தைப் போன்று நிறத்தையும் கொண்டமைந்துள்ளது.

இதனால் சமீப காலத்தில் உயரிய வருமானத்தைப் போன்று கேள்விகள் அதிகரித்துமையினால் தாழ்ந்த பிரதேச தேயிலை மீது கூடுதலான கேள்விகள் அதிகரித்துள்ளன. உயர் பிரதேசங்கள் 1,200 மீற்றரை விட உயரிய நிலப்பரப்புக்களில் தேயிலைச் செய்கை மேற்கொள்ளப்படுவதுடன் இத்தேயிலை உயர்தரம் மற்றும் இரசாயணம் உட்பட நறு மனத்தைக் கொண்டிருப்பதாக கருதப்படுகின்றது.

தேசிய தேயிலை உற்பத்தியில் 2/3 பங்கை விட மேற்பட்ட அளவு (62%) தாழ்ந்த பிரதேசங்களில் தேயிலை உற்பத்தி ஊடாக பங்களிப்பு வழங்குவதுடன் உயர் மற்றும் மத்திய உயர் நிலங்களின் தேயிலை உற்பத்தியில் தொடராக 22% மற்றும் 16% அளவு பங்களிப்பு செய்யப்படுகின்றது.

### 2.2.1. மாதாந்தத் தேயிலை உற்பத்தி

2013 ஆம் ஆண்டில் மாதாந்த உற்பத்தியில் மொத்த தேயிலை உற்பத்தி வரைபின் மூலம் காண்பிக்கப்படுகின்றது. 2012 உடன் ஒப்படு செய்யும் போது ஜூன், ஜூலை மற்றும் செப்ரெம்பர் மாதங்களைத் தவிர 2013 ஆம் ஆண்டில் மொத்த மாதாந்த தேயிலை உற்பத்தியில் சிறிய முன்னேற்றங்கள் காண்பிக்கப்படுகின்றன. கடந்த ஆண்டுகளில் உயரங்களுக்கமைய மாதாந்த மொத்த உற்பத்தி 2.2 குறிப்பின் மூலம் காண்பிக்கப்படுகின்றது.




### 2.2.2. விவசாயக் காலநிலை மாவட்டங்களுக்கிடையே பகுப்பாய்வு

தேயிலை கிலோ மில்லியன் 56 மற்றும் 47.4 உற்பத்தி செய்து தொடராக இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய இரு மாவட்டங்கள் விவசாய மாவட்டங்களுக்கமைய தேயிலை உற்பத்திப் பட்டியலில் உயர்ந்த நிலையில் உள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2013 ஆம் ஆண்டில் தேயிலை உற்பத்தி அதிகரிப்பு முன்னேற்றங்கள் மேற்கு உப மாவட்டங்களின் சகல விவசாய மாவட்டங்களிலும் காணப்படுவதாக விளக்க முடியும். மத்திய விவசாய காலநிலை மாவட்டத்தின் கீழ் ஹுண்ணஸ்கிரிய, நகல்ஸ், யாத்தஸ்ஸ ஆகிய பிரதேசங்களில் தேயிலை உற்பத்தி ஏனைய விவசாய வலயங்களை விட உயரிய அதிகரிப்பினை காண்பிக்க முடியும்.

## அட்டவணை 2.3. விவசாயக் காலநிலை மாவட்டங்களுக்கமைய தேயிலை உற்பத்தி

| விவசாய காலநிலை மாவட்டம் | உற்பத்தி அளவு | | மாற்றங்கள் | |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | அளவு | ‿ |
| அ. நுவரெலியா | 4,241 | 3,564 | 677 | 19 |
| ஆ. மேற்கு | | | | |
| 1. றம்போடை | 2,643 | 3,139 | -496 | -15.8 |
| 2. பூண்டுலோயா | 2,693 | 2,498 | 195 | 7.8 |
| 3. அக்கரபத்தான | 7,084 | 6,834 | 250 | 3.7 |
| 4. நானுஓயா / லிந்புல / தலவாக்கல | 11,737 | 11,820 | -83 | -0.7 |
| 5. பதான / கொடகல | 6,263 | 6,232 | 31 | 0.5 |
| 6. ஹட்டன் / டிக்கோயா | 8,465 | 8,595 | -130 | -1.5 |
| 7. பொகவந்தலாவ | 5,603 | 5,410 | 193 | 3.6 |
| 8. உயர் கொத்மலை / மஸ்கெலிய | 8,487 | 8,541 | -54 | -0.6 |
| மேற்கு மொத்தம் | 52,975 | 53,069 | -94 | -0.2 |
| இ. மத்திய | | | | |
| 1. வட்டவல / கினிகத்தென / நோர்ட்ன்பிரிஜ் | 3,028 | 2,837 | 191 | 6.7 |
| 2. புஸ்ஸல்லாவ / ஹேவஹட | 7,053 | 6,548 | 505 | 7.7 |
| 3. கொத்மலை | 2,068 | 2201 | -133 | -6.0 |
| 4. கம்பஹா / நாவலப்பிட்டிய / தொலஸ்பகே | 14,725 | 14523 | 202 | 1.4 |
| 5. நிலம்பே / ஹந்தான / கலஹா | 1,396 | 1,255 | 141 | 11.2 |
| 6. கடுகண்ணாவ | 8,055 | 7,796 | 259 | 3.3 |
| 7. மடுல்கலே / நோக்கில்ஸ் / றங்கல | 5,043 | 5,458 | -415 | -7.6 |
| 8. ஹுண்ணஸ்கிரி / த்நாக்கில்ஸ் / யாதொஸ்ஸ | 1441 | 994 | 447 | 45.0 |
| 9. பலாங்கொட / றக்வான | 3,398 | 3,569 | -171 | -4.8 |
| மொத்த மத்திய | 46,207 | 45,180 | 1,027 | 2.3 |
| ஈ. உட புஸ்ஸல்லாவ | | | | |
| 1. உடபுஸல்லாவ / ஹலகரனோஓயா | 5,309 | 4,870 | 439 | 9.0 |
| 2. மதுரட்ட | 2,887 | 2,827 | 60 | 2.1 |
| உடப்புஸல்லாவ மொத்தம் | 8,196 | 7,698 | 498 | 6.5 |
| உ. ஊவா | | | | |
| 1. கொஸ்லந்த / கல்துமுல்ல | 412 | 314 | 98 | 31.2 |
| 2. ஹபுதல | 4,513 | 3,771 | 742 | 19.7 |
| 3. பண்டாறவெல / பூனகல்ல | 3,065 | 2,953 | 112 | 3.8 |
| 4. மல்வத்த / வெலிமட | 3,264 | 3,197 | 67 | 2.1 |
| 5. தேமோதற / ஹாலிஎல்ல / பதுளை | 9,256 | 7,767 | 1,489 | 19.2 |
| 6. எல்ல / நமுனுகல | 1,494 | 1,180 | 314 | 26.6 |
| 7. பஸ்சற / லுனுகல்ல | 4,583 | 4,004 | 579 | 14.5 |
| 8. மடுல்சீம | 2,575 | 2,368 | 207 | 8.7 |
| ஊவா மொத்தம் | 29,162 | 25,554 | 3,608 | 14.1 |
| ஊ. தாழ்நிலங்கள் | | | | |
| 1. தெனியாய | 15,655 | 16,545 | -890 | -5.4 |
| 2. காலி | 47,491 | 44,393 | 3,098 | 7.0 |
| 3. களுத்துறை | 23,744 | 21,553 | 2,191 | 10.2 |
| 4. கேகாலை | 10,798 | 10,817 | -19 | -0.2 |
| 5. களணிவெலி | 894 | 829 | 65 | 7.8 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. கண்டி/மாத்தளை/குருநாகல் | 3,924 | 3,572 | 352 | 9.9 |
| 7. மாத்தறை | 4,486 | 4,460 | 26 | 0.6 |
| 8. மொறவக | 26,619 | 25,488 | 1,131 | 4.4 |
| 9. இரத்தினபுரி | 56,152 | 57,042 | -890 | -1.6 |
| 10. பாலாங்கொட | 9,478 | 8,633 | 845 | 9.8 |
| தாழ்நிலங்களில் மொத்தம் | 199,241 | 193,333 | 5,908 | 3.1 |
| **முழு மொத்தம்** | 340,022 | 328,397 | 11,625 | 3.5 |

மூலம் : இலங்கைத் தேயிலை சபை உற்பத்தி அறிக்கை

### 2.2.3. மாவட்டங்களுக்கமைய தேயிலை உற்பத்தி

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் பிரதான உயர்நிலப் பிரதேசங்களில் கூடுதலான தேயிலை உற்பத்தி நுவரெலியா மாவட்டத்திலும், தாழ் நிலப் பிரதேசத்தில் கூடுதலான தேயிலை உற்பத்தி இரத்தினபுரி மாவட்டத்திலும் பதிவாகியுள்ளது.

அட்டவணை 2.4. மாவட்டங்களுக்கமைய தேயிலை உற்பத்தி (கிலோ)

| மாவட்டம் | உயர் | மத்திய | தாழ் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பதுளை | 15,252,863 | 15,097,375 | | 30,350,239 |
| கொழும்பு | 0 | 0 | 645,20 | 645,206 |
| காலி | 0 | 0 | 52,861,55 | 52,861,550 |
| ஹம்பாந்தோட்டை | 0 | 0 | 256,60 | 256,603 |
| களுத்துறை | 0 | 0 | 18,657,95 | 18,657,951 |
| கண்டி | 814,013 | 22,449,689 | 10,899,93 | 34,163,632 |
| கேகாலை | 0 | 738,654 | 10,917,59 | 11,656,252 |
| மாத்தளை | 0 | 1,752,158 | 485,36 | 2,237,524 |
| மாத்தறை | 0 | 105,242 | 44,684,27 | 44,789,512 |
| நுவரெலியா | 58,799,039 | 13,607,092 | 894,37 6 | 73,300,507 |
| இரத்தினபுரி | 910,894 | 2,377,151 | 67,819,46 | 71,107,510 |
| **மொத்தம்** | 75,776,809 | 56,127,361 | 208,122,315 | 340,026,486 |

### 2.2.4. பச்சைக் கொழுந்துத் தேயிலை சேகரிப்பு முறைகளுக்கமைய உற்பத்திப் பகுப்பாய்வு

கைத்தொழில்சாலை ஒன்றின் மொத்தத் தேயிலை உற்பத்திக்காக தமது தோட்டங்களிலிருந்து பெற்றுக் கொள்ளும் தேயிலைக் கொழுந்து அல்லது ஏனைய விநியோகஸ்தர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் தேயிலைக் கொழுந்து பயன்படுத்தப்படுகின்றது. பச்சைக் கொழுந்துத் தேயிலை சேகரிப்பு அம்முறைகளுக்கமைய பெற்றுக் கொண்ட கொழுந்து மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த தேயிலை உற்பத்தி கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணை மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றது.

அட்டவணை 2.5 மாவட்டங்களுக்கமைய தேயிலை உற்பத்தி

| நிர்வாக மாவட்டம் | தமது செய்கையின் மூலம் தேயிலை தோட்டங்களிலிருந்து பெற்ற கொழுந்து | ஏனைய தோட்டங்களிலிருந்து பெற்றுக் கொண்ட கொழுந்து | கொள்வனவு செய்யப்பட்ட கொழுந்து | மொத்த உற்பத்தி |
|---|---|---|---|---|
| பதுளை | 12,746,603 | 7,264,547 | 10,339,089 | 30,350,239 |
| காலி | 1,460,619 | 357,303 | 51,043,628 | 52,861,550 |
| கொழும்பு | - | - | 645,206 | 645,206 |
| ஹம்பாந்தோட்டை | - | - | 256,603 | 256,603 |
| களுத்துறை | 802,366 | 75,144 | 17,780,442 | 18,657,951 |
| கண்டி | 6,262,668 | 1,921,030 | 25,979,935 | 34,163,633 |
| கேகாலை | 1,399,681 | 618,047 | 9,638,525 | 11,656,252 |
| மாத்தளை | 387,852 | 198,418 | 1,651,254 | 2,237,524 |
| நுவரெலியா | 46,956,331 | 11,106,525 | 15,237,651 | 73,300,507 |
| இரத்தினபுரி | 6,532,857 | 1,808,360 | 62,766,294 | 71,107,511 |
| மாத்தறை | 2,160,115 | 447,993 | 42,181,404 | 44,789,512 |
| **மொத்த உற்பத்தி** | 78,709,091 | 23,797,365 | 237,520,031 | 340,026,487 |

### 2.2.5. செயற்பாட்டு முறைமைக்கமைய உற்பத்திப் பகுப்பாய்வு

#### 2.2.5.1. கருந்தேயிலை மற்றும் பச்சைத் தேயிலை உற்பத்தி



சம்பிரதாயத் தேயிலை உற்பத்தி 2013 ஆம் ஆண்டில் 4% (11,941,554 கிலோ கிராம்) அதிகரிப்பு எட்டப்பட்டதுடன், சீ.ரி.சீ உற்பத்தி 2012 ஆம் ஆண்டை விட 4% குறைவு காண்பிக்கப்பட்டுள்ளது. மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் கருந்தேயிலை உற்பத்தி 11 மில்லியன் கிலோகிராம் (3.4%) கூடுதலான அதிகரிப்பு பதிவாகியுள்ளது. பச்சைத் தேயிலை உற்பத்தி 693.150 கிலோ கிராம் அதிகரிப்பு காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 23% வளர்ச்சியினைக் காண்பிக்கின்றது.

## 2.6 அட்டவணைச் செயற்பாட்டு முறைகளுக் கமைய தேயிலை உற்பத்தி

| செயற்பாட்டு முறைகள | 2012 (கி.கிராம்) | 2013 (கி.கிராம்) | 2012-2013 ஆண்டு | |
|---|---|---|---|---|
| | | | வித்தியாசம் (கி.கி) | அதிகரிப்பு(%) |
| சம்பிரதாய | 302,061,086 | 314,002,640 | 11,941,554 | 4.0 |
| சீ.ரீ.சீ. | 23,303,833 | 22,298,582 | (1,005,251) | -4.3 |
| பச்சை | 3,032,115 | 3,725,265 | 693,150 | 22.9 |
| மொத்தம் | 328,397,034 | 340,026,487 | 11,629,453 | 3.5 |

### 2.2.5.2. தீஉர் தேயிலை மற்றும் உயிரியல் தேயிலை

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது தீஉர் தேயிலை மற்றும் உயிரியல் தேயிலை ஆகிய இரு வகையான தேயிலை உற்பத்தியின் சிறிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் திஉர் தேயிலை உற்பத்தி 0.1 கிலோ மில்லியன் அதிகரிப்பும் உயிரியல் தேயிலை உற்பத்தியில் 0.3 கிலோ மில்லியன் அதிகரிப்பும் காண்பிக்கப்பட்டுள்ளது.

### 2.2.6. முடிவுத் தேயிலை வகைகளின் உற்பத்திச் செலவினம்

உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்திச் செலவினத்திற் கிடையில் தொடர்புகள் காணப்படுகின்றன. உற்பத்திச் செலவின அதிகரிப்பு பெருந்தோட்டத் துறையில் தொடர்ச்சியான பின்னடைவுகள் காண்பிக்கப் படுகின்றன. தேயிலை உற்பத்தி செயற்பாடுகளுக்குக் கணிசமான அளவு ஊழியர் தேவைகள் காணப்படுவதினால் உற்பத்திச் செலவினம் மற்றும் ஊழியர் உற்பத்தித் திறனுக்கிடையே பாரிய தொடர்புகள் காணப்படுகின்றன. தேயிலை உற்பத்தி செய்யும் ஏனைய பிரதான நகரங்களுக்கிடையே இலங்கையின் தேயிலை உற்பத்தி செலவினம் உயரிய பெறுமதியினைக் காண்பிக்கின்றது. இந்நிலைமை கோளமய சந்தையில் இலங்கையின் போட்டிகரமான நிலைமைக்கு அழுத்தங்களை ஏற்படுத்துகின்றது.

ஒரு கிலோ கிராம் முடிவுத் தேயிலை உற்பத்திச் செலவினம் கடந்த தசாப்தத்திற்குள் துரிதகதியில் அதிகரித்துள்ளது. ஊழிய செலவின அதிகரிப்பு உள்ளீடுகளின் விலை அதிகரித்தமை உற்பத்திச் செலவினம் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக அமைந்தது. 2012/2013 ஆண்டுக்கான குடிசன புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வருடாந்த உற்பத்திச் செலவினம் ஒரு கிலோ கிராமிற்கு 422.67 ரூபாவாக காணப்பட்டதுடன் இது 2011/2012 ஆண்டுக்கு இணைவாக 8% அதிகரிப்பு காண்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு 2.3. ஒரு கிலோ கிராம் முடிவுத் தேயிலையின் மொத்த செலவினம்

குறிப்பு 2.3. ஒரு கிலோ கிராம் முடிவுத் தேயிலையின் மொத்த செலவினம்




## 2.3. தேயிலை விற்பனை

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2013 ஆம் ஆண்டில் இலங்கைத் தேயிலைக் கைத்தொழிலில் தேயிலைக்காக பலம் பொருந்திய விலை பதிவாகியது. 2012 ஆம் ஆண்டு 325.4 மில்லியன் கிலோ கிராம் தேயிலையில் ஒரு கிலோ கிராமிற்கு 392.3 ரூபா சாதாரண விலையில் விற்பனை செய்யப்பட்டதுடன், 2013 ஆம் ஆண்டில் அரச தனியார் மற்றும் நேரடி விற்பனையாளர் மூலம் 335.5 மில்லியன் கிலோகிராமில் ஒரு கிலோ கிராமிற்கு 444.75 ரூபா சாதாரண விலையின் கீழ் விற்பனை செய்யப்பட்டது. முன்னைய ஆண்டு விற்பனையுடன் ஒப்பீடு செய்யும் போது இவ்அலகு விற்பனை அதிகரிப்பு ஒரு கிலோ கிராமிற்கு 392.3 தொடக்கம் 444.75 ரூபா வரை அதாவது 52.72ரூபா (13.4%) அளவு அதிகரிப்பு பதிவாகியது.

### 2.3.1. விற்பனை முறைகள்

கைத்தொழில்சாலைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை விற்பனை செய்யும் பிரதான முறையாக அமைந்தது பகிரங்க ஏல விற்பனையாகும். 2013 ஆம் ஆண்டில் 333.0 மில்லியன் கிலோகிராம் தேயிலை கொழும்பு தேயிலை ஏல விற்பனைச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டது. 4.0 பில்லியன் கிலோகிராம் (1.1%) தனியார் துறை மூலம் விற்பனை செய்யப்பட்டதுடன் எஞ்சிய 0.5% அளவு நேரடி விற்பனை மூலம் மேற்கொள்ளப்பட்டது.

### 2.3.2. கொழும்புத் தேயிலை ஏல விற்பனை

கொழும்புத் தேயிலை வர்த்தகங்களின் சங்கங்களின் கீழ் இலங்கை வர்த்தகர்களின் சங்கத்தின் கீழ் இலங்கை வர்த்தக சபையினால் 2013 ஆம் ஆண்டில் தேயிலை ஏல விற்பனைகள் 51 நடாத்தப்பட்டதுடன் அரச மற்றும் தனியார் விற்பனைக்காக 11 மில்லியன் கிலோகிராம் (3.4%) பலம் பொருந்திய அபிவிருத்தி பதிவாகியுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் 2013 ஆம் ஆண்டில் கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் சாதாரண விற்பனை விலை ஒப்பீட்டு அடிப்படையில் கூடுலதான பெறுமதியினைக் காண்பிப்பதுடன் இதன் மூலம் ஒரு கிலோகிராமிற்கு ரூபா. 391.64 தொடக்கம் 444.42 வரையான வருடாந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

### 2.3.3. உயர அடிப்படையில் விற்பனை

உயர அடிப்படையில் தேயிலை விற்பனை தொடர்பான பகுப்பாய்வு 2.7 அட்டவணையின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்று உயர அடிப்படையில் அலகு விலை கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது அதிகரிப்பினைக் காண்பிப்பதுடன் அது 2013 ஆம் ஆண்டில் நேர்புரள்வினை ஏற்படுத்தக் காரணமாக அமைந்துள்ளது.

அட்டவணை 2.7 நில அமைவிடத்திற்கமைய தேயிலை விற்பனை

| உயரம் | அளவு (மில்.கி.கி) | | | | அலகு விலை (மி.கி) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | வித்தி யாசம் | ு | 2012 | 2013 | வித்தி யாசம் | ு |
| உயர் | 69.8 | 71.4 | 1.6 | 2.3 | 379.18 | 407.91 | 28.73 | 7.6 |
| மத்திய | 52.4 | 54.4 | 2.0 | 3.8 | 350.86 | 397.97 | 46.11 | 13.1 |
| தாழ் | 203.2 | 209.8 | 6.6 | 3.2 | 407.06 | 469.67 | 62.61 | 15.4 |
| **மொத்த விற்பனை** | 325.4 | 335.6 | 10.2 | 3.1 | 392.03 | 444.75 | 52.72 | 13.4 |

## 2.4. தேயிலை ஏற்றுமதி

199.4 பில்லியன் ரூபா ஏற்றுமதி வருமானத்தை எட்டி 2013 ஆம் ஆண்டில் இலங்கைத் தேயிலை ஏற்றுமதி (மீள் ஏற்றுமதி உட்பட) 319 மில்லியன் கிலோகிராம் தேயிலை பதிவாகியுள்ளது. ஒரு கிலோகிராம் தேயிலைக்கான **(FOB)** சாதாரண அலகு விலை 623.91 ஆகும். இது ஏற்றுமதி வருமானங்களின் தேயிலை ஏற்றுமதி வருமானம் 150 பில்லியனைத் தாண்டிய நான்காவது ஆண்டாகும்.

அது சிறந்த தேயிலை உற்பத்தியாளராகத் தொடர்ந்தும் அடையாளம் காண்பிக்கப்பட்ட போதிலும் கோளமய தேயிலைக் கைத்தொழிலில் இலங்கையின் நிலையான தன்மை கிரமமான நிலையில் மகிழ்ச்சி கண்டுள்ளது. எதிர் தரப்பினரின் தீவிர போட்டி தேசத்தின் போட்டிகரமான நிலைமையின் மீது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் காணப்படும் கூடுதலான உற்பத்திச் செலவினம் குறைந்த அறுவடை காரணமாக அப்பாதிப்பு நிலை ஏற்பட்டுள்ளது. இதே வேளை கோளமய வாடிக்கையாளர்கள் தமது சுவையை துரிதகதியில் மாற்றிமைக்கும் காலத்தில் சம்பிரதாய தேயிலை உற்பத்தி மீது தொடர்ந்தும் நிலைத்திருப்பதனால் சந்தைகளில் பங்குகளையும் இழக்க வேண்டிய நிலை ஏற்படும்.

### 2.4.1. ஏற்றுமதி வகைகளுக்கு ஏற்ப தேயிலைப் பகுப்பாய்வு

பொதுவாக தேயிலை பகுப்பாய்வு மற்றும் பண்புசார் தரத்தினை அடிப்படையாகக் கொண்டு தேயிலைக்கான விருப்பம் குறிப்பிடத்தக்களவு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக மத்திய கிழக்கு மற்றும் பொதுநலவாய சபையின் சுயாதீன நாடுகள் இலங்கையின் பிரதானமாக உற்பத்தி செய்யப்படும் தாழ் நிலங்களில் வளரும் சம்பிரதாய சிறந்த சுவை கொண்ட தேயிலையில் விருப்பம் காண்பிக்கின்றனர்.

2013 ஆம் ஆண்டு திரண்ட தேயிலை உற்பத்தி (மீள் பெறுமதி உட்பட) (கருந்தேயிலை, பச்சைத் தேயிலை, திடீர் தேயிலை பொதிகள் மாத்திரம்) 2012 ஆம் ஆண்டை விட தொடராக அளவில் 0.06 % முறைவு மற்றும் உழைப்பு 10.5% தை விட அதிகரிப்பினைக் காண்பித்தது. மேலும் செலவீனமற்ற விலை கிலோ கிராமிற்கு ரூபா. 61 (8.10.4%) திருப்திகரமான மட்டத்தில் காணப்படுகின்றது.

இது எவ்வாறாக இருப்பினும் 2013 ஆம் ஆண்டு திறந்த ஏற்றுமதி வருமானம் 1,558.0 மில்லியன் அமெரிக்க டொலர் என்பதும் 2012 ஆம் ஆண்டில் அது 1,414.0 மில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்டமையினால் 2013 ஆம் ஆண்டு 10.2 % அதிகரிப்புப் பெறப்பட்டுளளது.

குறிப்பு 2.4. மாதாந்தத் தேயிலை ஏற்றுமதி அளவு மற்றும் அலகின் பெறுமதி



## 2.8. அட்டவணை வருடாந்த தேயிலை ஏற்றுமதி - 2013

| ஏற்றுமதி | 2013 டிசம்பர் அளவில் | | |
|---|---|---|---|
| **பொதியிடப்பட்ட கறுப்புத் தேயிலை** | அளவு (கி.கி) | பெறுமதி (ரூபா) | க.செ (ரூபா) |
| பொதியிடப்பட்ட தேயிலை | 23,210,382 | 25,476,608,354 | 1,097.64 |
| மொத்தத் தேயிலை | 129,287,835 | 72,118,470,750 | 557.81 |
| பொதியிடப்பட்ட தேயிலை (4கி.-1கி.கி.) | 91,223,712 | 55,810,232,251 | 611.80 |
| பொதியிடப்பட்ட தேயிலை (1கி.கி.-3கி.கி.) | 1,376,570 | 903,042,064 | 656.01 |
| பொதியிடப்பட்ட தேயிலை (3கி.கி.-5கி.கி.) | 18,281,518 | 9,659,101,976 | 528.35 |
| பொதியிடப்பட்ட தேயிலை (5கி.கி.-10கி.கி.) | 42,937,913 | 21,229,306,318 | 494.42 |
| கறுப்புத் தேயிலை – மொத்தம் | 306,317,930 | 185,196,761,713 | 604.59 |
| **பொதியிடப்பட்ட பச்சை தேயிலை** | | | |
| பொதியிடப்பட்ட தேயிலை | 862,587 | 1,536,758,686 | 1,781.57 |
| மொத்தத் தேயிலை | 804,817 | 449,410,476 | 558.40 |
| பொதியிடப்பட்ட தேயிலை (4கி.-1கி.கி.) | 1,188,657 | 1,589,446,039 | 1,337.18 |
| பொதியிடப்பட்ட தேயிலை (1கி.கி.-3கி.கி.) | 1,032 | 1,154,247 | 1,118.46 |
| பொதியிடப்பட்ட தேயிலை (3கி.கி.-5கி.கி.) | 2,190 | 3,682,576 | 1,681.54 |
| பொதியிடப்பட்ட தேயிலை (5கி.கி.-10கி.கி.) | 17,022 | 24,002,472 | 1,410.09 |
| பச்சை தேயிலை – மொத்தம் | 2,876,305 | 3,604,454,496 | 1,253.15 |
| உடனடித்தேயிலை | | | |
| **உடனடித் தேயிலை – மொத்தம்** | 1,950,649 | 2,002,724,122 | 1,026.70 |
| **மொத்த தேயிலை ஏற்றுமதி** | 311,144,884 | 190,803,940,331 | 613.23 |

| மீள் ஏற்றுமதி | 2013 டிசம்பர் 31 | | |
|---|---|---|---|
| **பொதியிடப்பட்ட கறுப்புத் தேயிலை** | அளவு (கி.கி) | பெறுமதி | க.செ (ரூபா) |
| பொதியிடப்பட்ட தேயிலை | 2,524,856 | 2,631,690,595 | 1,042.31 |
| மொத்தத் தேயிலை | 516,471 | 354,447,294 | 686.29 |
| பொதியிடப்பட்ட தேயிலை (4கி.-1கி.கி.) | 2,994,140 | 1,972,405,719 | 658.76 |
| பொதியிடப்பட்ட தேயிலை (1கி.கி.-3கி.கி.) | 4,665 | 5,051,763 | 1,082.91 |
| பொதியிடப்பட்ட தேயிலை (3கி.கி.-5கி.கி.) | 8,780 | 5,107,692 | 581.74 |
| பொதியிடப்பட்ட தேயிலை (5கி.கி.-10கி.கி.) | 107,973 | 58,385,777 | 540.74 |
| **ஏற்றுமதி** | 6,156,885 | 5,027,088,840 | 816.50 |
| பொதியிடப்பட்ட பச்சை தேயிலை | | | |
| பொதியிடப்பட்ட தேயிலை | 1,141464 | 2,289,278,960 | 2,005.56 |
| மொத்தத் தேயிலை | 208,143 | 119,230,219 | 572.83 |
| பொதியிடப்பட்ட தேயிலை (4கி.-1கி.கி.) | 1,002,406 | 1,195,578,174 | 1,192.71 |
| பொதியிடப்பட்ட தேயிலை (1கி.கி.-3கி.கி.) | 5,935 | 3,597,011 | 606.07 |
| பொதியிடப்பட்ட தேயிலை (3கி.கி.-5கி.கி.) | 623 | 703,136 | 1,128.63 |
| பொதியிடப்பட்ட தேயிலை (5கி.கி.-10கி.கி.) | 279 | 437,199 | 1,567.02 |
| பச்சை தேயிலை – மொத்தம் | 2,358,850 | 3,608,824,699 | 1,529.91 |
| உடனடித் தேயிலை | | | |
| உடனடித் தேயிலை – மொத்தம் | 243 | 491,377 | 2,022.13 |
| **மொத்த தேயிலை ஏற்றுமதி** | | | |
| முழு மொத்தம் | 8,515,978 | 8,636,404,916 | 1,014.14 |

.

### 2.4.3. பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதி

கோளமய சுவை மிகத் துரிதகதியில் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை வகைகள் மீது கவர்ச்சிக்குட்படுவதனால் இலங்கை தேயிலை உலக சந்தையில் தமது சம்பிரதாய விற்பனை நிலைமைகளை பேணும் வகையில் இச்சந்தை மாற்றங்கள் மற்றும் அதற்கு அமைவாக செயற்படுதல் அவசியமாகும். பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைப் பொதி, தேயிலை பக்கட் மற்றும் திடீர் தேயிலை ஏற்றுமதி மொத்த ஏற்றுமதி அளவில் 58.2% ஆகும். இது எவ்வாறாக இருப்பினும் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 62.0% பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதி மூலம் கிடைக்கப்பெற்றுள்ளது.

### 2.4.4. இலங்கைத் தேயிலை ஏற்றுமதியில் பிரதான கேந்திர நிலையம்

வரலாற்று ரீதியில் இலங்கையிலிருந்து பிரதானமாக தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடாக ஐக்கிய இராட்சியம் உட்பட ஐரோப்பிய நாடுகள் காணப்படுகின்றன.. இது எவ்வாறாக இருப்பினும் தேயிலைப் பொதிப் பயன்பாடுகள் அதிகரித்ததனைத் தொடர்ந்து இலங்கையின் தொகைத் தேயிலை ஏற்றுமதி தற்போது மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்படுகின்றன.

உலகின் பாரிய தேயிலை இறக்குமதியாளரான ரஷ்யா இலங்கையின் மிகப் பெரிய தேயிலைக் கொள்வனவாளராகும். மீளாய்விற்கு உட்படுத்தப் பட்ட காலப்பகுதியில் தேயிலை ஏற்றுமதியின் அளவில் சுமார் 14.7% மும் ரஷ்யாவினால் கொள்வனவு செய்யப்படுவதுடன் அதன் மூலம் 15.8% ஏற்றுமதி வருமானம் கிடைக்கின்றது. இலங்கையில் தேயிலைக் கொள்வனவாளர்களுக் கிடையே ஈரான் தொடர்ச்சியாக இரண்டாவது இடத்தை வகிப்பதுடன் தேயிலை ஏற்றுமதி அளவில் 10.3% ஏற்றுமதி செய்யப்படும் துருக்கி மூன்றாவது இடத்தில் உள்ளது. பிராந்திய ரீதியில் நோக்கும் போது மத்திய கிழக்கு வலயம் இலங்கையின் மிகப் பெரிய ஏற்றுமதி இடமாகக் காணப்படுவதுடன் பலம் பொருந்திய எரிபொருள் காணப்படுவதினால் தேயிலைக்கான கேள்வியும் அதிகரித்துச் செல்கின்றது.

மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் சுமார் 70.8% இலங்கைத் தேயிலை ஏற்றுமதி செய்யும் இடங்களாக 10 நாடுகள் மூலம் கொள்வனவு செய்யப்படுகின்றன. இது எவ்வாறாக இருப்பினும் சாதாரண அலகு விற்பனை பேணப்படுவது ரஷ்யா மற்றும் ஜப்பான் நாடுகளாகும். மேலும் ஐக்கிய இராட்சியம் பூராகவும் காணப்பட்ட சீரற்ற பொருளாதார நிலைமைக்குள் ஐரேப்பியாவில் காணப்பட்ட கடன் நெருக்கடி காரணமாகவும் ஏற்றுமதி மூலம் உழைக்கவிருந்த வருமானம் குறைவடைந்துள்ளது.

அட்டவணை 2.10 ஆண்டில் இலங்கையின் பிரதான தேயிலை ஏற்றுமதி கேந்திர நிலையம்

| நாடுகள் | அளவு (மில்.கி) | மதிப்பு (ரூ.கி.) | எப்.ஓ.பீ. (ரூ. கி) | ஏற்றுமதி பகிர்வு % | ஏற்றுமதி மதிப்பீடு % |
|---|---|---|---|---|---|
| ரஷ்யா | 45.7 | 30.2 | 660.25 | 14.7 | 15.8 |
| ஈரான் | 38.4 | 24.4 | 635.11 | 12.3 | 12.8 |
| துருக்கி | 32.2 | 18.2 | 564.07 | 10.3 | 9.5 |
| ஈராக் | 22.3 | 11.1 | 500.61 | 7.2 | 5.8 |
| சிரியா | 21.1 | 12.1 | 574.68 | 6.8 | 6.3 |
| ஐ.அ.எ.இரா | 17.5 | 10.1 | 578.76 | 5.6 | 5.3 |
| குவைத் | 16.0 | 6.4 | 401.68 | 5.1 | 3.4 |
| அசர்பைஜான் | 10.8 | 6.4 | 595.98 | 3.5 | 3.4 |
| ஜப்பான் | 8.8 | 6.0 | 683.12 | 2.8 | 3.2 |
| யோர்தான் | 7.6 | 4.6 | 598.74 | 2.5 | 2.4 |
| மொத்தம் | 220.4 | 129.6 | 587.88 | 70.8 | 67.9 |

#### 2.4.4.1. கருந்தேயிலை ஏற்றுமதி

2013 ஆம் ஆண்டில் 44.9 மில்லியன் கிலோ கிராம் (14.3%) இறக்குமதி செய்து ரஷ்யா இலங்கையின் கருந்தேயிலை இறக்குமதி யாளர்களில் முன்னிலையினைத் தொடர்ந்தும் பேணுவதுடன் ஈரான் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் இலங்கையின் கருந்தேயிலை ஏற்றுமதியாளர்களினால் தொடராக 38.4 மில்லியன் கிலோ (12.34% மற்றும் 32.2 மில்லியன் கிலோ கிராம் (10.35%) இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 2.11 பிரதான கருந்தேயிலை ஏற்றுமதி இடங்கள்

| நாடுகள் | அளவு (மில்.கி) | மதிப்பு (ரூ.கி.) | எப்.ஓ.பீ. (ரூ. கி) | ஏற்றுமதி பகிர்வு % | ஏற்றுமதி மதிப்பீடு % |
|---|---|---|---|---|---|
| ரஷ்யா | 44.9 | 29.1 | 648.14 | 14.4 | 15.3 |
| ஈரான் | 38.4 | 24.4 | 634.95 | 12.3 | 12.8 |
| துருக்கி | 32.2 | 18.2 | 564.03 | 10.4 | 9.5 |
| ஈராக் | 22.2 | 11.1 | 498.79 | 7.1 | 5.8 |
| சிரியா | 21.1 | 12.1 | 574.56 | 6.8 | 6.3 |
| முன்னனி 5 இலக்குகளின் மொத்தம் | 158.8 | 94.8 | 597.24 | 51.0 | 49.7 |

### 2.4.4.2. பச்சைத் தேயிலை ஏற்றுமதி

பிரதான பச்சைத் தேயிலை 10 ஏற்றுமதியாளர்களில் ரஷ்யா 2013 ஆம் ஆண்டில் 0.8 மில்லியன் கிலோ கிராம் பச்சைத் தேயிலையை குறிப்பிடத்தக்களவு இறக்குமதி யினைப் பதிவாக்கியுள்ளது. மேலும் குறிப்பிடத் தக்க விசேட விடயமாக அமைந்தது மொத்தப் பச்சைத் தேயிலை ஏற்றுமதியின் 50% தை விட கூடுதலான பிரதான 05 இடங்களுக்கு ஏற்றுமதிகள் மேற்கொள்வதாகும்.

அட்டவணை 2.12 பிரதான பச்சைத் தேயிலை ஏற்றுமதி இடங்கள்

| நாடுகள் | அளவு (மில்.கி) | மதிப்பு (ரூ.கி.) | எப்.ஓ.பீ. (ரூ. கி) | ஏற்று மதி பகிர் வு % | ஏற்றும தி மதிப்பீ டு |
|---|---|---|---|---|---|
| ரஷ்யா | 782.2 | 1,060.1 | 1355.33 | 0.25 | 0.56 |
| ஐ.அ.எ.இரா | 484.9 | 254.7 | 525.18 | 0.16 | 0.13 |
| யுக்ரேன் | 315.6 | 392.4 | 1,243.15 | 0.1 | 0.21 |
| ஐ. அமெரிக்கா | 109.1 | 131.6 | 1,206.77 | 0.04 | 0.07 |
| ஜேர்மனி | 82.1 | 106.8 | 1,300.66 | 0.03 | 0.06 |
| முன்னனி 5 இலக்குகளின் மொத்தம் | 1,773.9 | 1,945.6 | 1,096.78 | 0.57 | 1.02 |

### 2.4.4.3. திடீர் தேயிலை ஏற்றுமதி

இலங்கையில் திடீர் தேயிலை ஏற்றுமதி யாளருக்கிடையே முன்னனியில் அயர்லாந்து காணப்படுவதுடன் இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை அளவு 1.9 மில்லியன் கிலோ (97%) ஆகும். ஐக்கிய அரபு எமிர் இராட்சியம் மற்றும் இந்தோனேசியா திடீர் தேயிலை ஏற்றுமதியின் பிரதான இடங்களில் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் காணப்படுகின்றது.

### 2.4.4.4. ஆர்.டீ.டீ. தேயிலை ஏற்றுமதி (பானத்திற்காகத் தயாரிக்கப்பட்ட)

2013 ஆண்டில் 06 இடங்களுக்காக இலங்கையில் இருந்து ஆர்.டீ.டீ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. இலங்கையின் ஆர்.டீ.டீ. தேயிலையின் பிரதான கொள்வனவாளர் ஐக்கிய அமெரிக்கா என்பதுடன் கொள்வனவு செய்யப்பட்ட அளவு 1000 லீற்றர் 21.1% (71%) ஆகும். இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை ஏற்றுமதி (உதாரணம் - மீள் ஏற்றுமதி) தொடர்பாக கருத்தில் கொள்ளப்படும் போது 2013 ஆம் ஆண்டில் ஈரானுக்கு மாத்திரம் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 1 மில்லியன் கிலோ கிராம் என்பதுடன் ஈரான் மற்றும் உஸ்பகிஸ்தானுக்கு அண்ணளவாக 0.7 மில்லியன் கிலோ கிராம் மற்றும் 0.6 மில்லியன் ஏற்றுமதி செய்யப்பட்டது. இது இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் இலங்கையின் மீள் ஏற்றுமதியின் அளவு 32% ஆகும்.

## 2.5. கோளமயத் தேயிலைக் கைத்தொழிலின் பின்னனி

தேயிலை உலகெங்கிலும் மிகப் பிரபல்யமான மற்றும் கூடுதலாக நுகரக்கூடிய சுவை மிகுந்த பாணமாகும். இலங்கையின் ஏற்றுமதியில் விசேடமாக தேயிலை ஏற்றுமதி இக்கைத்தொழிலில் ஆரம்பம் தொடக்கம் தேசிய பொருளாதாரத்தைப் போன்று சமூக அபிவிருத்திக்கும் பாரிய செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இவ்வர்த்தகப் பொருளின் அடிப்படை உற்பத்தி இலங்கையின் ஏற்றுமதி உழைப்பிற்காக பாரிய பங்களிப்பினை வழங்கியதுடன் இத்துறையில் இந்நாட்டில் மிகப்பெரிய பணியாளர் சபைச் சேவையில் ஈடுபட்ட துறையாகும்.

தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் பிரதான உற்பத்தியாளராக இந்தியா, சீனா, இலங்கை, கென்யா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளாகும். உலகத் தேயிலை உற்பத்தியில் 77 % தில் நாடுகளுடன் ஒப்பீடு செய்யப்படுவதுடன் கோளமய உற்பத்தியில் சமார் 80 % இல் நாடுகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. சீனா உலகின் அதிகூடுதலான தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் பிரதானமாக முக்கியத்துவம் காணப்படுவதுடன் ஆபிரிக்கக் கண்டத்தில் விசேடமாக கென்யா மிகப்பெரிய தேயிலை அறுவடையினைப் பெறும் நாடாக பிரபல்யம் அடைந்துள்ளது. கோளமயத் தேயிலைக் கைத்தொழிலில் இலங்கை தொடர்பாக கருத்தில் கொள்ளும்போது 2013 ஆம் ஆண்டில் சாதாரண அபிவிருத்தியினை (ஏல விற்பனை) தொடர்ச்சியான அதிகரிப்பினை காண்பித்ததுடன் ஏனைய தேயிலை உற்பத்தி செய்யும் அங்கத்துவ நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது வருமானச் செயற்சான்றிதழ் (ஏற்றுமதி) அதிகரிப்புக் காண்பிக்கப்படுகின்றது.

### 2.5.1. கோளமய தேயிலைச் செய்கை

2013 ஆம் ஆண்டின் இறுதியில் உலகில் தேயிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பின் அளவு 3 மில்லியன் ஹெக்டெயரை விட மேற்பட்டது என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 2.13 அதிஉயரிய தேயிலை விளைநில அறிக்கை

| நாடுகள் | 2010 ஹெக் | 2011 ஹெக் | 2012 ஹெக் |
|---|---|---|---|
| சீனா | 1,970,200 | 2,112,510 | 2,279,940 |
| இந்தியா | 560,609 | 579,350 | 580,000 |
| இலங்கை | 188,007 | 187,860 | 190,717 |
| கென்யா | 171,916 | 187,855 | 187,000 |
| வியட்நாம் | 129,000 | 127,000 | 124,027 |
| இந்தோனேசியா | 122,796 | 122,764 | 121,076 |
| மியன்மார் | 78,400 | 78,500 | 78,500 |
| துருக்கி | 77,500 | 77,700 | 77,800 |
| பங்களாதேஷ் | 54,900 | 54,400 | 54,500 |
| ஜப்பான் | 46,800 | 46,200 | 45,900 |

மூலம் - ச.தே.கு வருடாந்த அறிக்கை - 2013

*செய்கை மேற்கொள்ளப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ள பிரதேசம்

சர்வதேச தேயிலைக் குழு அறிக்கைகளுக் கமைய உலகின் மிகப்பெரிய தேயிலைக் உற்பத்தி செய்கைப் பிரதேசம் சீனாவில் காணப்படுவதுடன், அவ்வளவு பாரியளவில் அதிகரித்துள்ளது. கென்யாவில் தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட காணியின் அளவு 2010 தொடக்கம் 2012 வரை பாரியளவில் அதிகரித்துள்ளது. 2009 – 2012 காலப்பகுதியில் கூடுதலான தேயிலை பயிர்ச் செய்கை மேற்கொண்ட 10 நாடுகளில் பயிற்சி செய்கை மேற்கொள்ளப்பட்ட காணியின் அளவு அட்டவணை 2.13 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2.5.2. கோளமயத் தேயிலை நுகர்ச்சி

2010 – 2012 ஆகிய மூன்று ஆண்டு காலப்பகுதியில் வருடாந்தத் தேயிலை நுகர்ச்சி மற்றும் மூன்று ஆண்டுகால சாதாரண தேயிலை நுகர்ச்சி தொடர்பில் வெளியிடப்பட்ட வருடாந்த உயரிய தேயிலை நுகரக்கூடிய நாடு சீனாவாகும். அது 1,279.33 மில்லியன் கிலோ ஆகும். இது எவ்வாறாக இருப்பினும் தனிநபர் தேயிலை நுகர்ச்சி 0.95 கிலோ கிராம் என்ற அதிஉயரிய பெறுமதியினைக் காண்பிக்கின்றது. அத்துடன் கூடுதலான தேயிலை நுகர்வு இந்தியாவிலிருந்து பதிவாகியுள்ளதுடன் அது 871.67 கிலோ மில்லியன் ஆகும். தனிநபர் நுகர்ச்சி 0.73 கிலோகிராம் ஆகும்.

தேசிய தேயிலைக் குழுவினால் 2009-11 மற்றும் 2010-12 ஆகிய கால எல்லைக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கமைய தனிநபர் தேயிலை நுகர்ச்சி தொடர்பாக புள்ளி விபரங்களுக்கமைய மொரோக்கோ மற்றும் குவைத்தில் தேயிலை நுகர்வோரின் தனிநபர்

தேயிலைப் பயன்பாடு தொடர்பாக 0.2 கிலோ கிராமில் மற்றும் 0.29 கிலோ கிராமில் குறைவடைந்துள்ளதுடன், கடந்த மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் சீனா மற்றும் எகிப்தில் தேயிலை வருடாந்த தனிநபர் நுகர்ச்சி 0.08 கிலோ கிராமினால் மற்றும் 0.06 கிலோ கிராமினால் அதிகரித்துள்ளது. முன்னைய காலப்பகுதியுடன் ஒப்பீடு செய்யும் போது புதிய மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட கால எல்லைக்குள் பஹ்ரேனில் தேயிலை நுகர்ச்சி நிலையான மட்டத்தில் காணப்பட்டது.

குவைத், அயர்லாந்து மற்றும் ஆப்கானிஸ்தானில் வருடாந்த தனிநபர் தேயிலை நுகர்வு உயரிய மட்டத்தில் காணப்பட்டதுடன் அது தொடர்பாக 3.25 கிலோகிராம், 1.90 மற்றும் 1.97 கிலோகிராம் ஆகும். அதிஉயரிய தனிநபர் தேயிலை பயன்பாடு கொண்ட நாடுகளின் பட்டியல் 2.14 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.14 நாடுகளுக்கமைய நுகர்வு தொடர்பான புள்ளிவிபரங்கள்

| நாடுகள் | 2009-11 | | 2010-12 | |
|---|---|---|---|---|
| | மொத்தம் (மி.கிலோ) | தலா ஒருவருக்கு (கி.கிராம்) | மொத்தம் (மி.கிலோ) | தலா ஒருவருக்கு (கி.கிராம்) |
| குவைத் | 9.47 | 3.54 | 8.68 | 3.25 |
| அயர்லாந்து குடியரசு | 9.85 | 2.18 | 8.51 | 1.90 |
| ஆப்கானிஸ்தான் | 50.37 | 2.06 | 49.27 | 1.97 |
| துருக்கி | 150.10 | 2.06 | 151.57 | 2.04 |
| ஐக்கிய இராட்சியம் | 122.46 | 1.92 | 123.51 | 1.97 |
| லிபியா | 10.23 | 1.72 | 13.60 | 2.39 |
| மொறோக்கோ | 56.17 | 1.76 | 56.17 | 1.74 |
| தாய்வான் | 44.18 | 1.65 | 44.00 | 1.64 |
| கட்டார் | 2.43 | 1.42 | 2.53 | 1.46 |
| சிரியா | 28.54 | 1.42 | 26.50 | 1.25 |
| ஹொங்கோங் | 9.64 | 1.36 | 9.48 | 1.34 |
| இலங்கை | 28.03 | 1.36 | 27.79 | 1.33 |
| ஈராக் | 42.00 | 1.31 | 40.35 | 1.21 |
| சிலி | 20.45 | 1.20 | 21.40 | 1.24 |
| எகிப்து | 85.03 | 1.08 | 91.63 | 1.14 |
| நியுசிலாந்து | 4.38 | 1.00 | 4.35 | 0.99 |

மூலம் - ச.தே.கு. வருடாந்த புள்ளிவிபரம் - 2013

## 2.5.3. கோளமய தேயிலை உற்பத்தி

கோளமயத் தேயிலை உற்பத்தி பிரதானமாக இந்தியா, சீனா, கென்யா மற்றும் இலங்கை ஆகிய 04 நாடுகளை கேந்திரமாக் கொண்டமைந் துள்ளதுடன் 2013 ஆம் ஆண்டில் உலக தேயிலை உற்பத்தியில் 79% அளவிற்காக இந்நாடுகள் பங்களிப்புச் செய்துள்ளன. (2.6 குறிப்பு) கோளமய தேயிலை உற்பத்தியில் சகல வலயங்களுக்கும் உரியதாக அறிக்கைப் படுத்தப்படும் அதிஉயரிய உற்பத்தி அளவான 4.8 பில்லியன் கிலோ 2013 ஆம் ஆண்டில் பதிவாகியது. 2010 – 2013 காலப்பகுதியில் கோளமய உற்பத்திக்கு பிரதான தேயிலை உற்பத்தியாளர்களினால் வழங்கப்பட்ட பங்களிப்புக்கள் (100 பில்லியன் கிலோ கிராம் இற்கு அப்பால்) 2.6 குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியா மற்றும் சீனா தொடர்ந்தும் உலகின் மிகப் பெரிய தேயிலை உற்பத்தியாளராகக் காணப்பட்ட போதிலும் இவ்விரு நாடுகளிலும் இடம்பெற்ற குறிப்பிடத் தக்களவு தேயிலை நுகர்ச்சி காரணமாக கென்யா மற்றும் இலங்கை இவ்வர்த்தகப் பொருளில் மிகப்பெரிய ஏற்றுமதியாளராக மாற்றம் பெற்றுள்ளது.

2013 ஆம் ஆண்டில் 1,850.0 மில்லியன் கிலோ கிராம் உற்பத்தி செய்து சீனா தேயிலை உற்பத்தியில் அதிஉயரிய மட்டத்தில் காணப்படுவதுடன் 1,200 மில்லியன் கிலோ கிராம் வருடாந்த உற்பத்தியினை மேற்கொண்டு இந்தியா இரண்டாம் இடத்தை எட்டியுள்ளது. 2013 ஆம் ஆண்டில் இலங்கையைத் தாண்டி கென்யா தேயிலை உற்பத்தியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன் இதன் போது உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை அளவு 4.32 மில்லியன் கிலோ கிராம் ஆகும்.

குறிப்பு 2.5 உலகத் தேயிலை உற்பத்தி தொடர்பான புள்ளி விபரம்




மூலம் - ச.தே.கு. வருடாந்த புள்ளிவிபரம் - 2013

## 2.5.4 கோளமயத் தேயிலை விற்பனை

2013 ஆம் ஆண்டில் உயர்ந்த பட்ச விற்பனையினை மேற்கொண்டு பிரதான ஏல விற்பனை மத்திய நிலையமாக கொழும்பு தேயிலை ஏல விற்பனை மத்திய நிலையம் அதி உயரிய இடத்தை எட்டியது. இது எவ்வாறாக இருப்பினும் பொம்பசா ஏல விற்பனையில் விற்பனை செய்யப்பட்ட தேயிலையின் அளவு 320 மில்லியன் கிலோ கிராமை தாண்டியிருந்தது. 2012 ஆம் ஆண்டில் கொல்கத்தா ஏல விற்பனையில் பாரிய பின்னடைவுகள் காணப்பட்டன. இருப்பினும் 2013 ஆம் ஆண்டில் விற்பனை அளவினை அதிகரித்து அது வழமை நிலைக்கு மாற்றியமைக்கப்பட்டது.

அட்டவணை 2.15 பிரதான தேயிலை ஏல விற்பனை தொடர்பான புள்ளிவிபரங்கள் (அளவு கி.மி. சாதாரண அலகு விற்பனை (அ.டொ.கி.கி))

| ஏல விற்பனை நிலையம் | 2010 | | 2011 | | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அளவு | விலை | அளவு | விலை | அளவு | விலை | அளவு | விலை |
| சிட்டகோங் | 57 | 2.61 | 54 | 2.14 | 58 | 2.41 | 55 | 2.87 |
| கொச்சி | 61 | 1.71 | 59 | 1.73 | 57 | 1.8 | 53 | 1.94 |
| கொழும்பு | 322 | 3.28 | 323 | 3.26 | 325 | 3.07 | 336 | 3.44 |
| குவாஹதி | 122 | 2.43 | 126 | 2.33 | 119 | 2.47 | 119 | 2.26 |
| ஜகார்தா | 39 | 1.82 | 33 | 1.97 | 32 | 1.97 | 33 | 1.98 |
| கொல்கத்தா | 155 | 2.86 | 166 | 2.78 | 151 | 2.81 | 163 | 2.72 |
| லிபியா | 16 | 1.58 | 13 | 1.61 | 13 | 1.7 | 10 | 1.82 |
| மொம்போசா | 348 | 2.54 | 334 | 2.72 | 322 | 2.88 | 384 | 2.41 |

மூலம் - ச.தே.கு இணையத்தளம்

கடந்த 04 ஆண்டு காலப்பகுதிக்குள் அதிஉயரிய ஏல விற்பனை விலை சாதாரண அடிப்படையில் முன்னெடுப்பது தொடர்பான அறிக்கை கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் காணப்பட்டது. இது மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் ஒரு கலோ கிராம் தேயிலைக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 3.00 த்தாண்டிய விலை பேணப்பட்ட ஏல விற்பனை மத்திய நிலையமாகக் காணப்பட்டது. ஒரு கிலோகிராம் தேயிலைக்கு 2.72 அமெரிக்க டொலரை விட மேற்பட்ட சாதாரண ஏல விற்பனை விலையினைப் பேணி கொல்கத்தா ஏல விற்பனை இரண்டாம் இடத்தைப் பெற்றதுடன் பொம்பசா தேயிலை ஏல விற்பனை 2013 ஆம் ஆண்டில் மூன்றாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது.

## 2.5.5 கோளமயத் தேயிலை ஏற்றுமதி

முன்னைய ஆண்டிற்கு இணைவாக 2013 ஆம் ஆண்டில் கோளமய தேயிலை ஏற்றுமதியில் 92.0 மில்லியன் கிலோ கிராம் (5%) குறைவு காண்பிக்கப்பட்டது. தேயிலை ஏற்றுமதி செய்யம் ஏனைய பிரதான நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது 2013 ஆம் ஆண்டில் கென்யா மற்றும் இலங்கை ஏற்றுமதி அளவில் தொடராக 14.9% மற்றும் 3.8% முன்னேற்றம் எட்டப்பட்டது. கென்யா, சீனா மற்றும் இலங்கை ஆகிய பிரதான மூன்று ஏற்றுமதியாளர்களினால் கோளமய ஏற்றுமதியில் 61.4% தை விட மேற்பட்ட ஏற்றுமதி அளவிற்காக பங்களிப்பு செய்யப்பட்டிருந்தது.

குறிப்பு 2.7 பிரதான தேயிலை ஏற்றுமதியாளர்கள்

2.16 அட்டவணை உரிய ஏற்றுமதி வருமானம் (2012)

| நாடுகள் | ஏற்றுமதி வருமானம் (அமெரிக்க மில்லியன்) |
|---|---|
| கென்யா | 1,328.00 |
| இலங்கை | 1,324.70 |
| சீனா | 1,115.80 |
| இந்தியா | 686.80 |
| வியட்நாம் | 227.00 |
| இந்தோனேசியா | 156.70 |

மூலம் - ச.தே.கு வருடாந்த மீளாய்வு – 2013

குறிப்பு - இலங்கைக்குரியதாக உரிய புள்ளி விபரங்களின் மீது ஏற்றுமதிக்குரிய எண்ணிக்கை உள்ளடக்கப்படவில்லை.

2012 ஆம் ஆண்டில் பிரதான தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகள் மற்றும் அவற்றின் ஏற்றுமதி வருமானம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைத் தேயிலை ஏற்றுமதி மூலம் இரண்டாவது மிகப்பெரிய வருமானம் ஈட்டுபவராக பதிவாகியுள்ளது. இரண்டாவது மிகப்பெரிய தேயிலை ஏற்றுமதி வருமானத்தை ஈட்டும் நாடான இலங்கையுடன் ஒப்பீடு செய்யும் போது கென்யா 3.3 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டியுள்ளதாக தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. தூய தேயிலை ஏற்றுமதி ஊடாக இலங்கையின் தேயிலைக் கைத்தொழில் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டியுள்ள கைத்தொழிலில் தொடர்ச்சியாக நிலைத்துள்ளது.

# இலங்கைத் தேயிலை ஏற்றுமதி சந்தைகள்



## 2.6 இலங்கைத் தேயிலை தொடர்பான ஏற்றுமதிச் சந்தை மீளாய்வு

### 2.6.1 ரஷ்யா மற்றும் பொதுநலவாய சபை

2013 ஆம் ஆண்டில் உலகிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்தத் தேயிலை அளவில் 22% கொள்வனவு செய்து ரஷ்யா மற்றும் பொதுநலவாய சபையின் சுயாதீன இராட்சியங்கள் “இலங்கைத் தேயிலை” பிரதான கொள்வனவாளர்களாக தொடர்ந்தும் முன்னனியில் நிலை கொண்டுள்ளனர். இலங்கைத் தேயிலை ஏற்றுமதியில் சுமார் 15% தனியாகக் கொள்வனவு செய்து ரஷ்யா இலங்கைத் தேயிலை கொள்வனவாளர்களுக் கிடையே முதல் இடத்தைத் தக்க வைத்துள்ளது. இவ்வலயம் இலங்கைத் தேயிலை இறக்குமதி செய்யும் 12 நாடுகளை உள்ளடக்கியுள்ளது.

அட்டவணை 2.17 பொதுநலவாய சபை இராட்சிய வலயங்க ளுக்கு இலங்கைத் தேயிலை ஏற்றுமதி தொடர்பாக நாடுகளுக்கமைய ஒப்பீடுகள் (2012 / 2013)

| நாடுகள் | 2012 (கி.கிராம்) | 2013 (கி. கிராம்) | வித்தியாச அளவு (கி.கிராம்) | வளர்ச்சி % |
|---|---|---|---|---|
| ரஷ்யா | 49,231,228 | 46,371,885 | (2,859,343) | -5.8 |
| யுக்ரேன் | 9,792,151 | 9,342,238 | (449,913) | -4.6 |
| அசர்பைஜான் | 10,691,045 | 10,780,779 | 89,734 | 0.8 |
| கசகஸ்தான் | 991,480 | 867,949 | (123,531 ) | -12.5 |
| உஸ்பகிஸ்தான் | 1,932,078 | 1,259,839 | (672,239) | -34.8 |
| கிர்கிஸ்தான் | 1,014,460 | 991,067 | (23,393) | -2.3 |
| பொலருஸ் | 579,162 | 638,247 | 59,085 | 10.2 |
| மாலைதீவு | 321,320 | 271,361 | (49,959) | -15.5 |
| ஜோர்ஜியா | 178,282 | 327,711 | 149,429 | 83.8 |
| தஜிகிஸ்தான் | 41,013 | 30,663 | (10,350) | -25.2 |
| துருக்மினிஸ்தான் | 130,425 | 46,151 | (84,274) | -64.6 |
| ஆர்மெனியா | 222,781 | 70,198 | ( 152,583) | -68.5 |
| மொத்தம் | 75,125,425 | 70,998,088 | ( 4,127,337 ) | 5.5 |

மூலம் - இலங்கைத் தேயிலை சபை

#### 2.6.1.1. ரஷ்யா

இலங்கைத் தேயிலை கொள்வனவாளர்களில் ரஷ்யா இலங்கைத் தேயிலை கொள்வனவு செய்யக்கூடிய பிரதான கொள்வனவாளராக தொடர்ந்தும் முன்னனயில் உள்ளது. இலங்கையிலிருந்து 2013 ஆம் ஆண்டில் உலகிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த இலங்கைத் தேயிலை ஏற்றுமதியில் 15% ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்நாட்டின் வருடாந்த தேயிலை நுகர்வு 181,000 மெ.தொன் அண்மித்தளவு இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன்



தனிநபர் தேயிலை நுகர்ச்சி 2.4 கிலோ கிராம் ஆகும். ரஷ்ய சுங்க அதிகாரிகளின் அறிக்கைகளுக்கமைய 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் சுமார் 33% த்தை எட்டி இலங்கை அவ்ஆண்டுகளில் தேயிலை சந்தையில் முதல் நிலையில் நிலைத் திருந்தமை விசேட அம்சமாகும்.

அளவு தொடர்பாக கருத்தில் கொள்ளும் போது ரஷ்யா 2012 ஆம் ஆண்டில் தேயிலை 180.1 மில்லியன் கிலோ கிராம் இறக்குமதி செய்யப்பட்டதுடன் அதில் 47 மில்லியன் கிலோ இலங்கையில் இருந்து 46 மில்லியன் கிலோ இந்தியாவில் இருந்தும், 15.3 மில்லியன் கிலோ சீனாவில் இருந்தும், 14 மில்லியன் கிலோ கிராம் இந்தோனேசியாவில் இருந்தும், 19.3 மில்லியன் கிலோ கிராம் கென்யாவில் இருந்தும், 23 மில்லியன் கிலோ கிராம் வியட்நாமில் இருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றது.

இலங்கைச் சுங்க புள்ளி விபரங்களுக்கமைய 2013 ஆம் ஆண்டில் இலங்கையில் இருந்து ரஷ்யாவிற்கு நேரடியாக ஏற்றுமதி செய்யப்பட்ட இலங்கைத்தேயிலை அளவு 46 மில்லியன் கிலோ என்பதுடன் அதன் பெறுமதி அண்ணளவாக இலங்கை ரூபா. 31.0 மில்லியன் ஆகும். அத்துடன் 2012 ஆம் ஆண்டில் இலங்கைத் தேயிலை 49.2 மில்லியன் கிலோ ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் இதன் பெறுமதி இலங்கை ரூபா அடிப்படையில் 28.5 மில்லியன் ஆகும். ரஷ்ய சுங்கத் திணைக்களத்திற்கமைய 2012 ஆம் ஆண்டில் 47 மில்லியன் கிலோ தேயிலை விநியோகித்த இலங்கையின் மிகப் பெரிய விநியோகஸ்தராக முன்னைய இடத்தில் நிலைத்து நிற்கின்றது.

பெறுமதி சேர்க்கப்பட்ட அபிவிருத்தியினைக் காண்பித்து கப்பல் ஏற்றப்பட்ட தேசிய பொதி மற்றும் தேயிலைப் பொதி 2013 ஆம் ஆண்டில் 13% வீதத்தினால் அதிகரித்தது. (பொதி மூலம் 2013 ஆம் ஆண்டில் 8.5 கிலோ மில்லியன் மற்றும் 2012 ஆம் 7.5 கிலோ மில்லியன் மற்றும் தேயிலைப் பைகளில் 2011 ஆம் ஆண்டில் 2.7 மில்லியன் கிலோ மற்றும் 2.6 கிலோ மில்லியன் "அக்மார்" தேயிலை தமது பொதியிடல் பல ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டதற்கு மேலதிகமாக "ரிஸ்டன்" போன்ற எமது இலங்கைத் தேயிலை நாமம் ரஷ்யாவின் பொதியிடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலும் இந்நிலைமை எட்டப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையின் ஒப்பந்தப் பொதியீட்டாளர்களை "அஹமட்" தேயிலையும் ரஷ்யாவின் பொதியிடல் அளவு மேலும் அதிகரித்துள்ளது. ரஷ்யக் குடியரசின் பிரபல நாமங்களுக்கிடையே ஓரீம் டிரேட், எல்.எல்.சீ. (கிரீன் பீல்ட், மெஸ், பிரின்சஸ் கீதா, பிரின்சஸ் லூரி மற்றும் பிரின்சஸ் ஜவா) முதன்மை இடத்தில் இருப்பதுடன், அதனைத் தொடர்ந்து "கொரோனா" மற்றும் "லிஸ்மா" ஆகிய நாமங்கள் கொண்ட May கம்பனி "லிப்டன்" "புலூக் பொன்ட்" மற்றும் "பெசேதா" ஆகிய நாமங்கள் கொண்ட யுனிலிவர் கம்பனி, "அஹமட்" ஆகிய நாமங்கள் கொண்ட AHMAD கம்பனி "அக்பர்" மற்றும் "பர்னெலி" ஆகிய நாமங்கள் கொண்ட SAPSAN கம்பனியும் பிரபல நாமங்களுடன் முன்னினையில் உள்ளன.

### 2.6.1.2. யுக்ரேன்

யுக்ரேன் பொதுநலவாய சபை சுயாதீன நாடு களுக்கிடையே சம்பிரதாய தேயிலை நுகரும் நாடு என்பதுடன் வலயத்தில் ரஷ்யாவினைத் தவிர இரண்டாவது மிகப் பெரிய சந்தையாக இது கருதப்படுகின்றது.



ஒரு நபரின் வருடாந்த சாதாரணத் தேயிலை நுகர்ச்சி 500 கிராம் - 600 கிராமிற்கு இடைப்பட்டதுடன் இது ஒப்பீட்டு ரீதியில் குறைந்த அளவாகும். எனவே நுகர்வினை ஊக்குவிப்பதற்கான தேவைகள் காணப்படுகின்றன.

யுக்ரேன் நாட்டைச் சேர்ந்த மக்கள் அனேகமாக கருந்தேயிலை நுகரக்கூடியவர்கள் என்பதுடன் தேயிலை இறக்குமதியில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. சம்பிரதாயத் தேயிலை இந்நாட்டில் மிகப் பிரபல்யமான பாணமாகும். சகல யுக்ரேன் மக்களுக்கும் சுவையான தேனீர் அருந்த விருப்பம் காண்பிப்பதுடன், தேயிலை நுகர்வு பருவகாலத்திற்கமைய இடம் பெறுவது வழமையான செயற்பாடாகும். தேயிலைக்கான கூடுதலான கேள்வி குளிர் காலத்திலேயே காணப்படுகின்றது.

இந்நாட்டின் உள்நாட்டு சந்தையான தேசிய தேயிலை நாமத்துடன் இலங்கையில் மற்றும் ரஷ்யாவின் உலக பிரபல கம்பனி மற்றும் நாம உற்பத்தியாளர்கள் செயற்படக் கூடிய இடமாகும். MAY Tea, ஓரீம், அஹமட் தேயிலைக் கம்பனி, கொலமியாக் கம்பனி ஆகிய கம்பனிகள் யுக்ரேனில் பொதியிடல் இயந்திரத்துடன் பிரதான நாம உரிமையாளராகும்.

இலங்கைச் சுங்க புள்ளி விபரங்களுக்கமைய 2013 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவு 9,342,238 கிலோகிராம் என்பதுடன், அவ்அளவு அண்மித்த அடிப்படையில் 62% தெளிவான அடிப்படையிலும் 22% பொதி அடிப்படையிலும், 3.4% பச்சைத் தேயிலை அடிப்படையிலும், 6.1% ஏனைய முறையிலும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவு 9,342,238 என்பதுடன் அது 2012 ஆண்டை விட 5% தை விடக் குறைந்த அளவாகும்.

பொருளாதார நெருக்கடி மற்றும் நிதிப் பெறுமதி குறைப்பு அந்நாட்டின் பொரளாதாரத்திற்கு அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளமையினால் அது இலங்கைத் தேயிலை ஏற்றுமதிக்கு நேரடி பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. ஏற்றுமதி யாளரினால் பொதியிடப்பட்ட தேயிலைக்கான கட்டளைகளைக் குறைப்பதற்கு உள்நாட்டு பொதியிடலுக்காகத் தேயிலைத் தொகை இறக்குமதியினை அதிகரிப்பதற்கும் இது காரணமாக அமைந்துள்ளது. நாட்டில் காணப்படும் நெருக்கடி நிலைமை காரணமாக எதிர்வரும் ஆண்டுகளில் யுக்ரேனுக்கு மேற்கொள்ளப்படும் தேயிலை ஏற்றுமதி குறைவினை எதிர்பாாக்க முடியும்.

### 2.6.1.3. அசர்பைஜான்

உபசரனை தற்கருமத்தின் குறியீடாக அசர்பைஜான் கருதப்படுவதுடன் அங்கு தேயிலை சம்பிரதாயம் காணப்படுகினறது. விருந்தாளி வீட்டிற்கு வரும் போது முதலில்



தேநீர் வழங்குவது அவர்களது பழக்கமாகும். அசர்பைஜான் நாட்டைச் சேர்ந்தவர் நாளொன்றுக்கு அண்ணளவாக 10 – 15 தேநீர் கோப்பைகளை அருந்துவதுடன் அசர்பைஜான் வருடாந்த தேயிலை விற்பனை சுமார் 9,000 மெ.தொன் அளவு என்பதுடன் எல்லைப் பிரதேசம் ஊடாக பிரதானமாக ரஷ்யா, ஈரான், ஜோர்ஜியா மற்றும் துருக்கி போன்ற நாடுகளுக்கு அண்ணளவாக 2,000 மெ.தொன் விற்பனை செய்யப்படுவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. புள்ளிவிபரக் குழுவிற்கமைய அசர்பைஜான் குடும்பம் ஒன்றின் வருடாந்த தேயிலை நுகர்ச்சி 700 கிராம் தொடக்கம் ஒரு கிலோ வரையானதென மதிப்பீடு செய்யப்பட்ட ள்ளதுடன், இதன்மூலம் தெளிவாகுவது மாதாந்த சாதாரண தனிநபர் தேயிலைப் பயன்பாடு சுமார் 145 கிராமாகும்.

இலங்கைச் சுங்கப் புள்ளி விபரங்களுக்கமைய 2013 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவில் 95% தொகை அடிப்படையில் காணப்படுவதுடன், 5% பொதி அடிப்படையில் ஆகும். 2013 ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதியில் 1% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

### 2.6.1.4. கசகஸ்தான்



கசகஸ்தான் சந்தையில் விற்பனை செய்யப்படும் மொத்தத் தேயிலை அளவு 26000 – 29000 மெ.தொன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பொதுநலவாய சபையின் ஏனைய சுயாதீன நாடுகளை விட மாற்றமான முறையில் இந்நாட்டில் பாலுடன் தேநீர் அருந்தும் பழக்கங்கள் காணப்படுகின்றன. கசகஸ்தானில் தனிநபர் தேயிலை நுகர்ச்சி சுமார் 1.8 கிலோகிராம் மட்டத்தில் காணப்படுகின்றது. கசகஸ்தானில் உற்சாக மிக்க சந்தை கணிசமாகத் தேநீரில் தங்கியுள்ளதுடன், அந்நாட்டின் கலாச்சாரம் மற்றும் சம்பிரதாயம் இலகுவில் மாற்றங்களுக்கு உட்படுகின்றமையினால் தேயிலைக்கான கோரிக்கை நீண்டகாலமாக பேணப்படுகிற்னது.

இலங்கைச் சுங்கப் புள்ளி விபரங்களுக்கமைய கசகஸ்தானில் 2013 ஆம் ஆண்டில் சுமார் இலங்கைத் தேயிலை 867,949 கிலோகிராம் அந்நாட்டினால் இறக்குமதி செய்யப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டிற்கு இணைவாக 12% குறைவினைக் காண்பிக்கின்றது. கசகஸ்தான் தேயிலைச் சந்தையில் பிரதானமாக அமுலில் இருப்பது சீ.ரி.சீ தேயிலை ஏற்றுமதியில் சுமார் 85□ இந்தியா மற்றும் கென்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. மொத்தச் சந்தை அளவில் அண்ணளவாக 6% பச்சைத் தேயிலை ஆகும்.

### 2.6.1.5. உஸ்பகிஸ்தான்



உஸ்பகிஸ்தான் பிரதானமாக பச்சைத் தேயிலை சந்தை என்பதுடன் வருடாந்த உள்நாட்டுத் தேயிலை விற்பனை அண்ணனவாக 30,000 மெ.தொன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை சுங்க வரித் திணைக்கள புள்ளிவிபரங்களுக்கமைய இலங்கை 2013 ஆம் ஆண்டில் 1,259,839 கிலோ கிராம் அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதுடன் 2012 உடன் ஒப்பிட செய்யும் போது இது 35% குறைவாகும். உஸ்பகிஸ்தான் சந்தையில் பச்சைத் தேயிலைக்கான கூடுதலான விருப்பம் காண்பிக்கப்படுகின்றமை இதற்கு பிரதான காணரமாகும்.

### 2.6.1.6. கிரிக்கிஸ்தான்



கிரிக்கிஸ்தான் பிரதானமாக கருந்தேயிலை அருந்தும் நாடு என்பதுடன் அந்நாட்டின் மக்கள் நடுத்தரமான நிறம் (சிவப்பு நிறம்) உற்சாகமாகவும் கருந்தேயிலையில் வேறு எதனையும் ஒன்றிணைக்காது அருந்துவதற்கும் விருப்பம் கொண்டுள்ளனர். சந்தை மூலங்கள் குறிப்பிடப்பட்டவாறு மதிப்பிடப்பட்ட சந்தையில் உண்மையான தேயிலை நுகர்ச்சி 4,000 மெ.தொன்னாகக். 5.5 மில்லியன் சனத்தொகை கொண்ட இந்நாட்டில் தனிநபர் தேயிலை நுகர்ச்சி சுமார் 700 கிராமாகும்.

இலங்கை சுங்கப் புள்ளி விபரங்களுக்கமைய 2013ஆம் ஆண்டில் கிரிகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்படட நேரடித் தேயிலை ஏற்றுமதி 991,067 கிலோகிராம் என்பதுடன் 2012 ஆம் ஆண்டில் அவ்அளவு 1,014,460 ஆகக்

காணப்படுகின்றது. இதற்கமைய 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது தேயிலை ஏற்றுமதி 2% குறைவு 2013 ஆம் ஆண்டில் காண்பிக்கப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவில் அண்ணளவாக சுமார் 92% தேயிலை தொகை அடிப்படையில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் முன்னைய ஆண்டை விட தேயிலைப் பக்கட் ஏற்றுமதியில் 2% அதிகரிப்பு 2013 ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அத்துடன் கப்பலேற்றப்பட்ட தேயிலைப் பொதி ஏற்றுமதி பொதி 2013 ஆம் ஆண்டு 2012 ஆண்டை விட இரட்டிப்பாக அதிகரித்துக் காணப்பட்டது. பொதியிடப்படாத தேயிலை கிராமிய பிரதேசங்களில் விற்பனைக்காக வைத்திருப்பதுடன் தேயிலைப் பொதி மற்றும் சுவையூட்டப்பட்ட தேயிலைக்காக கூடுதலான கேள்விகள் காணப்படுவதாக பதியப்படவில்லை. பச்சைத் தேயிலைக்கான கூடுதலான கேள்விகள் காணப்படுவதோடு அத்தேயிலை ஏற்றுமதி அதிகரிப்புப் பதிவாகவில்லை. நாட்டின் பிரதான பச்சைத் தேயிலை விநியோகஸ்தர் சீனாவாகும்.

### 2.6.1.7. பேலரஸ்



தேயிலை இலாபகரமான மற்றும் சுகாதார பயன்கொண்ட பாணமாக பெலரஸ் மக்களுக்கு இடையே மிகவும் பிரபல்யம் அடைந்த பாணமாகும். 9.48 மில்லியன் மக்கள் வாழும் பெலரஸ்சில் வருடாந்த தேயிலை விற்பனை 8,000 மெ.தொன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், சுவையில் சுமார் 50% ரஷ்யா மற்றும் யுக்ரேன் எல்லைப் பிரதேசமாக நாட்டிற்கு விநியோகிக்கப் படுகின்றது.

இலங்கைச் சுங்கப் புள்ளி விபரங்களுக்கமைய இலங்கை 2013 ஆம் ஆண்டு 638,247 கிலோகிராம் நேரடியாக பெலரஸ்சிக்கு ஏற்றுமதி செய்துள்ளது. இலங்கையில் இருந்து அச்சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட 84% அளவிற்கு மேல் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலையாகும். (59 பொதி இடப்பட்ட 23% பொதி இடப்பட்ட 9% பச்சைத் தேயிலையாகும்) 2012 ஆம் ஆண்டை விட 2013 ஆம் ஆண்டில் 9.7% தேயிலை ஏற்றுமதியல் வீழ்ச்சி கண்டுள்ளது.

### 2.6.1.8. மொல்டோவா



சமீப காலத்தில் பொருளாதார அடிப்படையில் சிறிதளவு முன்னேற்றங்கள் காணப்பட்ட போதிலும் மொல்டோவா ஐரோப்பியாவில் உள்ள வறிய இராட்சியமாகும். வருடாந்த தேயிலைக்கான மொத்த சந்தை 2500 – 3500 மெ.தொன்னுக்கு இடைப்பட்டது என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் உண்மையான விற்பனையின் அடிப்படையினை நோக்கும் போது தனிநபர் தேயிலை நுகர்ச்சி 500 கிராம் ஆகும். கருந்தேயிலை மற்றும் பச்சைத் தேயிலை நுகர்வு 95.5% என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. சுவையூட்டப்பட்ட தேயிலை நுகர்ச்சி காணப்படுகின்ற போதிலும் இது மிகக்குறைந்த அளவே இருக்கின்றது. தேயிலைப் பொதிக்கான கேள்வி நகரப் பிரதேசங்களில் கிரமமாக விருத்தி அடைந்து செல்கின்றது. மொல்டோவாவிற்கு ஆனேகமாக தேயிலை விநியோகிப்பது யுக்ரேன் எல்லைப் பிரதேசம் ஊடாகவாகும். இலங்கைத் தேயிலை இங்கு மிகப்பிரபல்யமாக காணப்படுவதுடன் சகல விற்பனைப் பீடங்களிலும் இத்தேயிலை கணிசமான அளவு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுங்கப் புள்ளி விபரங்களுக்கமைய 2013 ஆம் ஆண்டில் இலங்கையினால் 271.361 கிலோ கிராம் இந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன் இதில் 48 பொதியிடப்பட்ட அளவிலும் 32% தேயிலைப் பொதியாகவும் 12% பச்சைத் தேயிலையாகவும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்தத் தேயிலை அளவு 321,320 கிலோ கிராம் என்பதுடன் இதற்கு முன்னைய ஆண்டில் மொல்டோவாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவை விட 16% குறைவு இதன் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.

### 2.6.1.9. டேக்மெனிஸ்டான்



டேக்மெனிஸ்ரானின் வருடாந்த தேயிலை நுகர்ச்சி 8000 மெற்றிக் தொன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் வருடாந்த தனிநபர் தேயிலை நுகர்ச்சி 1.5 கிலோ கிராம் ஆகும். டெக்மெனிஸ்டானில் பிரதானமாக பச்சைத் தேயிலை சந்தைக்

காணப்படுவதுடன் அத் தேயிலை விநியோகம் சீனா ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. ஐக்கிய அரபு எமிர் இராட்சியம், ஈரான், யோர்ஜியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து அந்நாட்டிற்கு கருந்தேயிலை இறக்குமதி செய்யப்படுகின்றது. குறைந்த விலை காரணமாக ஈரானில் கருந்தேயிலை இந்நாட்டில் பிரபல்யம் அடைந்துள்ளது. பச்சைத் தேயிலை நுகர்ச்சி கிராமிய பிரதேசங்களில் இடம் பெறுவதுடன் கருந்தேயிலை நுகர்ச்சி கூடுதலாக நகரப் பிரதேசங்களிலேயே காணப்படுகின்றன.

இலங்கை சுங்கப் புள்ளி விபரங்களுக்கமைய இலங்கையினால் 2012 மற்றும் 2013 ஆண்டு களில் டெக்மெனிஸ்தானுக்கு நேரடியாக ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள தேயிலை அளவு தொடராக 46,151 கிலோ கிராம் மற்றும் 130,435 கிலோகிராம் ஆகும். இதற்கமைய முன்னைய ஆண்டை விட 65% குறைவு 2013 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் சகல ஏற்றுமதிகளும் பெறுமதி சேர்க்கப்பட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட இலங்கைத் தேயிலை பொதி மற்றும் பைகள் ஏற்றுமதிக்கான வாய்ப்புக்கள் காணப்பட்டதாக தெளிவாகின்றது.

### 2.6.1.10. தஜிகிஸ்தான்

7 மில்லியன் சனத்தொகையினைக் கொண்ட தஜிகிஸ்தானில் வருடாந்த சாதாரண தேயிலை வர்த்தகம் 6,000 மெற்றிக் தொன் தொடக்கம் 7,000 திற்கு இடைப்பட்ட பரம்பல்



காணப்படுவதாக மதிப்பீடு செய்யப் படுகின்றது. பொதுநலவாய சுயாதீன இராட்சியங்களுக்கிடையே மிகக்குறைந்த தனிநபர் மொத்த தேசிய உற்பத்தி தஜிகிஸ்தானில் காணப்படுகின்றது. சந்தை மூலங்கள் மூலம் வெளியிடப்பட்டவாறு கொள்வனவு இயலுமைகளில் பின்னடைந்த மட்டத்தில் காணப்படுகின்றமையினால் கூடுதலான கேள்விகள் குறைந்த விலையிலான தேயிலைக்கே காணப்படுகின்றது.

இலங்கை சுங்கப் புள்ளி விரங்களுக்கமைய 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் இலங்கையிலிருந்து அந்நாட்டிற்கு மேற்கொள்ள பட்ட நேரடி ஏற்றுமதி அளவு தொடராக 41,013 கிலோ கிராம் மற்றும் 30,663 கிலோ கிராமாகும் 2013 ஆம் ஆண்டில் தேயிலைத் தொகை ஏற்றுமதி இடம் பெறவில்லை என்பதுடன் கப்பல் ஏற்றப்பட்ட பொதியிடப்பட்ட ஏற்றுமதி மொத்த ஏற்றுமதியில் 75% மாகும் 2012 ஆம் ஆண்டில் அவ்வளவு 32% மாகக் காணப்பட்டது. இதனால் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கையின் மொத்த தேயிலை இறக்குமதி 25% தினால் வீழ்ச்சி கண்டது.

### 2.6.2. மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க சந்தை

2013 ஆம் ஆண்டில் இலங்கையினால் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க வலயத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவு 172,072,205 கிலோ கிராம் என்பதுடன் 2012 ஆம் ஆண்டின் அக்காலப்பகுதியல் அவ்வலயத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவு 170,307,012 கிலோ கிராம் ஆகும். (மீள் ஏற்றுமதி உட்பட) ஏற்றுமதி அதிகரிப்பு 1,765,193 கிலோ கிராம் (1%) ஆகக் காணப்பட்ட போதிலும் வலயத்தின் அநேகமான நாடுகளில் காணப்பட்ட சூழ்நிலைகள் தொடர்பாக கருத்தில் கொள்ளும் போது இது பாரிய வெற்றியாகும்.

2013 ஆம் ஆண்டில் இலங்கையில் மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் சுமார் 53.83% மத்திய கிழக்கு உட்பட வட ஆபிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் விசேடமாக தாழ்ந்த பிரதேசங்களில் வளரும் தேயிலை வகைகளுக்காக கூடுதலான விற்பனை வாயப்புக்களை ஏற்படுத்தி இலங்கை தேயிலைக்கான பாரிய சந்தை வாய்ப்புக்கள் இவ்வலயத்தில் காணப்பட்டது.

அட்டவனை 2.18 மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நாடுகளுக்கு இலங்கைத் தேயிலை ஏற்றுமதி தொடர்பாக நாடுகளுக்கு அமைவான ஒப்பீடுகள்

| நாடுகள் | 2012 (கி.கிரா) | 2013 (கி.கிரா) | வித்தியாசம் (கி.கிரா) | வளர்ச்சி % |
|---|---|---|---|---|
| ஈரான் | 41,043,481 | 38,416,383 | -2,627,098 | -6.4 |
| துருக்கி | 23,163,115 | 32,202,299 | 9,039,184 | 39.0 |
| ஈராக் | 23,488,487 | 22,266,861 | -1,221,626 | -5.2 |
| சிரியா | 24,741,383 | 21,058,862 | -3,682,521 | -14.9 |
| குவைத் | 7,402,233 | 16,021,562 | 8,619,329 | 116.4 |
| ஐக்கிய அரபு எமிர் இராட்சியம் | 11,887,358 | 17,531,254 | 5,643,896 | 47.5 |
| யோர்தான் | 9,434,035 | 7,632,455 | -1,801,580 | -19.1 |
| லிபியா | 16,514,196 | 6,520,837 | -9,993,359 | -60.5 |
| சவுதி அரேபியா | 4,698970 | 3,519,977 | -1,178,993 | -25.1 |
| லெபனான் | 2,156,770 | 2,815,634 | 658,864 | 30.5 |
| எகிப்து | 3,800,074 | 2,016,859 | -1,783,215 | -46.9 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஏனையவை | 1,976,910 | 2,069,222 | 92,312 | 4.7 |
| மொத்தம் | 170,307,012 | 172,072,205 | 1,765,193 | 1.0 |

### 2.6.2.1. ஈரான்



கீழ் குறிப்பிடப்பட்ட பொருளாதார நிதி மற்றும் அரசியல் மாற்றங்கள் 2013 ஆம் ஆண்டில் இலங்கை மற்றும் ஈரானுக்கிடையிலான தேயிலை சந்தை தொடர்பில் அளுத்தங்களை ஏற்படுத்தின.

ஈரான் நிதித் துறையில் தங்க ஏற்றுமதி மற்றும் கப்பல் துறையினை இலக்காகக் கொண்டு ஐக்கிய அரபு எமிர் இராட்சியத்தினால் புதிய தடைகள் விதிக்கப்பட்டன. 2013 ஆம் ஆண்டின் நடுப்பகுதி தொடக்கம் அனேகமாக சர்வதேச கப்பல் கம்பனிகள் ஈரானுக்கு நேரடியாக பிரயாணங்களை இடைநிறுத்தின.

ஐக்கிய அரபு எமிர் இராட்சியம் மற்றும் அ.யூ இனால் ஈரானில் பொருளாதார தடை பலப்படுத்தப்பட்டிருந்த நிலையில் கருத்து முரன்பாட்டிற்கு உட்பட ஈரான் அனு செயற்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஈரான் மற்றும் 5 + 1 குழுக்களுக்கிடையே தொடர்ச்சியான காணப்பட்டது. ஈரானால் யுரேனியம் செறிவூட்டல் பயன்பாட்டினைக் குறைக்க இணங்கியதனைத் தொடர்ந்து ஐக்கிய அரபு எமிர் இராட்சியம் / ஏ.யூ. மூலம் 06 மாத காலங்களுக்குப் பொருளாதார தடைகளை தகர்க்க இணங்கியதனைத் தொடர்ந்து அச்செயற்பாடுகள் 2013 நவம்பர் மாதத்தில் இடைநிறுத்தப்பட்டன.

2013 ஆம் ஆண்டில் ஈரானின் புதிய ஜனாதிபதி நியமனம் அந்நாட்டின் பொருளாதாரத்தைப் போன்று ஏனைய நாடுகளுடன் காணப்பட்ட அரசியல் அரசியல் உறவுகள் போன்றவைகள் மீது வெற்றிகரமாக மாற்றங்கள் ஏற்பட்டன. ஈரான் மற்றும் ஐக்கிய அரபு எமிர் இராட்சிய இரு வெளியுறவு அமைச்சர்கள் நியுயோர்க் நகரில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மாநாட்டின் போது இடம் பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு அவ்விரு நாடுகளுக்கிடையேயும் உறவுகள் விருத்தியடைய காரணமாக அமைந்தது.

ஈராக் அரசினால் டொலருக்கு உத்தியோகபூர்வ பரிமாற்றல் விகிதாசாரமான IR 12,260 2013 ஜுலை மாதத்தில் இரத்து செய்யப்பட்டதுடன் IR 25, 560 புதிய விகிதாசாரம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பயனாக டொலரின் சந்தை விகிதாசாரம் 2013 நவம்பர் மாதமளவில் IR 360,000 தொடக்கம் IR 29,000 – 30,000 வரை விருத்தியடைந்தது.

இலங்கைத் தேயிலையை இறக்குமதி செய்யும் ஈரான் இறக்குமதியாளர்களுக்காக வங்கி வசதிகள் இன்மையினால் இலங்கை உற்பத்திகளில் விலைகள் அதிகரித்த மையினால் ஒரு சில வாடிக்கை யாளர்களுக்கு விலை குறைந்த ஏனைய தேயிலை வகைகளின் மீது கவனம் செலுத்த வேண்டி ஏற்பட்டது. ஈரானில் காணப்படும் தற்போதைய நிலைமையில் கென்யாத் தேயிலைக்காக சிறந்த சந்தர்ப்பங்கள் உருவாகின.

2013 ஆம் ஆண்டில் ஈரானில் உள்நாட்டுத் தேயிலை உற்பத்தி 15,000 மெற்றிக் தொன் என ஐக்கிய இராட்சியத்திற்கான சர்வதேச தேயிலை குழுவின் 2012 வருடாந்த புள்ளி விபரங்கள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள 100,000 க்கு மேற்பட்டோர் தேயிலை செய்கையில் ஈடுபட்டுள்ளமையினால் அறுவடை குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதிலும் அரசினால் தேயிலை செய்கையாளர்களுக்கு மானிய உதவி வழங்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றன.

70 மில்லியன் சனத்தொகை கொண்ட ஈரானின் வருடாந்த உள்நாட்டுத் தேயிலை நுகர்ச்சி 110,000 மெற்றிக் தொன்னுக்கு மேற்பட்ட மையினால் வருடாந்தம் அண்ணளவான தேயிலை சுமார் 100,000 மெற்றிக் தொன் ஈரான் இறக்குமதி செய்கின்றது. பொதியிடப்பட்ட தேயிலை இறக்குமதி மீது விதிக்கப்பட்டிருந்த வரையறைகள் மற்றும் தேயிலைத் தொகை இறக்குமதி மீது விதிக்கப்பட்டிருந்த 30% திற்கு மேற்பட்ட வரியினால் 40,000 மெற்றிக் தொன்னை விட மேற்பட்ட அளவு தேயிலை சட்ட விரேதமான முறையின் ஊடாக ஈரானுக்கு விநியோகிக்கப்படுகின்றது. வருடாந்தம் உரிய சட்ட விதிமுறைகளுக்கிணங்க இறக்குமதி செய்யப்படும் தேயிலை அளவு 60,000 – 65,000 இடைப்பட்டதாகும். நேரடி மற்றும் மறைமுக ஏற்றுமதியில் ஈடுபட்டு இலங்கை ஈரானில் தேயிலை சந்தையில் முன்னியாளராக மாற்றம் பெற்றுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து இந்தியா, கென்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள்

காணப்படுகின்றன. இது எவ்வாறாக இருப்பினும் 2013 ஆம் ஆண்டில் ஈரானின் தேயிலை சபையின் நிலையான தன்மையினைக் கட்டியெழுப்ப இந்தியாவிற்கு முடிந்தது.

இலங்கை சுங்கத் திணைக்களப் புள்ளி விபரங்களுக்கமைய 2013 ஆம் ஆண்டில் ஈரானினால் 38,416 மெற்றிக் தொன் தேயிலை இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் அக்காலப் பகுதிக்கு இணைவாக 2,627 மெற்றிக் தொன் தேயிலை இன்றேல் 6% குறைவு இதன் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை அவ் ஏற்றுமதி செலவில் அநேகமான தேயிலை அளவில் ஈரான் மற்றும் ஐக்கிய அரபு எமிர் இராட்சியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாக குறிப்பிட வேண்டும். ஈரானுக்குப் பொருளாதார தடைகள் விதிக்கப் பட்டுள்ளமையினால் மீள் ஏற்றுமதிக்காக இலங்கையிலிருந்து தேயிலை இறக்குமதி 50% தினால் குறைவடைந்தமை தெளிவாகின்றது. ஐக்கிய அரபு எமிர் இராட்சியப் பிரதி நிதிகள் ஊடாக தேயிலை கொள்வனவு செய்யப்பட்ட ஆனேமான ஈரான் இறக்குமதியாளர்கள் நேரடியாக இலங்கையிலிருந்து தேயிலை இறக்குமதி செய்யும் செயற்பாடுகளை ஆரம்பித்தனர்.

இது எவ்வாறாக இருப்பினும் 2013 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் ஈரானில் ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார முன்னேற்றங்கள் டுபாய் மீள் ஏற்றுமதி சந்தை மீது மாற்றங்களை ஏற்படுத்தின. 2013 இரண்டாம் காலப்பகுதியில் ஈரான் றியால் நிதி அலகு ஸ்திரத்தன்மைக்கு மாற்றம் பெற்றமையினால் ஈரானுக்கு மீள் ஏற்றுமதி செய்யும் வகையில் இலங்கையிலிருந்து ஆனேகமாக தேயிலை இறக்குமதி செய்ய டுபாய் தேயிலை சந்தை அங்கத்தவர்களுக்கு வாய்ப்புக்கள் காணப்படுகின்றது. இப்புதிய முன்னேற்றங்கள் காரணமாக 2013 ஆம் ஆண்டு இலங்கையினால் ஈராக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட நேரடித் தேயிலை ஏற்றுமதி அளவு குறைவடைந்தது.

### 2.6.2.2. துருக்கி



துருக்கி வலயம் சம்பிரதாயத் தேயிலை உற்பத்தியில் முன்னனியில் உள்ளது. உள்நாட்டு மூலங்களுக்கமைய வருடாந்தத் தேயிலை உற்பத்தி 170,000 மெற்றிக் தொன்னை தாண்டியுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச தேயிலைக் குழு துருக்கியின் தேயிலை உற்பத்தி தொடர்பாக குறைந்த புள்ளி விபரத்தைத் காண்பித்துள்ளதுடன் இது வருடாந்தம் மெற்றிக் தொன் 145,000 – 150,000 இடைப்பட்ட அளவாகும்.

சந்தை மூலங்களுக்கமைய வருடாந்தம் சட்ட ரீதியான முறையில் துருக்கிக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவு 8,000 மெற்றிக் தொன்னினால் குறைவடைந்தது. ஈரான் ,ஈராக் மற்றும் சிரியா சட்ட விரோதமான முறையில் துருக்கிக்குத் தேயிலை விநியோகம் பிரதனமாக கிழக்கு மற்றும் தென் எல்லை ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. சட்ட விரேதமாக துருக்கிக்கு விநியோகிக்கும் தேயிலை அளவு தொடர்பாக உரிய புள்ளி விபரங்கள் காணப்படாத போதிலும் ஐரேப்பியா மேற்பார்வையாளர்கள் தெரிவிக்கின்றவாறு இவ்அளவு சுமார் 30,000 மெற்றிக் தொன் ஆகும்.

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2013 ஆம் ஆண்டில் இலங்கையினால் துருக்கிக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 9,039 மெற்றிக் தொன் எனப்படும் 39% பாரிய அதிகரிப்புக் காணப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டில் துருக்கிக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவு 23,163 மெற்றிக் தொன் என்பதுடன் 2013 ஆம் ஆண்டில் இவ் அளவு 32,202 மெற்றிக் தொன் என்ற உயரிய பெறுமதியினை காண்பித்துள்ளது.

நாட்டில் கிழக்குப் பகுதியில் வாழும் அனேகமான துருக்கி வாடிக்கையாளர்கள் இலங்கைத் தேயிலைக்கு கூடுதலான கேள்வியினைக் காண்பிப்பதுடன் இது சட்ட விரேத தேயிலைச் சந்தைச் செயற்பாடுக ளுக்காகவும் காரணமாக அமைந்துள்ளது. சிரியாவில் உள்நாட்டுப் போர் காரணமாக அங்கு தேயிலை ஏற்றுமதியின் ஒரு பகுதி துருக்கி “மேசின்பீபோட்” ற்கு அனுப்பட்டுள்ளது. சந்தை மூலங்களுக்கமைய ஈரானுக்கு மீள் ஏற்றுமதிக்காக சிரியாவினால் இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை துருக்கி ஊடாக இறக்குமதி செய்யப்படுகின்றது. இதனால் துருக்கி வலயத்தில் இலங்கை தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் இரண்டாவது மிகப் பெரிய ஏற்றுமதியாளராகும் இது எவ்வாறாக இருப்பினும துருக்கிக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அனேகமாக இலங்கைத் தேயிலை சட்ட ரீதியில் அந்நாட்டிற்கு விநியோகிப்படுவதில்லை என இங்கு குறிப்பிடப்பட வேண்டும் துருக்கிக்கு ஏற்றுமதிக்காக அனுப்படும் இலங்கைத் தேயிலையின் கூடுலதான அளவு இறுதியில் அன்மித்த நாடுகளுக்கு அனுப்படுகின்றன.

### 2.6.2.3. ஈராக்

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஈராக் தேயிலை இறக்குமதிக்கான தடைகள் நீங்கியமையினால் அந்நாட்டில் நேரடி இறக்குமதி அதிகரித்தது. ஈராக் தொடர்ந்தும் தமது தேயிலைத் தேவையில் ஒரு பகுதி ஜோர்தான், குவைட், துருக்கி மற்றும் வட ஈராக்கில் இருந்து பெற்றுக் கொள்கின்றது. வர்த்தக மூலங்களுக்கமைய இந்நாட்டின் வருடாந்த தேயிலை இறக்குமதி 50,000 மெற்றிக் தொன்னை தாண்டியுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இலங்கைத் தேயிலை நேரடி ஏற்றுமதி ஊடாக ஈராக்கின் தேயிலை சந்தையில் 50% தை விட மேற்பட்ட அளவை எட்டுவதற்கு 2013 ஆம் ஆண்டில் இலங்கைக்கு முடிந்தது. அரச துறையினரால் தேயிலை ஏற்றுமதி இடைநிறுத்தப் பட்டதனைத் தொடர்ந்து இந்திய விநியோகஸ்தர்களுக்கு தமது சந்தை பங்குகளைப் பேணுவதற்கு முடியாதுள்ளது. இந்தியா சுத்தமான தேயிலைக்குப் பதிலாக பல்கலவைத் தேயிலை விநியோகிப்பதாக அநேகமான தனியார் வர்த்தகர்கள் விளக்கம் பெற்றுள்ளதுடன் இதனால் இவர்கள் இந்தியாவின் உடனான கொள்வனவினைக் குறைக்கக் காரணமாக அமைந்துள்ளது. இதற்கமைய இலங்கைத் தேயிலைக்கு சமமான அடிப்படையில் விலை குறைந்த வியட்நாம் தேயிலை ஈராக் சந்தையில் இலங்கைத் தேயிலையின் தரத்திற்கமைய தொடர்ந்தும் சவாலாகக் காணப்படுகின்றது. உள்நாட்டு வர்த்தகர்கள் விலைப் பயனைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இலங்கைத் தேயிலையுடன் கலப்பதற்காக சில வேளைகளில் வியட்நாம் தேயிலையினை இறக்குமதி செய்கின்றனர்.



அந்நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கிணைவாக வட ஈராக்கின் (குருதிஸ்தான் பிரதேசத்தில்) உயரிய பொருளாதார வரட்சி பதிவாகியுள்ளது வட ஈராக் மற்றும் துருக்கிக்கிடையில் விருத்தியடைந்துள்ள வர்த்தக உறவுகள் எல்லைப் பிரதேசம் ஊடாக இடம் பெறும் வர்த்தகம் பலம் பெற்றுள்ளதுடன் இது தேயிலை வர்த்தகத்திற்காகவும் பயன்மிக்கதாக அமைந்துள்ளது. கூடுதலான இலங்கைத் தேயிலை குருதிஸ்தான் பிரதேசம் ஊடாக துருக்கிக்கு விநியோகிக்கப்படுகின்றது.

இலங்கை சுங்கத் திணைக்கள புள்ளி விபரங்களுக்கமைய இலங்கையினால் 2013 ஆம் ஆண்டில் 22,267 மெ.தொ ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன் 2012 ஆம் ஆண்டில் இந்நாட்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவு 23,488 மெ.தொன்னுக்கு இணைவாக 1,222 மெ.தொன் அதவாது 5% குறைவு 2013 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளது.

ஈராக்கில் இலங்கைத் தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தமையினால் ஈராக் பொறுப்பாளர் களினால் 2013 ஆம் ஆண்டு ஆரம்பம் தொடக்கம் நீண்ட காலமாக இலங்கையில் அனுப்பப்பட்ட தேயிலைக் கொள்கலன்களைத் தேக்கி வைக்க நடவடிக்கை எடுத்தனர். கௌரவ கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் உள்ளிட்ட இலங்கை வர்த்தகப் பிரதிநிதிகள் குழு பக்தாத் நகரில் மேற்கொண்ட விஜயம் ஈராக்கின் உணவு தரக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களின் கொழும்பு விஜயமும் இப்பிரச்சனைகளுக்கு தீர்வாக அமைந்துள்ளது. தரக்குறைவான தேயிலை இலங்கையில் ஈராக்கிற்கு அனுப்படுவது தொடர்பில் ஈராக் பொறுப்பாளரினால் அதிர்ப்தி தெரிவிக்கப் பட்டதுடன் அனுப்பப்பட்ட தேயிலை தொடர்பில் பூரண அனுசரனை வழங்கப்பட்ட இலங்கைத் தேயிலை சபையின் தலையூட்டுடன் ஈராக் மக்களின் திருப்தியினை ஒழிக்க முடிந்தது. ஈராக்கிற்கு தேயிலை ஏற்றுமதி மற்றும் அது தொடர்பிலான முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களாக அமைந்தது முன் பொதியிடப்பட்ட தன்மையிலானதே கப்பலேற்றப்படுவதாகத் தொகை அடிப்படையிலான ஏற்றுமதி 5% விட குறைந்த அளவு காணப்படுகின்றது.

### 2.6.2.4. ஐக்கிய அரபு எமிர் இராட்சியம்

வலயத்தின் நாடான டுபாயில் காணப்பட்ட தேயிலை மீள் ஏற்றுமதி இயலுமைகள் தேயிலைக் கலப்பு மற்றும் பொதியிடலுக்காக Jabel Ali சுதந்திர வர்த்தக வலயத்திற்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் காரணமாக ஐக்கிய அரபு எமிர் இராட்சியத்தின் பிரதான தேயிலை இறக்குமதியாளராக மாற்றம் பெற்றுள்ளது. 8 மில்லியன் என்ற எமரேல் சனத்தொகையில் வருடாந்த தேயிலை நுகர்ச்சி 6-7 மில்லியன் கிலோ வரையில் நுகர்ந்த போதிலும் மீள் ஏற்றுமதி வர்த்தகம் காரணமாக அங்கு இறக்குமதி அளவு முன்னரை விட இரட்டிப்பாக அதிகரித்துள்ளது. வலயத்தில் ஏனைய சந்தைகளில் காணப்படும் அரசியல் ஸ்திரமற்ற நிலைமை வரி விதிப்பு



போன்றவையல்லாத பிரச்சினைகள் டுபாய் மீள் ஏற்றுமதி சந்தை மீது பல ஆண்டுகளாக சிறந்த முறையில் காணப்பட்டது. ஈரான், ஐக்கிய அரபு எமிர் இராட்சியத்தின் டுபாய்த் தேயிலை சந்தையின் மிகப் பெரிய கொள்வனவாளர் என்பதுடன் சவுதி அரேபியா, ரஷ்யா, ஈராக் ஏனைய மத்திய கிழக்கு நாடுகளின் மீள் ஏற்றுமதி வர்த்தகத்தின் குறிப்பிடத்தக்களவு கொள்வனவுக்காக பங்களிப்புக்கள் வழங்கப் பட்டன.

ஐக்கிய அரபு எமிர் இராட்சியம், ஈரான் மீள் ஏற்றுமதி சந்தை தொடர்பில் ஈரானுக்கு விதிக்கப்பட்டிருந்த சர்வதேச தடைகள் மீட்கப்பட்டிருந்தமையினால் 2013 ஆம் ஆண்டு ஐக்கிய அரபு எமிர் இராட்சியம் ஏற்றுமதி செய்திருந்த இலங்கைத் தேயிலை அளவு அதிகரித்தது. 2013 ஆம் ஆண்டில் 17,531 மெ.தொ தேயிலை அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய முடிந்ததுடன இது 2012 ஆம் ஆண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட 11,887 மெ.தொ தேயிலையுடன் ஒப்பீடு செய்யும் போது 5,644 மெ.தொன் அதவாது 47% அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

2013 ஜூன் மாதத்தின் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டதனைப் போன்று ஈரானின் அனுவாயுதச் செயற்திட்டம் தொடர்பில் எட்டப்பட்ட ஜெனிவா இணக்கப்பாடு ஈரான் மாத்திரமன்றி ஐக்கிய அரபு எமிர் இராட்சியத்தின் மீள் ஏற்றுமதிச் சந்தை மீது சிறந்த முன்னேற்றங்கள் காணப்பட்டன. அமெரிக்க டொலருக்கு இணைவாக ஈரான் ரியாலின் பெறுமதி அதிகரிப்பு இன்றேல் நிலையாயகக் காணப்பட்டமையினால் ஐக்கிய அரபு எமிர் இராட்சியத்தின் தேயிலை வர்த்தகர்களுக்கு ஈரானுக்கு கூடுலதான தேயிலை அளவினை அனுப்புவதற்காக பாரிய உதவியாக அமைந்துள்ளதுடன் இதனால் 2013 ஆம் ஆண்டு கூடுதலான தேயிலை அளவினை ஐக்கிய அரபு எமிர் இராட்சியத்திற்கு அனுப்ப இலங்கைக்கு முடிந்துள்ளது.

### 2.6.2.5. சிரியா

அரசு மற்றும் எதிர்த் தரப்பு ஆகிய இரு தரப்பினருக்கும் வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப் பெற்றதனைத் தொடர்ந்து 2013 ஆம் ஆண்டில் சிரியா அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் தீவிரம் அடைந்தமையினால் யுத்த களமாக மாற்றம் பெற்றது. அந்நாட்டின் உள்நாட்டுப் போர்



காரணமாக 2013 ஆம் ஆண்டு இறுதியில் 7 மில்லியனுக்கு மேற்பட்ட சிரிய மக்கள் இடம் பெயர்ந்துள்ளதுடன் 120,000 மேற்பட்ட எண்ணிக்கையினர் கொலை செய்யப்பட்டனர். மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் சிரிய பவுனின் உத்தியோகபூர்வ பரிமாற்றல் விகிதாசாரம் 2-3 வரை மறுசீரமைக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க டொலர் 47.50 சிரிய பவுன் 2013 ஆம் இறுதியில் ஒரு டொலருக்கு 104.0 சிரிய பவுனாக மாற்றம் பெற்றது. வெளிநாட்டு நிதித் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்ய அந்நாட்டிற்கு முடியாமையினால் திறந்த சந்தை விகிதாசாரம் 200 – 300 இடைப்பட்ட பரம்பலில் தளம்பலடைந்தது.

சகல பொருட்களும் உள்ளக ரீதியில் விநியோக செயற்பாடுகளுக்கு உள்நாட்டுப் போரினால் பாதிப்புக்கள் ஏற்பட்டதுடன் இதன் பயனாக 2013 ஆம் ஆண்டில் சிரியா தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தது. வட சிரியாவிற்காக மேற்கொள்ளப்படும் தேயிலை மீள் ஏற்றுமதியில் யுத்தம் காரணமாக பாரியளவில் பாதிப்புக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவினைக் குறைப்பதனைப் போன்று மக்களின் ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்ளும் நோக்கடன் அரசினால் தேயிலை உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்காக மானிய உதவிகள் வழங்கப்பட்டன.

சிரியா சந்தையின் 2/3 பகுதி உரிமையினைக் கொண்டுள்ள தேயிலை அந்நாட்டின் மிகவும் பிரபல்யமான உட்சாகம் மிக்க பாணமாக மாற்றம் பெற்றுள்ளதுடன் கோப்பி மற்றும் மோட்டி மூலிகைப்பானம் ஆகிய பாண வகைகளை தொடர்ந்து சந்தையில் பிரபல்ய உள்நாட்டு நுகர்ச்சியினைப் போன்று வட எல்லை ஊடாக ஈராக்கிற்கு மற்றும் துருக்கிக்கு மீள் ஏற்றுமதி செய்யும் வகையில் சிரியா தேயிலையை இறக்குமதி செய்கின்றது. அந்நாட்டின் வருடாந்த தேயிலை இறக்குமதி 28,000 – 30,000 க்கு இடைப்பட்டதாக அமைகின்றது. ஐக்கிய இராட்சியம் சர்வதேச தேயிலைக் குழு புள்ளி விபரங்களுக்கமைய சிரியாவினால் 2012 ஆம் ஆண்டில் 28,000 மெ.தொன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக பதிவாகியுள்ளது.

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் புள்ளி விபரங்களுக்கமைய 2013 ஆம் ஆண்டில் இலங்கையினால் 21,059 மெ.தொன் சிரியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் அக்காலப் பகுதியில் அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட

தேயிலை 24,741 மெ.தொன்னுடன் ஒப்பீடு செய்யும் போது 3,683 அதாவது 15% தினால் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தமை இதன் மூலம் காண்பிக்கப்பட்டிருந்தது. சிரியாவில் யுத்த நிலைமைகள் தீவிரம் அடைந்த மையினால் வர்த்தகர்களுக்கு சுதந்திரமாக நாட்டில் தேயிலை விநியோக்க முடியாமை சுதந்திரமாக நிதி சேகரிக்க முடியாமையினைப் போன்று ஈரான் எல்லை ஊடாக வர்த்தகத்தில் ஈடுபட்டமை அந்நாட்டின் தேயிலை சந்தை மீது பாரிய அளுத்தங்களை ஏற்படுத்தின.

### 2.6.2.6. குவைத்

குவைத்தின் உள்நாட்டுத் தேயிலைப் பயன்பாடு ஒரு வருடத்திற்கு 3,000 மெ.தொன் என மதிப்பிடு செய்யப்பட்டுள்ள போதிலும் ஈராக்கிற்கான தேயிலை விநியோகம் இடம் பெறுவதினால் சகல சந்தர்ப்பத்திலும் தேயிலை கூடுதலான அளவு அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 2008 ஆம் ஆண்டு தொடக்கம் குவைத் ஈராக்கிற்கு தேயிலை விநியோகத்தை ஆரம்பித்ததுடன் அது மொத்த இறக்குமதிகளை அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்தது. ஈரான், ஈராக் ஆகிய இரு நாடுகளுக்கும் இலங்கைத் தேயிலைக்கு கூடுதலான ஆர்வம் காண்பித்தமையினால் குவைத்திலிருந்து தேயிலை ஏற்றுமதி செயற்பாட்டில் பிரதான விநியோகஸ்தராக இலங்கை காணப்பட்டது. ஐக்கிய இராட்சிய சர்வதேச தேயிலைக் குழு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு 2008 ஆம் தொடக்கம் குவைத்தின் வருடாந்த சாதாரன தேயிலை இறக்குமதி 5,000 மொ.தெ. – 10,000 வரை அதிகரித்தது. 2011 ஆம் ஆண்டில் 8,500 மெ.தொ அந்நாட்டினால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன் 2012 ஆம் ஆண்டில் அவ்வளவு 7,050 மெ.தொன் வரை வீழ்ச்சியடைந்தது.

2013 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து குவைத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவு 16,021 மெ.தொன் ஆகும். 2012 ஆம் ஆண்டில் அந்நாட்டிற்கு அனுப்பப்பட்ட தேயிலை அளவு 7,402 மெ.தொன் ஆகும். இது 2013 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவின் அதிகரிப்பு 8,619 மெ.தொன் அதவாது 116□ அதிகரிப்பாகும். ஈராக்குடன் மீள் ஏற்றுமதி விரிவுபடுத்தப்பட்டதைத் தொடர்ந்து கடந்த ஆண்டில் குவைத்திற்கு இலங்கைத் தேயிலை ஏற்றுமதி அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்தது.

### 2.6.2.7. யோர்தான்



இலங்கைத் தேயிலையினை ஈராக்கிற்கு ஏற்றுமதி செய்யும் போது குறிப்பிட்ட காலம் யோர்தான் பிரதான பரிமாற்றல் மத்திய நிலையமாக காணப்பட்டது. இருப்பினும் ஈராக்கின் நேரடி இறக்குமதி அதிகரிப்பு குவைத்திற்கான மீள் ஏற்றுமதி மத்திய நிலையமாகக் காணப் பட்டதனைத் தொடர்ந்து கிரமமாக இந்நிலை வீழ்ச்சியடைந்தது. இச் சிறிய சந்தையில் பிரதான விநியோகஸ்தரான இலங்கை (70□) எகிப்து (15□) மற்றும் சவுதி அரேபியா (5□) என்பதுடன் வருடாந்த வர்த்தகம் 5000 – 6000 மொ. தொன்னுக்கு இடைப்பட்டது என மதிப்பீடு செய்யப்பட்டது.

இலங்கையினால் யோர்தானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை அளவின் தொடர்ந்து குவைத் சந்தைக்கு விநியோகிக்கும் தேயிலை அளவு குறிப்பிட்டளவு அடங்கியுள்ளது. இருப்பினும் குவைத் சவுதி அரேபியாவில் இறக்குமதி செய்யும் தேயிலை பிரதானமாக உள்நாட்டுப் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப் படுகின்றது. 2013 ஆம் ஆண்டு யோர்தானுக்கு 7,632 மெ.தொன் ஏற்றுமதி செய்யப்பட்டு ள்ளதுடன் அது 2012 ஆம் ஆண்டு அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட 9,434 மெ.தொன்னை விட 1,802 மெற்றிக் தொன்னினால் அதவாது 19□ குறைவினைக் காண்பிக்கின்றது. ஈராக்கிற்கு குவைத் மீள் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஏற்பட்ட விருத்தி யோர்தானுக்கு இலங்கையிலிருந்து அனுப்பும் தேயிலையின் அளவு குறைவடைவதற்கு காரணமாக அமைந்ததாக நம்பப்படுகின்றது.

### 2.6.2.8 லிபியா



சுமார் 06 மில்லியன் சனத்தொகை கொண்ட லிபியாவின் வருடாந்த தேயிலை நுகர்ச்சி 9 – 10 மில்லியன் கிலோ என மதிப்பீடு செய்யப்படுகின்றது. சந்தை மூலங்களுக்கமைய சலுகை விலைக்கு லிபியாவிற்கு விநியோகிக்கும் தேயிலை அண்மித்த நாடுகளுக்கு விற்பனை செய்த போதிலும் எல்லைப் பிரதேசம் ஊடாக மேற்கொள்ளும் வர்த்தகம் எந்தளவு என வெளிவரவில்லை. இது குறைந்த வருமானம்

பெறும் லிபியா மக்களுக்ககு மேலதிக வருமானத்தை உழைத்துத் தரக்கூடிய சட்ட விரேத வர்த்தமான மாற்றம் பெற்றுள்ளது. ஆயுதம் ஏந்திய குழுக்கள் மற்றும் அரச இராணுவங்களுக்கிடையே தொடர்ந்து ஏற்படும் மோதல்கள் காரணமாக நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் பாரிய பிரச்சினைகள் உருவாகியுள்ள சட்டம் மற்றும் சமாதனத்தைப் பேணுவதற்கு அரசாங்கம் தவறியுள்ளமை அந்நாட்டின் பொருளதாரத்திற்கு பாதிப்புக்களை ஏற்படுத்தி யுள்ளன.

இலங்கையினால் 2012 ஆம் ஆண்டில் லிபியாவிற்கு 16,514 மெ .தொன் தேயிலை அளவு ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் சிலவேளைகளில் அது இலங்கையிலிருந்து லிபியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாக பதிவாகியுள்ள கூடுதலான தேயிலை அளவாக இருக்க முடியும். இது எவ்வாறாக இருப்பினும் 2013 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து லிபியாவிற்கு ஏற்றுமதி செய்யவிருந்தது 6,521 மெ.தொன் என்பதுடன் அது 9,993 மெ.தொன் அதவாது 61% வீழ்ச்சியாகும். லிபியாவின் தேயிலை இறக்குமதி முறை முறையற்ற நிலையில் காணப்பட்டதுடன் சகல சந்தர்ப்பங்களிலும் கூடுதலான அளவு இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னர் மீளக் குறைந்த அளவு இறக்குமதி செய்வதற்குரிய நிலைமை காணப்பட்டது.

### 2.6.2.9. சவுதி அரேபியா



வளைகுடாவில் மிகப் பெரிய நாடாக சவுதி அரேபியா கருத்தப்படுவதுடன் வளை குடாவில் உள்ள ஆறு நாடுகளில் மிக்க கூடுதலான தேயிலை நுகர்ச்சி சவுதி அரேபியாவிலேயே காணப்படுகின்றது. அறிக்கைகளுக்கமைய இவ் அரசாங்கம் ஆண்டொண்றிற்கு 30,000 மெ.தொன் தேயிலை இறக்குமதி செய்வதுடன் இதில் 29,000 மெ.தொன் உள்நாட்டு நுகர்ச்சிகாக பயன்படுகின்றது. 1,000 மெ.தொன் மீள் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. மக்களிற்கிடையே மிகவும் பிரபல்ய பாணமான தேயிலை நுகர்ச்சி இந்த அளவு பிரபல்யம் அடைவதற்காக சமூக மற்றும் சமயக் காரணிகள் முக்கியமாக அமைந்தன

இலங்கைச் சுங்கத் திணைக்களப் புள்ளி விபரங்களுக்கமைய இலங்கை 2013 ஆம் ஆண்டில் 3,520 மெ.தொன் சவுதிச் சந்தைக்கு ஏற்றுமதி செய்துள்ளதுடன் இது 2012 ஆம் ஆண்டில் அந்நாட்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட 4,693 மெ. தொன் அளவுடன் ஒப்பீடு செய்யும் போது 1,179 மெ.தொன் எனப்படும் 29% குறைவாகும். சவுதி கொள்வனவாளர்கள் விலைக் காரணிகள் மீது தீவிர கவனத்துடன் இருப்பதுடன் அரசினால் தேயிலை ஏற்றுமதி குறைவடைவதற்காக இது காரணமாக அமைந்துள்ளது.

சவுதிச் சந்தை தொடர்ந்தும் இலங்கைத் தேயிலையினை இறக்குமதி செய்யும் தனியான மிகப் பெரிய ஏற்றுமதியாளர் Rabea தேயிலை நாம உரிமையாளரான எம் / பெய்சான் தேயிலைக் கம்பனியாகும். சவுதி அரசிற்கு இலங்கை தேயிலை ஏற்றுமதியின் தொகை அடிப்படையிலான ஏற்றுமதி குறைவடைந்துள்ளது.

### 2.6.2.10. எகிப்து



இராணுவ ஆதரவுடன் காபந்து அரசினால் தேர்தல் ஊடாக தெரிவான ஜனாதிபதி முகமது முருசியின் அதிகாரத்தைக் கைப்பற்றியதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் காரணமாக எகிப்து மீண்டும் ஒரு முறை நிலையற்ற தேசமாக மாற்றம் பெற்றது இந்நிலைமை வெளிநாட்டு முதலீடு, சுற்றுலா வர்த்தகம் போன்றன உட்பட பொருளாதாரத்திற்கு அளுத்தங்களை ஏற்படுத்திய போதிலும் ஒப்பீட்டு ரீதியில் தேயிலைத் துறைக்கு தடைகள் ஏற்படவில்லை.

எகிப்து அரபு உலகின் மிகப் பெரிய தேயிலை சந்தையாகும். தேயிலை அந்நாட்டு பாரிய பிரபல்யம் மிக்க் பாணமாகக் காணப்படுவதுடன் மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்தத் தேயிலை நுகர்வு 90, 95 மில்லியன் கிலோ கிராமாகும் கடந்த 03 தசாப்த காலப்பகுதிக்குள் தேயிலைக்கான நுகர்வோரின் சுவை சம்பிரதாயத் தேயிலையில் இருந்து சீ.ரி.சீ. தேயிலைக்கு மாற்றம் பெற்றதுடன் கென்யா உள்ளிட்ட தேயிலையை உற்பத்தி செய்யும் ஆபிரிக்க நாடுகள் எகிப்தின் பிரதான விநியோகஸ்தர்கள் ஆகும். ஒப்பீட்டு ரீதியில் விலை அடிப்படையிலான பயன்களைப் போன்று கடுமையான சென்நிறம் கொண்ட தேயிலைக்கான விருப்பம் எகிப்து தேயிலை சந்தையில் சம்பிரதாயத் தேயிலை விநியோகஸ்தர்களுக்கு அப்பால் சீ.ரீ.சீ. தேயிலை விநியோகஸ் தர்களுக்கு பாரிய

இலாபகரமான நிலைமைகள் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

கென்யாவைத் தொடர்ந்து இந்தியா, இலங்கை , இந்தோனேசியா மற்றும் சீனா எகிப்தின் பிரதான தேயிலை விநியோகஸ்தர்களாகும். 1998 ஆம் ஆண்டில் எகிப்துடன் எட்டப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஊடாக எகிப்து சந்தையில் உறுதிப்படுத்தப்பட்ட 90% விசேட பங்குகள் கென்யாவில் காணப்பட்டது.

இலங்கை சுங்கத் திணைக்கள புள்ளி விபரங்களுக்கமைய 2013 ஆம் ஆண்டில் இலங்கையினால் எகிப்து சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவு 2,017 மெற்றிக் தொன் ஆகும். 2012 ஆம் ஆண்டில் இந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்த தேயிலை 3,800 மெ.தொன்னுடன் ஒப்பீடு செய்யும் போது 1,783 மெ.தொன் அதாவது 47% குறைவு காண்பிக்கப் பட்டுள்ளது. கொழும்பு ஏல விற்பனை தேயிலை சந்தையின் விலை அதிகரிப்பு எகிப்திற்கு இலங்கைத் தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சியடைக் காரணமாக அமைந்தது. மேலும் கென்யாவின் தேயிலை விலைக் குறைப்பு 2013 ஆம் ஆண்டு தொடக்கம் கென்யாவிலிருந்து தேயிலையினை இறக்குமதி செய்யும் எகிப்து சந்தை உறுப்பினர்களை ஊக்குவிக்கக் காரணமாக அமைந்தது.

### 2.6.2.11. லெபனான்



லெபனானை அடிப்படையாக் கொண்ட கிஸ்புல்லா அமைப்பு சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டமையினால் லெபனான் பாதுகாப்புக்கள் சீர்குலைந்தது. இது எவ்வாறாக இருப்பினும் சிரிய சந்தையின் அங்கத்த வர்களினால் நேரடி இறக்குமதிக்குத் தடைகள் விதித்தமையினால் லெபனானினால் சிரியாவில் மேற்கொள்ளப்படும் மீள் ஏற்றுமதி விருத்தியடைந்துள்ளது.

லெபனான் பிரதானமாக கோப்பி நுகரும் நாடு என்பதுடன் கோப்பி மற்றும் தேயிலைக்கு இடையிலான நுகர்வு விகிதாசாரம் 80:20 அளவில் காணப்படுகின்றது. லெபனானின் சுங்கத் திணைக்கள புள்ளி விபரங்களுக்கமைய லெபனானில் இருந்து வருடாந்தத் தேயிலை 2600 – 2700 மெ.தொன்னுக்கு இடைப்பட்ட அளவு இறக்குமதி செய்யப்படுவதுடன் இதில் 10% அளவு அன்மித்த நாடுகளுக்கு மீள் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

லெபனான் சிறிய சந்தையில் பிரதான தேயிலை விநியோகஸ்தரான இலங்கை 2013 ஆம் ஆண்டில் இந்நிலையினைப் பாதுகாக்க முடிந்தது. இலங்கை சுங்கத் திணைக்கள புள்ளி விபரங்களுக்கமைய 2012 ஆம் ஆண்டில் 2,816 மெ.தொன் லெபனானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டில் அக்காலப்பகுதியில் அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 2,157 மெ.தொன் ஆக காணப்பட்டது. இதற்கமைய 2012 தொடக்கம் 2013 ஆம் ஆண்டளவில் இலங்கையினால் லெபனானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 659 மெ.தொன் அதாவது 31% அதிகரித்தது.

தேயிலைப் பொதிப் பிரிவில் ஏற்பட்ட அதிகரிப்பு எகிப்திற்கு லெபனான் சந்தையில் தமது பங்கினை அதிகரிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. எகிப்தின் அலக்ஸன்ரியாவில் அமைந்துள்ள யுனிலிவர் தேயிலைக் கம்பனியின் தேயிலை பொதியிடும் இயந்திரம் மூலம் பொதியிடப்பட்ட லிப்டன் நாமம் கொண்ட தேயிலை ஏற்றுமதியினால் எகிப்து லெபனான் தேயிலை சந்தையில் மிக முக்கிய இடத்தை உரிமையாக்கிக் கொள்ள முடிந்துள்ளது.

### 2.6.3 மேற்கத்தேய / சமுத்திர வலயம்

அட்டவணை 2.19. மேற்கத்தேய / சமூத்திர வலயங்களுக்கு இலங்கைத் தேயிலை ஏற்றுமதி தொடர்பாக நாடுகளுக்கமைவான ஒப்பீடுகள்

| நாடுகள் | 2012 (கி.கிரா) | 2013 (கி.கிரா) | வித்தியாசம் (கி.கிரா) | வளர்ச்சி % |
|---|---|---|---|---|
| ஜப்பான் | 8,821,344 | 9,545,484 | (724,140) | (7.59) |
| ஹொங்கோங் | 4,919,900 | 4,389,930 | 529,970 | 12.07 |
| சீனா | 4,145,924 | 3,084,433 | 1,061,491 | 34.41 |
| அவுஸ்திரேலியா | 2,647,996 | 2,739,152 | (91,156) | (3.33) |
| தாய்வான் | 2,151,676 | 1,935,516 | 216,160 | 11.17 |
| நியூசிலாந்து | 962,351 | 917,236 | 45,115 | 4.92 |
| மலேசியா | 721,004 | 739,299 | (18,295) | (2.47) |
| சிங்கப்பூர் | 565,259 | 602,145 | (36,886) | (6.13) |
| பிஜி தீவுகள் | 315,247 | 360695 | (45,448) | (12.60) |
| இந்தோனேசியா | 139,955 | 322,750 | (182,795) | (56.64) |
| தென்கொரியா | 108,413 | 64,928 | 43,485 | 66.97 |
| தாய்லாந்து | 106,969 | 181,028 | (74,059) | (40.91) |
| மொன்கோலியா | 99,245 | 109,856 | (10,611) | (9.66) |
| வியட்நாம் | 69,985 | 69,626 | 359 | 0.52 |

| | | | | |
|---|---|---|---|---|
| பிலிப்பைன்ஸ் தீவுகள் | 46,627 | 64,415 | (17,788) | (27.61) |
| மொத்தம் | 25,821,895 | 25,126,493 | 695,402 | 2.77 |

### 2.6.3.1. அவுஸ்ரேலியா



அவுஸ்ரேலியாவின் பிரதான தேயிலை நுகர்ச்சி கருந்தேயிலை என்பதுடன் தொடர்ந்தும் மிகச் சிறிய அளவில் காணப்படும் பச்சைத் தேயிலை பிரிவிலும் விருத்தி முன்னேற்றங்கள் (அண்ணளவாக 3%) காண்பிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் அவுஸ்ரேலியாவின் தேயிலை இறக்குமதி 11,800 மெற்றிக் தொன் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 2012ஆம் ஆண்டு இந்நாட்டின் இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை அளவு 11,400 மெ.தொன் ஒப்பீட்டு அடிப்படையில் 3.5% அதிகரிப்பு 2013 ஆம் ஆண்டில் காண்பிக்கப்பட்டுள்ளது. பிரதான விநியோகஸ்தரான இந்தியாவினால் அவுஸ்திரோலியாவிற்கு 28.8% அளவு தேயிலை விநியோகிக்கப்படுவதுடன் இலங்கை இந்நாட்டின் தேயிலை விநியோகத்தின் 22% த்தையும் இந்தோனேசியா 16% மற்றும் சீனா 14% திற்ாககவும் 2012 / 2013 காலத்திற்குள் பங்களிப்பு செய்தது. அளவு அடிப்படையில் நோக்கும் போது சந்தையில் 86 % கருந் தேயிலையும் 6% மூலிகைத் தேயிலையும் 6% பச்சைத் தேயிலையும் காணப் படுகின்றது. 2002 ஆம் ஆண்டில் மொத்த சந்தையில் 10 % தொடக்கம் 2012 ஆம் ஆண்டில் 12% வரை முன்னேற்றம் கடந்த தசாப்தத்திற்குள் அங்கீகரிக்கப்பட்ட கருந்தேயிலைப் பங்கில் குறிப்பிட்டளவு விசேட கருந்தேயிலை பெறுப்பேறகப் பட்டுள்ளது.

பெறுமதி அடிப்படையில் நோக்கும் போது லிப்டன் மற்றும் புஸ்கில் ஆகிய இரு நாமங்கள் கொண்ட யுனிலிவர் கம்பனிச் சந்தையில் 31% பங்குரிமைகள் காணப்படுவதுடன் ரிவின்ஸ் (20%), டில்மா (12.5%), டெட்லி (8.5%) நெரதா (4.8%) மற்றும் மதுரா (4.4%) சந்தையில் உரிமை கோருகின்றன. விசேடமாக கருந்தேயிலை, பச்சைத் தேயிலை மற்றும் பழ / மூலிகைத் தேயிலைக்கான கேள்விகள் அதிகரித்துள்ளன. இலங்கையினால் 2013 ஆம் ஆண்டில் 2,641 மெ.தொன் அவுஸ்ரேலியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 2,706 மொ.தொன் ஆகும். அவுஸ்ரோலியாவிற்கு இலங்கைத் தேயிலை ஏற்றுமதி 2012 ஆம் ஆண்டளவில் 2,706 மெ.தொன் தொடக்கம் 2013 ஆம் ஆண்டில் 2,641 மெ.தொன் வரை வீழ்ச்சி கண்டதுடன் அது 2.5% குறைவாகும். அவுஸ்ரோலியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்தத் தேயிலை அளவின் 86% பெறுமதி சேர்க்கப்பட்ட உள்ளீடுகள் மூலம் (தேயிலைப் பொதி – 69% மற்றும் தேயிலைப் பை 17%) மாகும்.

### 2.6.3.2. சீனா



கோளமய விநியோகத்திற்காக 38% அளவு பங்களிப்பினை வழங்கி மிகப்பெரிய தேயிலை உற்பத்தியாளராக சீனா 2013 ஆம் ஆண்டில் 1.8 பில்லியன் கிலோ உற்பத்தி மட்டத்தை எட்டியுள்ளது.

மொத்தத் தேயிலை உற்பத்தியில் அண்ணளவாக 77% பச்சைத் தேயிலையில் அடங்குகின்றது. உலக வர்த்தக சங்கத்தில் இணைந்ததன் பின்னர் மற்றும் இறக்குமதி மீதான வரி முறைகள் குறைக்கப்பட்டதன் பின்னர் கடந்த சில ஆண்டுக் தொடக்கம் உள்நாட்டு நுகர்ச்சிக்காக பிரதானமாக பயன்படுத்தப்பட்ட கருந்தேயிலை நேரடி இறக்குமதி மிகக் குறைந்த மட்டத்திலிருந்து கூடியளவிற்கு விருத்தியடைந்தது. 2013 ஆம் ஆண்டில் சீனாவின் மொத்தத் தேயிலை இறக்குமதி 14,000 மெ.தொன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2012 ஆம் ஆண்டில் இவ்அளவு 11,000 மெ.தொன் ஆக காணப்பட்டது. இதன் போது 2012 ஆம் ஆண்டிற்கு இணைவாக 27% அதிகரிப்பு 2013 ஆம் ஆண்டில் காண்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையினால் சீனாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவு 2013 ஆண்டில் 4,485 மெ.தொன் என்பதுடன் 2012 ஆம் ஆண்டில் உரிய காலப்பகுதிக்குள் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 3,084 மெ.தொன்னாக காணப்பட்டமையினால் 2013 ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதியில் 45% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

### 2.6.3.3. ஜப்பான்



ஜப்பான் உண்மையிலேயே உலகில் உள்ள அதிசிறந்த நுனுக்கமான சந்தையாகக் கருதப்படுகின்றது. எந்தவொரு தேயிலை கைத்தொழிலும் எதிர்பார்க்கப்படும் இலக்காக ஜப்பான் சந்தை ஏனைய தேயிலை உறபத்தி செய்யம் நாடுகளுக்கிடையே போட்டிகரமான நிலைமையினை உருவாக்கும் இயலுமை கொண்டது.

ஜப்பான் 130,000 – 135,000 மெ.தொன் வருடாந்த தேயிலை நுகர்ச்சி கொண்ட நாடு சீனா, இந்தியா, ரஷ்யா, பாக்கிஸ்தான் மற்றும் துருக்கிக்கு அடுத்த படியாக கோளமய தேயிலைக் கையாளுகையில் முன்னனியில் உள்ளது. பச்சைத் தேயிலை நுகர்ச்சி ஜப்பான் சந்தையில் 70 % காணப்படுவதுடன் கருந்தேயிலைக்கான கேள்விகள் கிரமமாக விரிவடைந்து வருகின்றது. இருப்பினும் “ஒலோன்ட்” தேயிலைக்கான கேள்விகள் வீழ்ச்சியடையக்கூடிய நிலைமைகள் சித்தரித்துக் காட்டப்படுகின்றன. ஜப்பானில் பச்சைத் தேயிலை, கருந்தேயிலை, லிலோன் மற்றும் பார்லி போன்ற ஏனைய வகைத் தேயிலைகளுக்கு மேலதிகமாக வருடாந்த 1.5 மில்லியன் கிலோ – 2.00 வரையான அளவு திடீர் தேயிலை நுகர்ச்சியினைக் கொண்ட சந்தை என்பதை விசேடமாகக் குறிப்பிட முடியும்.

இது எவ்வாறாக இருப்பினும் கடந்த இரு தசாப்த காலத்திற்குள் கரந்தேயிலைக்காக கேள்விகள் அதிகரித்துள்ளதுடன் அது 30 % விசேட முன்னேற்றத்தை காண்பிக்கின்றது. சுமார் 60 % பல் பொருந்திய சந்தைப் பங்குகளுக்கு உரிமை கோரி இலங்கைக் கருந்தேயிலை வகை ஜப்பான் சந்தையில் அதன் ஆதிக்கத்தை தொடர்ந்தும் விரிவு படுத்தியுள்ளது. இலங்கை 2013 ஆம் ஆண்டில் 8,822 மெ.தொன் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்துள்ளதுடன் 2012 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 9,545 மெ.தொன் ஆகும். இது 2013 ஆம் ஆண்டின் அளவின் 7.5 % குறைவாகும்.

### 2.6.3.4. ஹொங்கொங்



ஒருபுறம் நீண்டகாலமாக காணப்பட்ட பிருத்தானிய அளுத்தங்களும் மறுபுறம் பிரதான தேசமான சீனாவில் பச்சை / பியட் தேயிலை கலாச்சாரம் காரணமாக ஹொங்கொங் இராட்சியத்தில் தேயிலை கலாச்சாரம் இம்முறையிலே அமைந்திருந்தது. இது எவ்வாறாக இருப்பினும் சகல ஆண்டுகளிலும் ஹொங்கொங்கிற்கு வருகை தரும் 3.0 மில்லியன் சுற்றுலாப் பிரயாணிகள் உட்பட அதிதிகள் காணரமாக அந்நாட்டு மக்கள் தேயிலைக் கலாச்சராத்திற்கு உட்படுவது ஓரளவு குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டில் ஹொங்கொங் சந்தையில் 36 % பங்குகளைக் கொண்ட இலங்கை சந்தையில் ஆதிக்கத்தை விரிவுபடுத்தியது. ஹொங்கொங்கிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த தேயிலை ஏற்றுமதி அளவின் சிறிதளவு தழம்பல்கள் காணப்பட்ட போதிலும் கடந்த தசாப்தத்திற்குள் இவ் ஏற்றுமதி 9,000 தொன் தொடக்கம் 12000 வரைக் காணப்பட்டது.

2012 ஆம் ஆண்டில் இலங்கையினால் ஹொங்கொங் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவு 4,390 மெ.தொன் என்பதுடன் அது 2013 ஆண்டில் 4,920 மெ.தொன் ஆகும். ஹொங்கொங்கிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட இலங்கைத் தேயிலை உள்ளீட்டின் அளவு 21% மாகும்.

### 2.6.3.5. தாய்வான்



அனேகமாக உலகின் அதிசிறந்த “மிலோன்” தேயிலையாக் கருதக்கூடிய உயர்தரத்திலான “டிலான்” தேயிலை கூடுதலாக உற்பத்தி செய்யப்படும் தாய்வானின் தற்போது தேயிலை உற்பத்தி 15,000 மெ.தொன் என்ற அளவிற்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

தாய்வானின் வருடாந்தத் தேயிலை ஏற்றுமதி 25,000 – 30,000 அளவாகும். புள்ளி விபரங்களுக்கமைய 2012 ஆம் ஆண்டில்

தாய்வானினால் பச்சைத் தேயிலை 9,400 மெ.தொன் அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. தேயிலை ஏற்றுமதியில் 74% உரிமை கொண்ட வியட்நாம் தேயிலை விநியோகத்தின் முன்னனி நாடாக திகழ்வதுடன் அதனைத் தொடர்ந்து சீனா மற்றும் இலங்கை தொடராக 13% மற்றும் 7% பங்குகளை கொண்டுள்ளன. 2012 ஆம் ஆண்டில் இலங்கையினால் தாய்வானுக்கு 1,935 மெ.தொன் தெயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன் 2013 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டை விட 11% ஏற்றுமதி அதிகரிப்பினைக் காண்பித்து 2,152 மெ.தொன் தெயிலை அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

### 2.6.4. ஐரோப்பிய வலயம்

அட்டவணை 2.20. ஐரோப்பிய வலயங்களுக்கு இலங்கைத் தேயிலை ஏற்றுமதி தொடர்பாக நாடுகளுக்கமைவான ஒப்பீடுகள்

| நாடுகள் | 2012 (கி.கிரா) | 2013 (கி.கிரா) | வித்தியாசம் (கி.கிரா) | வளர்ச்சி % |
|---|---|---|---|---|
| ஜேர்மன் | 6,557,405 | 5,629,940 | 927,465 | 16.47 |
| போலாந்து | 2,778,007 | 2,411,608 | 366,399 | 15.19 |
| பெல்ஜியம் | 2,428,270 | 2,403,312 | 24,958 | 1.04 |
| நெதர்லாந்து | 2,252,619 | 2,055,075 | 197,544 | 9.61 |
| அயர்லாந்து | 1,909,865 | 1,468,759 | 441,106 | 30.03 |
| இஸ்ரேல் | 1,481,396 | 1,408,051 | 73,345 | 5.21 |
| இத்தாலி | 1,376,433 | 1,774,990 | (398,557) | (22.45) |
| பின்லாந்து | 1,239,873 | 987,450 | 252,423 | 25.56 |
| பிரான்ஸ் | 869,906 | 955,273 | (85,367) | (8.94) |
| ஐக்கிய இராட்சியம் | 833,422 | 1,692,942 | (859,520) | (50.77) |

### 2.6.4.1. ஐக்கிய இராட்சியம்



62.6 மில்லியன் சனத்தொகையினைக் கொண்ட ஐக்கிய இராட்சியம் உலகின் இரண்டாவது மிகப்பெரிய தேயிலை நுகரும் நாடாகும். மொத்த ஏற்றுமதிச் சந்தையில் இறக்குமதி விகிதாசாரம் கொண்ட ஐரோப்பிய தேயிலை இறக்குமதியில் மகிப் பெரிய இறக்குமதி யாளராகும். சர்வதேச தேயிலைக் குழுவின் புள்ளி விபரங்களுக்கமைய ஐக்கிய இராட்சியம் 2012 ஆம் ஆண்டில் 144,575 மெ.தொன் இறக்குமதி செய்துள்ளதுடன் அது முன்னைய ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த 154,500 மெ.தொன்னுக்கு இணைவாக நோக்கும் போது 6% குறைவாகும். ஐக்கிய இராட்சிய நுகர்வோர் கருந்தேயிலை மீது கூடுதலான ஆர்வம் காட்டுகின்றனர். அந்நாட்டின் மொத்தத் தேயிலை இறக்குமதில் 97% கருந்தேயிலை என்பதுடன் 3% பச்சைத் தேயிலையாகும்.

ஐக்கிய இராட்சியத் தேயிலை சந்தையில பிரதான விநியோகஸ்தராகக் காணப்படும் தேயிலை செய்கையினை மேற்கொள்ளும் நாடுகள் என்பதுடன் 61,180 மெ.தொன் (42.3%) விநியோகத்தை மேற்கொண்டு கென்யா 2012 ஆம் ஆண்டில் பிராதான விநியோகஸ்தராகும். அதனைத் தொடர்ந்து இந்தியா 30,696 மெ.தொன் (21.2%), இந்தோனேசியா 16,562 மெ.தொன் (11%) மலாவி 8,068 மெ.தொன் (5.6%) விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டில் இலங்கைத் தேயிலை 2,302 மெ.தொன் ஐக்கிய இராட்சியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் 2.2% அதிகரிப்புக் காண்பிக்கப்பட்டுள்ளது.

ஐரேப்பிய மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் 40% திற்கு ஏற்றுமதிப் பங்களிப்பினை வழங்கி ஐக்கிய இராட்சியத்திற்கு ஐரோப்பாவின் பிரதான தேயிலை ஏற்றுமதியாளராக மாற்றம் பெற்றுள்ளது. 2012 ஆம் ஆண்டில் இங்கு மீள் ஏற்றுமதி தேயிலை 21,288 மெ.தொன்னாகும். ஐக்கிய இராட்சியத்தின் பிரதான ஏற்றுமதி இடமான கனடா, ஐக்கிய அரபு எமிர் இராட்சியம் அயர்லாந்து, பெல்ஜியம் மற்றும் பிரான்ஸ் கடந்த 07 வருட காலப்பகுதிக்குள் இலங்கை தேயிலை ஏற்றுமதியில் தளம்பலைக் காண்பித்தது. இலங்கை சங்கத் தகவல்களுக்கமைய 2012 ஈம் ஆண்டில் இலங்கைத் தேயிலை ஏற்றுமதி 1,692 மெ.தொன் என்பதுடன் இதன் பெறுமதி அண்ணளவாக 1,130 மில்லியன் ரூபாவாகும். 881 மில்லியன் ரூபா பெறுமதியான இலங்கைத் தேயிலை 855 மெ.தொன் 2013 ஆம் ஆண்டில் ஐக்கிய இராட்சியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் இதில் 66% தொகை அடிப்படையிலும் 13.8% பொதி அடிப்படையிலும் 14.% பை அடிப்படையிலும் ஏற்றுமதி செய்யப்பட்டது.

### 2.6.4.2. போலாந்து



சுமார் 38 மில்லியன் மக்கள் வாழும் போலாந்து ஐரோப்பாவின் மூன்றாவது மிகப்பெரிய தேயிலை நுகரும் நாடாகும். அந்நாட்டின் வருடாந்தத் தேயிலை நுகர்ச்சி 34.000 மெ.தொன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அது தனிநபர் தேயிலைப் பயன்பாடு 1.1 கிலோ கிராம் ஆகும். (ச.தே.கு) 2012 ஆம் ஆண்டில் மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் 26.5% திற்கு உரிமை கூறும் போலாந்து ஐரோப்பாவின் மிகப் பெரிய தேயிலை ஏற்றுமதியாளராகும். சர்வதேச தேயிலைக் குழ புள்ளி விபரங்களுக்கமைய போலாந்து 2012 ஆம் ஆண்டில் 29,483 மெ.தொன் இறக்குமதி செய்துள்ளதுடன் இதற்கு முன்னைய ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த 33,978 மெ.தொன்னுடன் ஒப்பீடு செய்யும் போது அதன் மூலம் முன்னைய ஆண்டின் இறக்குமதியினை விட 12 % வீழ்ச்சியினைக் காண்பிக்கின்றது. போலாந்து மக்கள் கருந்தேயிலை அருந்துபவர்கள் என்பதுடன் இறக்குமதி செய்யப்படும் தேயிலை அளவில் 84 % கருந்தேயிலையும் 16 % பச்சைத் தேயிலையுமாகும். கருந்தேயிலைச் சந்தை கென்யா மற்றும் இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் சீ.ரீ.சீ. வகை தேயிலையில் சம்பிரதாய ஓ.பீ.ஏ, எப்.பீ.ஓ.பீ. மற்றும் பீ.ஓ.பீ. படிவப் பிரிவில் தேயிலை மட்ட பழம், மூலிகை சுவையூட்டப்பட்ட தேயிலைப் பொதி கலப்பினைக் கொண்டதாகும்.

தேயிலை செய்கை மேற்கொள்ளும் நாடுகள் போலாந்து தேயிலை சந்தையின் பிரதான விநியோகஸ்தர்கள் என்பதுடன் 4,233 மெ.தொன் (14%) வழங்கி கென்யா பிரதான விநியோகஸ்தராகவும் பின்னர் வியட்நாம் 3,503 மெ.தொன், இந்தியா 3,474 மெ.தொன் (12%) இந்தோனேசியா 3,201 மெ.தொன், ஜேர்மன் 2,670 மெ.தொன் (9%) மற்றும் சீனா 2,241 மெ.தொன் (8%) இலங்கை 2,295 மெ.தொன் விநியோகித்து 2012 ஆம் ஆண்டில் அந்நாட்டுத் தேயிலை விநியோகஸ்தர்களுக்கு முடிந்தது.

இலங்கைச் சுங்கத் திணைக்களத்திற்கமைய 2013 ஆம் ஆண்டில் இலங்கை நேரடியாக ஏற்றுமதி செய்த இலங்கைத் தேயிலை 2,412 மெ.தொன் என்பதுடன் இதன் பெறுமதி 1,620 மில்லியன் ரூபா ஆகும். ரூபா. 2,032 மில்லியன் பெறுமதியான இலங்கைத் தேயிலை 2,778 மெ.தொன் அளவு 2013 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் இதன் போது 58% தேயிலை தொகை அடிப்படையிலும் 8% பொதி அடிப்படையிலும் 33% தேயிலை பை அடிப்படையிலும் 1 % பச்சைத் தேயிலையாகவும் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டை விட அளவில் 15% மற்றும் பெறுமதியல் 255 முன்னேற்றங்கள் இதன் மூலம் காண்பிக்கப்பட்டிருந்தன. போலாந்து இலங்கைத் தேயிலை பைகளுக்கான மூன்றாவது மிகப்பெரிய சந்தையாகக் கருதப்படுவதுடன் ரஷ்யக் கூட்டரசு மற்றும் அவுஸ்திரோலியா இலங்கையில் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக்கான முக்கியத்துவம் வாய்ந்த சந்தையாக இனங்காண வேண்டும்.

### 2.6.4.3. ஜேர்மன்



ஜேர்மன் ஐரோப்பிய சங்கத்தின் இரண்டாவது மிகப்பெரிய தேயிலை இறக்குமதியாளர் என்ற பொதிலும் நுகர்வு அடிப்படையில் நோக்கும் போது அது ஐக்கிய இராட்சியம் மற்றும் போலாந்தை விட பின்னனியில் உள்ளது. ஜேர்மன் 2012 ஆம் ஆண்டில் 55,985 மெ.தொன் இறக்குமதி செய்தது. ஐக்கிய இராட்சியத்திற்கு பின்னர் ஐரேப்பாவின் இரண்டாவது மிகப்பெரிய தெதேயிலை மீள் ஏற்றுமதியாளரான ஜேர்மன் 2012 ஆம் ஆண்டில் உள்நாட்டு நுகர்ச்சிக்காக இறக்குமதி செய்யப்பட்ட 29,836 மெ.தொன் மொத்த ஏற்றுமதி அளவில் 47% (மெ.தொ 26,149) மீள் ஏற்றுமதி செய்யப்பட்டது.

2002 ஆம் ஆண்டில் மெ.தொ 46,601 ஜேர்மன் மொத்தத் தேயிலை இறக்குமதி 2012 ஆம் ஆண்டில் 55,985 மெ.தொன் வரை விருத்தியடைந்ததுடன் அது 07 வருட காலம் பூராகவும் 9,384 மெ.தொன் அதவாது 20% அதிகரிப்பாகும். ஜேர்மன் தேயிலை இறக்குமதியில் 19% (மெ.தொ 10,717) சீனாவினால் விநியோகிக்கப்படுவதுடன் அதனைத் தொடந்து 14% இந்தியாவும், 14% இலங்கை மற்றும் 9% இந்தோனேசியா ஆகிய

நாடுகளிலிருந்து விநியோகிக்கப்படுகின்றன. 2006 ஆம் ஆண்டில் 25,303 மெ.தொன் ஜேர்மன் மீள் தேயிலை ஏற்றுமதி 2012 ஆம் ஆண்டளவில் 26,149 மெ.தொன் வரை விருத்தியடைந்தது. அளவு அடிப்படையில நோக்கும் போது 846 மெ.தொன் அதாவது 3.3% அதிகரிப்பாகும். மொத்த இறக்குமதி அளவில் 50 % திற்கு அண்மித்த அளவு ஜேர்மன் மீள் ஏற்றுமதி செய்கின்றது. ஜேர்மனில் மீள் ஏற்றுமதி பிரதானமாக ஐக்கிய எமிர் இராட்சியத்திற்கு மீள் ஏற்றுமதி மூலம் 19.8% மும் பிரான்சிக்கு 12%, போலாந்து, 8.4 , ஐக்கிய இராட்சியம 8.3%, மற்றும் நெதர்லாந்து 7.4% மும் பதிவாகியுள்ளது.

இலங்கை ஜேர்மனின் சம்பிரதாய கருநதேயிலை விநியோகஸ்தராகும். இலங்கையில் கூடுதலான அளவு தேயிலை தொகை அடிப்படையில் இந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட அளவில் ஏற்றுமதி செய்யும் அளவு 29% ஆகும். இலங்கை 2012 ஆம் ஆண்டில் 6,475 மெ.தொன் ஜேர்மனுக்கு ஏற்றுமதி செய்து இதன் போது ஜேர்மன் இலங்கையின் 14 வது மிகப்பெரிய தேயிலை ஏற்றுமதியாளர் என்பதுடன் முன்னைய ஆண்டை விட 16 % இலங்கைத் தேயிலை ஏற்றுமதியில் அதிகரிப்பு ஏற்பட்டது.

### 2.6.4.4.பிரான்ஸ்



சந்தையில் 5.9% திற்கு உரிமை கோரும் பிரான்ஸ் ஐரோப்பிய சங்கத்தின் ஐக்கிய இராட்சியம், போலாந்து மற்றும் ஜேர்மனியைத் தொடர்ந்து உள்ள 04 வது மிகப்பெரிய இறக்குமதியாளராகும். 2008 – 2012 காலப்பகுதியில் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட 18,687 மெ.தொ தொடக்கம் 17,835 க்கு இடைப்பட்ட அளவு தழம்பல்கள் காணப்பட்டன. 2008 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை 18,687 மெ.தொன்னுக்கு இணைவாக 2012 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட அளவு 17,835 மெ.தொன் என்பதனால் இறக்குமதி அளவில் 4% பின்டைவுகள் காண்பிக்கப்பட்டுள்ளன. சந்தையில் 36% விநியோகத்தை மேற்கொள்ளும் சீனா அந்நாட்டின் பிரதான தேயிலை ஏற்றுமதியாளர் என்பதுடன பெல்ஜியம் 10.5%, ஜேர்மன் 9%, மற்றும் இலங்கை 7.4% விநியோகத்தை மேற்கொள்கின்றது. பிரான்சினால் இறக்குமதி செய்யப்படும் தேயிலை அளவு சுமார் 20 % மீள் ஏற்றுமதி செய்யப்படுவதுடன் எஞ்சியவை உள்நாட்டுப் பயன்பட்டிற்காக வைக்கப்படுகின்றன.

சந்தையின் மொத்த ஏற்றுமதியில் 51 % அதவாது 9,064 மெ.தொன் கருந்தேயிலையில் அடங்குவதுடன் 49 % அதாவது 8,771 மெ.தொன் பச்சைத் தேயிலையாகும். பிரான்ஸ் இறக்குமதி செய்யும் தேயிலையில் 70 % முன் பொதியிடப்பட்ட தன்மையில் இறக்குமதி செய்யப்படுவதுடன் சுமார் 30 % தொகை அடிப்படையில் இறக்குமதி செய்யப்படுகின்றது. சீனா அந்நாட்டின் மிகப்பெரிய கருந்தேயிலை விநியோகஸ்தர் என்பதுடன் 17.5% தேயிலை விநியோகம் இடம் பெறுகின்றது. அதனைத் தொடர்ந்து பெல்ஜியம் 15.6%, இலங்கை 14.6%, ஜேர்மன் 10.3% மற்றும் ஐக்கிய இராட்சியம் 6.5% விநியோத்தை மேற்கொள்கின்றது. பச்சைத் தேயிலை விநியோகத்தின் பிரதான நாடான சீனா விநியோகத்தில் 55 % திற்கு உரிமை கோருவதுடன் பின்னர் ஜேர்மன் 9 மற்றும் பெல்ஜியம் 5.2 % விநியோகத்தை மேற்கொள்கின்றது.

இலங்கை சுங்கத் திணைக்கள புள்ளி விபரங்களுக்கமைய இலங்கை 2013 ஆம் ஆண்டில் 817 மெ.தொன் அந்நாட்டுக்காக ஏற்றுமதி செய்ததுடன் 2012 ஆம் ஆண்டில் 881 மெ.தொன் ஏற்றுமதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. பெல்ஜியம் ஐக்கிய இராட்சியம் மற்றும் ஜேர்மனி அந்நாட்டிற்கு வரவழைக்கப்படும் தேயிலையில் கூடுதலான அளவு இலங்கைத் தேயிலை என்பதனால் பிரான்ஸ் சந்தையில் இலங்கைத் தேயிலைக்கு கூடுதலான கேள்விகள் காணப்படுகின்றன.

### 2.6.4.5. நெதர்லாந்து



2002 – 2012 காலப்பகுதியல் நாட்டில் தேயிலை இறக்குமதி 25,000 – 30,000 மெ.தொன் என்பதுடன் அவ்வளவு தளம்பல் காணப்பட்டது. கருந்தேயிலை அந்நாட்டின் மொத்தத் தேயிலை இறக்குமதி அளவில் 93% என்ற பாரிய சந்தைப் பங்கிற்கு உரிமை கோருகின்றது.

மலாவி அந்நாட்டின் மிகப்பெரிய தேயிலை விநியோகஸ்தர் என்பதுடன் 83.3% விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து ஆர்ஜன்டீனா (14.6%), இந்தோனேசியா 10.9% ஈரான் 9.5%, சீனா 8.8%, இந்தியா 7.3% மற்றும் இலங்கை 7.2 % விநியோகத்தை

மேற்கொள்கின்றது. இந்நாட்டின் வருடாந்த தேயிலை நுகர்வு 7,000 – 8,000 மெ.தொன் என மதிப்பிடு செய்யப்பட்டுள்ளதுடன் தனிநபர் நுகர்வு 0.48 கிலோ கிராம் ஆகும். சந்தையில் 80% மான அளவு கருந்தேயிலையாகக் காணப்படுவதுடன் எஞ்சியளவு பச்சைத் தேயிலையாகும். இந்நாட்டில் பிரபல்யம் அடைந்துள்ள தேயிலைப் பொதி சில்லறை வர்த்தகத்தின் போது 90% திற்கு மேற்பட்ட அளவு விற்பனை இடம் பெறுகின்றது. மக்கள் தரத்திலும் உயர்ந்த தேயிலைக்கு ஆர்வம் காண்பிப்பதனால் விசேடமாகத் தேயிலை வர்த்தக நிலையங்கள் விருத்தியடைய ஆரம்பித்தள்ளது.

2013 ஆம் ஆண்டில் இலங்கைத் தேயிலை 2,253 மெ.தொன் அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன் 2012 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பது 2,055 மெ.தொன் ஆகும். மொத்தச் சந்தையில் 92% மீள் பொதியிடப்பட்ட தேயிலை ஆகும். எஞ்சியளவு தொகைத் தேயிலையாகும்.

### 2.6.5. வடக்கு மற்றும் தென் கொரிய வலயம்

அட்டவணை 2.21 வடக்கு மற்றும் தென் அமெரிக்க வலயங்களுக்கு இலங்கைத் தேயிலை ஏற்றுமதி தொடர்பாக நாடுகளுக்கமைவான ஒப்பீடுகள் (2012 / 2013)

| நாடுகள் | 2012 (கி.கிரா) | 2013 (கி.கிரா) | வித்தியாசம் (கி.கிரா) | வளர்ச்சி % |
|---|---|---|---|---|
| சிலி | 6,837,547 | 6,555,300 | 282,247 | 4.31 |
| ஐ. அமெரிக்கா | 3,736,641 | 2,950,474 | 786,167 | 26.65 |
| கனடா | 567,219 | 614,981 | (47,762) | (7.77) |
| வெனிசுவெலா | 30,424 | 92,578 | (62,154) | (67.14) |
| பிரேசில் | 10,735 | 4,087 | 6,648 | 162.66 |
| மெக்சிக்கோ | 10,142 | 17,599 | (7,457) | (42.37) |
| பனாமா | 5,633 | 93 | 5,540 | 5956.99 |
| ஆர்ஜன்ரீனா | 27,040 | 29,960 | (2,920) | (9.75) |
| கொலம்பியா | 318 | 895 | (577) | (64.47) |
| மொத்தம் | 11,225,699 | 10,265,967 | 959,732 | 9.35 |

### 2.6.5.1. ஐக்கிய அமெரிக்கா

அமெரிக்கக் கண்டத்தின் மிகப்பெரிய மற்றும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தேயிலைச் சந்தையாக அமைவது அமெரிக்காவாகும். 174 தேயிலை கிலோ



மில்லியனை இறக்குமதி செய்யும் ரஷ்யா மற்றும் 131 கிலோ மில்லியனை இறக்குமதி செய்யும் பாக்கிஸ்தானைத் தொடர்ந்து 125 கிலோ மில்லியன் அளவு இறக்குமதி செய்து தற்போது ஐக்கிய அமெரிக்க இராட்சியம் உலகின் மூன்றாவது மிகப்பெரிய தேயிலை இறக்குமதியாளர் என மதிப்பிடு செய்யப் படுகின்றது. 2012 ஆம் ஆண்டில் ஐக்கி அமெரிக்க இராட்சியத்தினால் நுகர்விற்காக மேற்கொள்ளப்பட்ட தேயிலை இறக்குமதி கடந்த காலத்தில் இடம்பெற்ற இரண்டாவது மிகப்பெரிய தேயிலை இறக்குமதியாளர் என ஐக்கிய இராட்சிய நுகர்விற்காக இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை அளவினையும் தாண்டியது.

சுமார் 320 மில்லியன் சனத்தொகையை கொண்ட 125,653 மெ.தொன் வருடாந்த தேயிலை நுகர்ச்சி கொண்ட இந்நாட்டின் தனிநபர் தேயிலை நுகர்வு 0.41 கிலோ கிராமாகும். ஐக்கிய அமெரிக்க இராட்சியத்தின் நுகர்வு மேற்கொள்ளப்படும் தேயிலையின் 85% கருந்தேயிலை என்பதுடன் 14% பச்சைத் தேயிலை மற்றும் எஞ்சிய 1% ஒலோன் மற்றும் வெள்ளைத் தேநீர் அகும். பச்சைத் தேயிலை மற்றும் பழக் கலவைத் தேயிலை நுகர்ச்சி அதிகரித்துள்ளது. ஐக்கிய அமெரிக்க இராட்சியத்தின் மொத்தத் தேயிலை நுகர்ச்சி 85% ஐஸ் தேயிலை அடிப்படையிலான பாணமாகும்

ஐக்கிய அமெரிக்க இராட்சியத்தின் பிராதன தேயிலை விநியோகஸ்தரான ஆர்ஜன்டீனா 39% விநியோகத்தை மேற்கொள்வதுடன அதனை தொடர்ந்து சீனா 20%, இந்தியா 9.6%, வியட்நாம் (5.7%), இந்தோனேசியா (3.5%) மற்றும் இலங்கை 3.3% தேயிலை விநியோகத்தில் ஈடுபட்டுள்ளது. அந்நாட்டின் பிரதான பச்சைத் தேயிலை விநியோகஸ்தர் சீனா மற்றும் ஜப்பான் ஆகும். ஐக்கிய அமெரிக்க இராட்சியத்திற்கு தேயிலை ஏற்றுமதி மேற்கொள்ளும் போது பெறுமதி அடிப்படையில் நோக்கும் போது சீனா அதிஉயரிய இடத்தில் காணப்படுவதுடன் அதனைத் தொடர்ந்து ஆர்ஜன்டீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் நிலைத்துள்ளன.

கடந்த ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்க இராட்சியத்திற்குத் தேயிலை ஏற்றுமதி செய்யும் போது வருடாந்த அளவு 24 கிலோ மில்லியன் 2.6 தொடக்கம் 3.6 இற்கு இடைப்பட்ட அளவு தழம்பலைக் காண்பிக்கின்றது. 2013 ஆம் ஆண்டில் இலங்கைத் தேயிலையில் ஐக்கிய அமெரிக்க இராட்சியத்திற்கு 3,736.641 கிலோ கிராம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது 2012

ஆம் ஆண்டு ஏற்றுமதியுடன் ஒப்பிடு செய்யும் போது 26.6% வளர்ச்சியாகும். இக்காலத்திற்கு ஏற்றுமதி வருமானம் 35% 2,597 மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் கணிசமாக அதிகரித்துள்ளது.



### 2.6.5.2. கனடா

கனட வட அமெரிக்காவின் மற்றுமொரு சம்பிரதாய தேயிலை வர்த்தகராகும். 2012 ஆம் ஆண்டில் கனடா 360 மில்லியன் மொத்த சில்லறை விற்பனை 89% தை பிரதிநித்துவப்படுத்தி கணிசமான அளவு கருந்தேயிலையான சந்தையில் ஆதிக்கத்ததை விரிவு படுத்தியுள்ளதுடன் அதற்காக சமமான மொத்த, சில்லறை வர்த்தகத்தின் அளவு 12,300 மெ.தொனிலிருந்து 89% அளவு கருந்தேயிலையாகும். கருந்தேயிலையில் காணப்படும் சுகாதார நலன்கள் காணரமாக அனேகமாக கனேடிய நுகர்வோர் கருந்தேயிலை மீது விருப்பம் காண்பிக்கின்றனர்.

2012 ஆம் ஆண்டில் 6% பெறுமதி மற்றும் 3 % அளவினை விருத்தி செய்து பச்சைத் தேயிலை சில்லறை வர்த்தகத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. கனடாவின் மொத்தத் தேயிலை அளவில் 5% என்ற சிறிய விற்பனை அளவினை பிரதிநிதித்துவப்படுத்தி பழங்கள் / மூலகைத் தேயிலை வகை சிறிய அளவிலான சந்தையாகக் காணப்படுகின்றது.

நுகர்வோர் சந்தை மாற்றங்கள் மற்றும் சந்தையில் மேற்கொள்ளப்படும் புதிய அபிவிருத்திகள் ஊடாக உயர்தரத்திலான அனுபவங்களை பெறுவதற்கான கேள்விகள் அதிகரித்துள்ளமையினால் கனடாவில் தேயிலை நுகர்ச்சி தொடர்ந்தம் விருத்தி செய்யப்பட்டுள்ளது. உயர் கனேடிய நுகர்வோருக்கு தேயிலை நுகர்ச்சிக்காக புதிய வாயிலைத் திறக்கும் வகையில் அவர்களுக்கு கையளிக்கப்படும் அதிசிறந்த கருந் தேயிலையைப் போன்று தேயிலை போன்ற புதிய உற்பத்திகள் ஊடாக மொத்தமாக முன்னேற்றங்கள் ஏற்படும்.

2013 ஆம் ஆண்டில் இலங்கை கனடாவிற்கு 567,219 கிலோ கிராம் ஏற்றுமதி செய்தது. 2012 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த அளவு 614.981 கிலோ கிராமாகம். பெறுமதி அடிப்படையில் நோக்கம் போது 326 மில்லியன் ரூபா தொடக்கம் 610 மில்லியன் வரை கணிசமான அளவினால அது அதிகரித்தது. இது உரிய காலப்பகுதிக்குள் 16% அதிகரிப்பாகும்.



### 2.6.5.3. சிலி

தென்கொரியாவின் மிகப்பெரிய டெதயிலை சந்தையான சிலி நாட்டின் வருடாந்தத் தேயிலை இறக்குமதி 20,000 மெ.தொன்னைத் தாண்டியுள்ளது. சிலி இராட்சியத்தின் தேயிலை நுகர்ச்சியில் தொடர்ச்சியான முன்னேற்றங்கள் காண்பிக்கப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டில் தேயிலை நுகர்ச்சி சுமார் 3% அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதுடன் தற்போது சில்லறை விற்பனை பெறுமதி 5% தினால் அதிகரித்துள்ளது. கருந்தேயிலை தொடர்ந்தும் தேயிலை விற்பனை அளவில் பெரும்பான்மையாகும். இதன் சில்லறை விற்பனை அளவில் 3% முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதுடன் சில்லறை விற்பனை பெறுமதியில் 5% விருத்தி ஏற்பட்டுள்ளது. கருந்தேயிலை நுகர்ச்சி மிக நெருக்கமான பாணமாக காணப்படுவதுடன் ஒப்பீட்டு அடிப்படையில் அதில் காணப்படும் வர்த்தக ரீதியிலான பிரபல்யத் தன்மைகள் காரணமாக அது தனிநபர் லேபல் முதலீடுகளுக்காக இலகுவான இலக்காக இருக்க முடியும். அவ்வேளையில் அப்பிரிவன் பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சியடையக் காரணமாக அமையும். அத்துடன் ஏனைய தேயிலை வகைகள் பல்வேறுபட்ட சுவையினால் விருத்தி செய்வதன் ஊடாக நுகர்வோரின் கவர்ச்சியினை வெற்றி கொள்ள முடிவதுடன் இதனால் அதன் விற்பனை அதிகரிக்கும்.

சந்தையில் 60% விநியோகத்தை மேற்கொண்டு ஆர்ஜன்டீனா முன்னனி விநியோகஸ்தராகக் காணப்படுவதுடன் 30% விநியோகத்தை மேற்கொண்ட இலங்கையின் துணை விநியோகஸ்தராக மாற்றம் பெற்றுள்ளது. 2012 ஆம் ஆண்டில் இலங்கை அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்த 6,555,300 கிலோ கிராம் தேயிலையுடன் ஒப்பீடு செய்யும் போது 2013 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட தேயிலை அளவு (6,837,547 கிலோ கிராமாகும்) அளவு அடிப்படையில் அது 4.3% அதிகரிப்பாகும். 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ஏற்றுமதி வருமானம் 3,044 மில்லியன் அதாவது 18.5% தினால் அதிகரித்துக் காணப்பட்டது

## 2.6.6. தென் கொரிய வலயம்

இவ்வலயம் இலங்கைத் தேயிலை இறக்குமதி செய்யும் 06 நாடுகளைக் கொண்டிருந்ததுடன் மொத்த உலகச் சந்தையில் 23% தை இந்நாடுகள் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. உலகின் கூடுலதான சீ.ரீ.சீ. மற்றும் சம்பிரதாய தேயிலை அளவு உற்பத்தி செய்யப்படுவது இவ்வலயத்திலாகும். அவ் ஆறு நாடுகளினால் 1.7 மில்லியன் கிலோ கிராம் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்படப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டிற்கு இணைவாக 67% குறைவு 2013 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளது. கிழக்கு ஆபிரிக்க நாடுகள் மற்றும் இந்தியாவின் தேயிலை உற்பத்தி அதிகித்தல் மற்றும் சீ.ரீ.சீ தேயிலை ஏற்றுமதி அதிகரிப்பு இப்பின்னடைவிற்கு காரணமாகும்.

சர்வதேச தேயிலைக் குழுவின் புள்ளி விபரங்களுக்கமைய முன்னைய ஆண்டில் இந்தியாவினால் 1.1 பில்லியன் கிலோ கிராம் உற்பத்தி செய்யப்பட்டதுடன் அதற்கு இணைவாக 2012 ஆம் ஆண்டில் 1.2 கிலோ உற்பத்தி 9.2% தினால் இவ் உற்பத்தி அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்தது. உலகில் இரண்டாவது மிகப்பெரிய தேயிலை விநியோகஸ்தரான இந்தியா பிரதானமாக எகிப்து, பாக்கிஸ்தான் மற்றும் ஐக்கிய இராட்சியம் ஆகிய நாடுகளுக்கு சீ.ரீ.சீ தேயிலை வகை ஏற்றுமதி செய்யப்படுவதுடன் தரத்தினால் உயர்ந்த சம்பிரதாயத் தேயிலை வகைகள் ஈரான், ஈராக், ஜேர்மன் உட்பட ரஷ்யா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இலங்கையினால் 2013 ஆம் ஆண்டில் 367 மில்லியன் ரூபா பெறுமதி கொண்ட 610,484 கிலோ கிராம் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இலங்கை இந்தியா இரு தரப்பு வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கையினால் 2012 ஆம் ஆண்டு 96,322 கிலோ தேயிலை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

உயர் சந்தைப் பிரிவுகளின் கோரிக்கைகள் காரணமாக 2012 ஆம் ஆண்டிற்கு இணைவாக 2013 ஆம் ஆண்டில் இலங்கைத் தேயிலையின் கூடுதலான அளவு இந்தியா இறக்குமதி செய்தது

அட்டவணை 2.22 தென் வலயத்திற்கு இலங்கைத் தேயிலை விநியோகித்தல் தொடர்பான நாடுகளின் ஒப்பீடுகள்

| நாடுகள் | அளவு (கி.கிராம்) | | | வளர்ச்சி |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | வித்தியாசம் | |
| இந்தியா | 610,484 | 499,376 | 111,108 | 22.25 |
| பாக்கிஸ்தான் | 604,401 | 4,487,124 | (3,882,723) | (86.53) |
| பங்களாதேஷ் | 280,647 | 93,732 | 186,915 | 199.41 |
| மாலைதீவு | 225,985 | 216,054 | 9,931 | 4.60 |
| ஆர்கானிஸ்தான் | 8,766 | - | 8,766 | 100.00 |
| நேபாளம் | 2,110 | 1,069 | 1,041 | 97.38 |
| மொத்தம் | 1,732,393 | 5,297,355 | (3,564,962) | (67.30) |

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 15 மில்லியன் கிலோ கிராம் வரிச்சலுகை கேட்டா இருந்த போதிலும் இலங்கைத் தேயிலையின் நாமம் சந்தையில் காணப்படுகின்றது.

கென்யாவின் தேயிலை விலை கணிசமாகக் குறைவடைந்தமையினால் பாக்கிஸ்தான் சந்தையினால் 2012 ஆம் ஆண்டிற்கு இணைவாக இலங்கைத் தேயிலை ஏற்றுமதி குறைவடைந்தது. 2013 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார முன்னேற்றங்களைத் தொடர்ந்து பங்களாதேஷில் தேயிலை நுகர்வு அதிகரித்துள்ளமையினால் அதனைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி இலங்கை 2013 ஆம் ஆண்டில் கூடுதலான அளவு பங்களாதேஷக்கு ஏற்றுமதி செய்தது. மாலைதீவு 2012 ஆம் ஆண்டில் அவர்கள் இலங்கைத் தேயிலை இறக்குமதியினைப் பேணியதுடன் 2012 ஆம் ஆண்டிற்கு இணைவான பொதுவான முன்னேற்றம் காணபிக்கப்படுகின்றது. மாலைதீவு ஆப்கானிஸ்தான் மற்றும் நேபாளம் இலங்கைத் தேயிலை நிறுவகனத்தில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தைக் காண்பிப்பதுடன் ஆப்கானிஸ் தானினால் 2013 ஆம் ஆண்டு இலங்கைத் தேயிலை இறக்குமதி செய்யப்பட்டது.

# 03.சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள்

பிரதம செயலக அலுலகம், தேயிலை ஆணையாளர் பிரிவு, தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு மற்றும் பகுப்பாய்வுப் பரிசோதனை ஆய்வுகூடம் இலங்கைத் தேயிலை சபையின் பிரதான பிரிவுகள் என்பதுடன் தேயிலைக் கைத்தொழில் முன்னேற்றத்திற்காக இச்சகல துறைகளும் செயற்படுகின்றன.

## 3.1 தேயிலை ஆணையாளர் பிரிவு

1976 ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் தேயிலை ஆணையாளர் பொறுப்பேற்றுள்ள தேயிலை கைத்தொழிலிருக்குரிய அபிவிருத்தி உற்பத்தி வெளியீடு மேற்பார்வை ஆகியவை தொடர்பான சக செயற்பாடுகளும் 1975 இலக்கம் 14 கொண்ட இலங்கை தேயிலை சபை மற்றும் 1957 இலக்கம் 51 கொண்ட தேயிலை நிர்வாக சட்டத்திற்கமைய அமுல்படுத்துவது தேயிலை ஆணையாளர் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாகும்.

தேயிலை ஆணையாளர் பிரிவின் பணிகள் காலி ,மாத்தறை, இரத்தினபுரி, கம்பளை, ஹட்டன், பண்டாரவெல மற்றும் மதுகம ஆகிய நகரங்களில் அமைந்துள்ள 07 பிரதேச அலுவலகங்களுக்கிடையே பன்முகப்படுத்தப் பட்டுள்ளன.

தேயிலைக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக இலங்கைத் தேயிலை சபை தேயிலை ஆணையாளர் பிரிவினால் கீழ் குறிப்பிடப்பட்ட பணிகளை மேற்கொள்கின்றது.

- தேயிலை உற்பத்திற்குரிய புள்ளி விபர்களை சேகரித்தல்
- தேயிலை உற்பத்தி மற்றும் கைத்தொழில் சாலைகளை பதிவு செய்தலும் பதிவினைப் புதுப்பித்தலும்
- தேயிலைக் கொழுந்தின் தரத்தை விருத்தி செய்வதற்கான வேலைத் திட்டத்தை அமுல்படுத்தல்.
- கைத்தொழில்சாலைகளை நவீன மயப்படுத்தல் மற்றும் புணரமை ப்பதற்காக மானிய உதவி வழங்கல் (வெற்று நடல் மற்றும் புதிய செய்கைகள் உட்பட)
- கைத்தொழில் சாலை மற்றும் வர்த்தகர்களுக்கு நியாயமான விலைகளுக்கமைவான கொடுப்பணவுகள்
- சிறந்த உற்பத்தி முறைகள் தொடர்பான விசேட மேற்பார்வைகளை மேற்கொள்ளல்.
- பச்சைத் தேயிலை உற்பத்தி வர்த்தகர்களை பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை
- கழிவுத் தேயிலை செயற்பாட்டு மத்திய நிலையம் மற்றும் வர்த்தகர்களை பதிவு செய்தலும் மேற்பார்வையும்
- இ.தே.ச / இ.த.உ உற்பத்தி தரச்சான்றிதழ் வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

1975 இலக்கம் 14 கொண்ட இலங்கைத் தேயிலை சபைச் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட தேயிலை ஆணையாளருக்கு பொறுப்பளிக்கப் பட்டுள்ள செயற்பாடு ஒழுங்கு விதிமுறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

அ. இலங்கை தேயிலை சபை (செயற்பாடுகள் மற்றும் முடிவுத் தேயிலை சுத்திகரிப்பு நிலைமைகள்) 1986 ஆம் ஆண்டுக் கோவை.

ஆ. இலங்கைத் தேயிலை சபை (மீள் செய்கை மற்றும் கைத்தொழில்சாலைகளை நவீன மயப்படுத்தும் மானிய உதவி யோசனைத் திட்டம்)

### 3.1.1. பிரதான வெற்றிகள்

கடந்த ஆண்டுகளுக்கு இணைவாக 2013 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் பல வெற்றிகள் எட்டப்பட்டன. கொடுப்பணவுகளை மேற்கொள்ளாதோர் தொடர்பாக தண்டனை யோசனை முறைகள் மறுசீரமைக்கப்பட்டமை எட்டப்பட்ட பாரிய வெற்றியாகும்.

"B leaf 60 Program" எனப்படுவது 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டமாகும்.

கைத்தொழில்சாலை மட்டத்தில் விலை மனுக்களை பரிசோதனை செய்வதற்காக குறுகிய தகவல் முறைகளை அமுல்படுத்தல் சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு மிகவும் பயன்மிக்கது என்பதுடன் 2013 ஆம் ஆண்டில் உள்நாட்டு சந்தைக்காக பண்புசார் தரம்மிக்க தேயிலை வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டன்

உயரத்திற்கமைய கொள்வனவு செய்யப்பட்ட உற்பத்தி அளவு செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள நபர்கள் தொடர்பிலான வெளிப்படுத்தல்கள் 3.1 இவ்வட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| 3.1 செயற்பாடுகளுக்கமைய தேயிலைக் கைத்தொழில்சாலைகள் தொடர்பான தெளவுபடுத்தல்கள் | | | | |
|---|---|---|---|---|
| நிலைமை | உயர் | மத்தி | தாழ் | மொத்தம் |
| தமது தேயிலைக்கு மாத்திரம் மட்டுப்படல் | 55 | 18 | 05 | 78 |
| தமது படிவம் மற்றும் கொள்வனவு செய்த தேயிலைக் கொழுந்து | 13 | 38 | 139 | 190 |
| மொத்த உற்பத்தியில் தமது தேயிலைக் கொழுந்து 50% தை விடக் குறைந்த | 84 | 31 | 15 | 130 |
| மொத்த உற்பத்தியில் தமது தேயிலைக் கொழுந்து 50% தை விட மேற்பட்ட | 06 | 25 | 255 | 286 |
| கொள்வனவு செய்த தேயிலைக் கொழுந்து மாத்திரம் | 35 | 70 | 76 | 181 |
| செயற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படாத பதிவு செய்த கைத்தொழில்சாலைகள் | 201 | 189 | 507 | 897 |
| மொத்தப் பதிவு செய்த கைத்தொழில்சாலைகளின் எண்ணிக்கை | 166 | 119 | 431 | 716 |

### 3.1.2. உற்பத்தியாளர்கள் மற்றும் கைத்தொழில்சாலைகளைப் பதிவு செய்தல்

தேயிலை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் தொடர்பான மற்றும் பதிவு செய்யவுள்ள உற்பத்தியாளர்களுக்காக தேயிலைக் கைத்தொழில்சாலைகளுக்குரியதான உரிய தகவல்கள் கொண்ட பதிவுகள் 1957 இலக்கம் 57 கொண்ட தேயிலை நிர்வாகச் சட்டத்தின் கீழ் தேயிலை ஆணையாளர் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றது. இச்சட்டத்தின் பணிகளுக்காக உற்பத்தியாளர்களைப் பதிவு செய்வதற்கு எவரேனும் ஒரு நபர் உரிமை கோருகின்றாரா என்பது குறித்த தீர்மானிப்பதற்காக இப்பிரிவிற்கு அதிகாரம் உள்ளது தேயிலை உற்பத்தி மற்றும் ஏல விற்பனை மத்திய நிலையங்கள் ஊடாக தேயிலை விற்பனைக்காக சகல தேயிலை உற்பத்தியாளர்களும் தேயிலை சபையில் பதிவு செய்யவேணடும்

சகல கைத்தொழில்சாலைகளினதும் பண்புசார் தரத்திலான தேயிலை உற்பத்திக்கு பொருத்தமானவாறு அவற்றின் கட்டிடம் உபகரணங்கள் மற்றும் செயற்பாட்டு முறைமையில் காணப்படுகின்றதா என்பது குறித்து பொறுப்புக்கூறும் வகையில் தேயிலை சபையில் பதிவு செய்ய வேண்டியதுடன் கைத்தொழில் சாலையினால் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை வகைகளின் நிலைமை தொடர்பாக மேற்பார்வை செய்யும்

போது அதற்கு உதவுதல், கழித்தேயிலையினை வெளியேற்றுவதை நிர்வகிப்பதற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் நியாய விலைச் சூத்திரங்களை அமுலபடுத்துவது கட்டாயமாக்கப்படல் வேண்டும்.

### 3.1.3. கொள்வனவு செய்யப்படும் கொழுந்திற்காக செலுத்த வேண்டிய நியாயமான விலை

தேயிலை நிர்வாகச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட கொழுந்துகளில் தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கைத்தொழில் சாலைகளினால் அக்கைத்தொழில் சாலைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் முடிவுத் தேயிலை வகைகள் உரிய விலைகள் தொடர்பாக கவனம் செலுத்தி தேயிலை ஆணையாளரினால் பரிந்துரை செய்யப்படும் விலை மனுக்களுக்கமையை உற்பத்திக்காக கொள்வனவு செய்யப்படும் தேயிலைக் கொழுந்திற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேணடும். பச்சைத் தேயிலைக் கொழுந்து விநியோகஸ்தர்களுக்காக கைத் தொழிற்சாலைகளினால் செலுத்த வேண்டிய நியாய விலை இக்கைத்தொழில் சாலைகளில் மாதாந்த தேயிலை விற்பனையை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

முடிவுத் தேயிலை விற்பனை மூலம் பெற்றப்பட்ட நிதி கொழுந்து விநியோகதஸ்தர்கள் மற்றும் கைத்தொ ழில்சாலைகளுக்கிடையே 68,32 த்திற்கமைய விநியோகிக்கப்பட வேண்டும். கைத்தொழில்சாலைகளில் விற்பனை பொதுவாக மாதாந்த அதிகரிப்பினைத் தாண்டி செல்வதாயின் அவ்வாறு அதிகரித்த வருமானம் 50:50 விகிதாசாரத்திற்கு பகிரப்படும். பச்சைக் கொழுந்துகளுக்குத் தேயிலை முடிவுப்பொருள் 22.5 % விகிதாசாரத்திற்கமைய சூத்திரம் தயாரிக்கப்படும்.

#### 3.1.3.1. கொடுப்பணவினை செலுத்தாது தவிர்ந்திருத்தல்.

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் பச்சை தேயிலை கொழுந்து விநியோகஸ்தர்களுக்கான மொத்தக் கொடுப்பனவினை செலுத்தாதிருந்த அளவு 2013 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் 200 மில்லியன் ரூபாவாகும். 2013 ஆம் ஆண்டில் எமது நிறுவனத்தினால் 6.06 மில்லியன் மீள் அறவிடப்பட்டது. அவர்களின் பதிவினை இடைநிறுத்தியதன் மூலம் தொடர்ந்தும் கொடுப்பனவினை செலுத்தாதிருந்தல் தவிர்க்கப் பட்டது. மொத்தக் கொடுப்பனவினை செலுத்தாதிருந்த அளவு தீர்க்கப்பட்டதன் பின்னர் மாத்திரம் அவ்வாறான கைத்தொழில்சாலைகளை மீளப் பதிவு செய்தல் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படும்.

**அட்டவணை 3.1.1 கொடுப்பனவை செலுத்தத் தவறியிருந்தமை தொடர்பான நிலைமைகள்**

| பிரதேசங்கள் | 2013.12.31 ஆம் திகதியன்று அளவு | 2013 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட அளவு | மீள அறவிடப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட அளவு | 2013.12.31 ஆம் திகதியன்று சிறுதேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவை | மூடப்பட்ட கைத்தொழில் சாலைகள் மூலம் செலுத்த வேண்டிய அளவு | தற்போது அமுலில் உள்ள கைத்தொழில் சாலைகள் மூலம் செலுத்த வேண்டிய அளவு |
|---|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி | 33,965 | - | 6,0 | 40,026 | 115,434 | 25,282 |
| மாத்தறை | 2,654 | - | | 2,654 | 2,639 | 15 |
| கம்பஹா | 14,501 | - | | 14,501 | 17,369 | 8,151 |
| காலி | 14,450 | 32 | | 14,482 | 11,312 | 3,216 |
| மதுகம | 8,498 | 397 | 8,8 | 17,393 | 6,754 | 2,650 |
| ஹட்டன் | 1,253 | - | | 1,253 | - | - |
| பண்டாரவெல | 8,083 | - | | 8,083 | 847 | 7,213 |
| **மொத்தம்** | 83,403 | 429 | 14,9 | 98,391 | 154,356 | 46,527 |

### 3.1.4. கொழுந்துத் தேயிலையின் தர நிர்வாகம்

முடிவுத் தேயிலைகளின் உயர் தரத்ததைப் பேணும் வகையில் கட்டிடம், உபகரணம், இயந்திர உபகரணங்கள் மற்றும் செற்பாட்டு முறைகள் பொருத்தமான முறையில் காணப்படுவது அத்தியாவசியமாகும். இதனால் உயர்தரத்திலான தேயிலை உற்பத்திக்காக பொருத்தமான மேற்கூறப்பட்ட நிலைமைகள் அற்ற கைத்தொழில்சாலைகள் இருப்பின் தேயிலை நிர்வாகச் சட்டத்தின் கீழ் அவ்வாறான கைத்தொழில்சாலைகளின் பதிவினை இரத்து செய்ய தேயிலை ஆணையாளருக்கு அதிகாரம் உள்ளது.

கொள்வனவு செய்யப்படும் கொழுந்தினை பயன்படுத்தி உற்பத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது பச்சைக் கொழுந்தின் தர நிர்வாகம் மிக முக்கியத்துவம் வாய்ந்த காரணியாகும். உற்பத்தி செயற்பாடுகளின போது அதற்காக உயர்தரத்திலான பச்சைக் கொழுந்து தேயிலை பயன்படுத்தப் படுத்துவதாயின் இறுதியில் முடிவுத் தேயிலையின் தரம் அதிகரிப்பதுடன் இதன் உயர்ந்த பட்ச பயன் பச்சைக் கொழுந்து வர்த்தகர்களை போன்று தேயிலை உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கும் ஏதேனும் கைத்தொழில்சாலையின் கொடுப்பண வினை செலுத்தாமை தெரியவரும் பட்சத்தில் அக்கைத்தொழில் சாலையின் பதிவினை இடைநிறுத்த அல்லது இரத்தது செய்ய கட்டுப்பட வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்படும்.

இலங்கைத் தேயிலை சபையினால் பச்சைக் கொழுந்தின் தரம் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் 2010 டிசம்பர் 14 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டது. தேயிலை நிர்வாகச் சட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் தேயிலை வகைகளின் நிலைமையினை மேற்பார்வை செய்தல் மற்றும் விருத்தி செய்யும் அதிகாரம் தேயிலை ஆணையாளர் பிரிவிற்குரியதாகும். உற்பத்தி செய்யப்படும் தேயிலை வகையின் தரத்தினை விருத்தி செய்யும் வகையில் கீழ் குறிடப்பட்ட செயற்திட்டங்கள் திட்டமிட்டல்கள் அமுல்படுத்தப் பட்டன.

1) இ.த.நி - இலங்கை தேயிலை சபையின் தரச்சான்றிதழ்
2- பச்சைக் கொழுந்துகளின் தரத்தினை விருத்தி செய்யும் வகையில்“B leaf 60 progamme” வேலைத்திட்டத்தை அமுல் படுத்தல்
3- பண்டிகைக்காலங்களில் Rush Crop Mangement வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்
4) Low NSA Strategy
5) தர மதிப்பீட்டு முறைமை (குழச் செயற்பாட்டுப் பணிகள்)
6) கைத்தொழில்சாலைகளை நவீன மயப்படுத்துவதற்கான மானிய உதவித் திட்டம்
7) தேயிலை மீள் பயிர்ச் செய்கை மானிய உதவித் திட்டம்
8) கைத்தொழில்சாலைகளை அடிப்படையாகக் கொண்ட தேயிலை அபிவிருத்தி வேலைத்திட்டம்
9) கைத்தொழில் சாலைகளில் சிறந்த உற்பத்தி முறைகளை தாபித்தல்
10) பச்சைத் தேயிலை வர்த்தகர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம்

உற்பத்தி செயற்பாடுகள் மற்றும் இறுதி உற்பத்தி உ□ம் - கருந்தேயிலையினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கைத் தேயிலை சபை (இ.தே.ச) இலங்கைத் தர நிர்வாகம் (இ.த.நி) மற்றும் கூட்டிணைந்த உற்பத்தி உறுதிப்படுத்தல் யோசனைத் திட்டத்தை அமுல்படுத்தல். செயற்பாட்டு நிர்வாகம் மற்றும் உற்பத்திப் பரிசோதனைகள் தொடர்பாக உரிய தரங்களில் குறிப்படப்பட்டுள்ள உத்தரவுகள் மற்றும் உரிய சட்ட ரீதியிலான தேவைகளையும் உள்ளடக்கி தர முகாமைத்துவ முறைமை அத்தியாவசிய அடிப்படை செயற்பாடுகள் தொடர்பில் இவ்யோசனைத் திட்டம் கேந்திரமாக அமைந்துள்ளது. வாடிக்கையாளருக்குத் தரத்தில் உயர்ந்த கருந்தேயிலைக்காக மூன்றாம் தரப்பினரின் சான்றிதழை வழங்கும் வகையில் இ.த.நி - இ.தே.ச தேயிலை உற்பத்தி தரப்படுத்தல் யோசனைத் திட்டத்தை பக்கச் சார்பின்றி மாற்றங்கள் இன்றி மற்றும் நெகிழ்வுத் தன்மையுடன் அமுல்படுத்தல்.

(B 

### தேயிலை கொழுந்து வகைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கான (B Leaf 60 ) வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல்)

தேயிலைக் கொழுந்தினை பறிக்கும் தரத்தினை விருத்தி செய்தல் மற்றும் அறுவடைக்குப் பின்னர் ஏற்படக்கூடிய இழப்பீடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் தேயிலைக் கொழுந்தின் தரத்தினை விருத்தி செய்தற்காக இவ்வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. தற்போது கொழுந்துகளின் தரம் அதிசிறந்த தரம் 33% சிறந்த தரத்தை விட குறைந்த 32% தரக் குறைவான 35% எனக்காணப்பட்டது. குறுகிய காலத்திற்குள் பச்சைக் கொழுந்தின் தரத்தை (சிறந்த தரத்திலான கொழுந்து) குறைந்த பட்சம் 60% மட்டத்தில் பேணுவதனை இலக்காகக் கொண்ட B Leaf 60 வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இவ்விலக்கினை வெற்றிக் கொள்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிமுறைகள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ளன.

1) ஆர்வம் மிக்க தரப்பினரை அறிவுறுத்தும் வேலைத்திட்டம்
2) கொழுந்து தொடர்பான செயற்பாடுகள் தொடர்பில் கோவைகளை விதித்தல்
3) பிற்கால அறுவடை முறைகளை விருத்தி செய்யும் வகையிலான நிதி உதவிகளை வழங்குதல்.

### பண்டிகைக் காலங்களில் Rush Crop Magement வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல்

பண்டிகைக் காலங்களில் நீண்டகாலம் தேயிலை கைத்தொழில்சாலைகள் மூடப்படுவதனால் தேயிலை உற்பத்திக்கு ஏற்படக்கூடிய இழப்பீடுகளைக் கட்டுப் படுத்துவதற்காக இச்செயற்திட்டம் வகுக்கப் பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டம் 2005 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அது தொடக்கம் பல்வேறுபட்ட செயற்பாடுகளை அமுல்படுத்த உற்பத்திப் பயன்பாடுகளில் இடம் பெறக்கூடிய இழப்பீடுகளை முழுமையாக் கட்டுப்படுத்த தேயிலை ஆணையாளர் பிரிவிற்கு முடிந்துள்ளது. பண்டிகைக் காலங்களில் கைத்தொழில் சாலைகளை மூடுதல் 2013 ஏப்ரல் மாதத்தில் 11 மற்றும் 16 ஆகிய காலம் வரை வரையறுக்கப்பட்டது.

### Low NSA Strategy

தேறிய விற்பனை பொதுவாக கீழ் மட்டத்தில் அமுலில் உள்ள தேயிலைக் கைத்தொழில் சாலைகளுக்காக இச்செயற்திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது. தேயிலைக் கொழுந்துகளின் தரத்தை விருத்தி செய்வதற்காக அவ்வாறான கைத்தொழில் சாலைகளில் தேறிய சாதாரண விற்பனையினை மேம்படுத்துவது இச்செயற் திட்டத்தின் நோக்கமாகும்.



படம் 3.6.2:-"BLeaf60 அறிவுறுத்தும் வேலைத்திட்டம்




PdhdrEmh 3.6.2.- "BLeaf60Project" தொடர்பான தொழில்சார் வேலைத்திட்டம்

| அட்டவணை 3.3 செயற்பாட்டுக் குழுவின் பணிகள் | |
|---|---|
| பிரதேசம் | மேற்பார்வை |
| பண்டாரவெல | 5 |
| கம்பஹா | 6 |
| இரத்தினபுரி | 7 |
| மாத்தறை | 18 |
| காலி | 7 |
| மதுகம | 13 |
| மொத்தம் | 56 |

அட்டவணை 3.4 விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் மானிய உதவி அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ள அளவு

| பிரதேசம் | மீள் பயிர்ச் செய்கை மானிய உதவி யோசனைத் திட்டம் | | | கைத்தொழில் சாலைகளை நவீன மயப்படுத்தும் யோசனைத் திட்டம் | |
|---|---|---|---|---|---|
| | விண்ணப்ப படிவங்களின் எண்ணிக்கை | அளவு | ஹெக்டெயருக்கு எண்ணிக்கை | விண்ணப்ப படிவங்களின் எண்ணிக்கை | செலுத்தபட்ட அளவு |
| பண்டாரவெல | 29 | 7,471.69 | 48.29 | 01 | 379. 5 |
| ஹட்டன் | 84 | 7,471.69 | 116.70 | 03 | 1,491. |
| கம்பஹா | 08 | 873.50 | 13.57 | - | |
| இரத்தினபுரி | 15 | 3,091.09 | 24.14 | 09 | 6,309. |
| மாத்தறை | 02 | 259.36 | 3.66 | 04 | 1,689. |
| காலி | 01 | 46.80 | 0.39 | 07 | 4,486. |
| மதுகம | | - | | 06 | 2,933. |
| மொத்தம் | 139 | 14,370.74 | 206.75 | 30 | 17,290. |

## தர மேற்பார்வை முறைகள் (செயற்பாட்டுக் குழுவின் பணிகள்)

2013 ஆம் ஆண்டில் தேயிலை ஆணையாளர் பிரிவின் உத்தியோகத்தர்களினால் தேயிலை கைத்தொழில்சாலைகள் தொடர்பில் 56 திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

## கைத்தொழில்சாலைகளை நவீன மயப் படுத்தல் மற்றும் தேயிலை மீள் செய்கைக்கான மானிய உதவிகளை வழங்குதல்.

பொதுத் திறைசேரியினால் உள்நாட்டு நிதியத்தின் கீழ் தேயிலை அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக தேவையான நிதி இலங்கை தேயிலை சபையின் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வகுக்கப்பட்டுள்ளது. மேலே தயாரிக்கப் பட்டுள்ள நிதியத்தின் மூலம் கைத்தொழில் சாலைகளை நவீன மயப்படுத்தல் மற்றும் தேயிலை மீள் பயிர்ச் செய்கை மானிய உதவி யோசனைத் திட்டத்திற்காகப் பயன்படுத்தல்

2013 ஆம் ஆண்டில் தேயிலை மீள் பயிர்ச்செய்கை மற்றும் கைத்தொழில்சாலைகளை நவீன மயப்படுத்தும் பணிகளுக்காக கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறைக்கான நிதியம் தயாரிக்கப்பட்டிருந்தது. இந்நிதியத்தின் மூலம் 6.88 % தனியார் தேயிலை கைத்தொழில் சாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய கூட்டுத்தாபன பிரிவின் கைத்தொழில்சாலைகளை நவீன மயப்படுத்தல் மற்றும் தேயிலை மீள் செய்கை பணிகளுக்காக ஒதுக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் தேயிலை ஆணையாளர் பிரிவின் உத்தியோகத்தர்களினால் கைத்தொழில் சாலைகளில் 56 தடவைகள் திடீர் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன.

## கைத்தொழில்சாலைகளை அடிப்படையாகக் கொண்ட தேயிலை அபிவிருத்தி வேலைத்திட்டம்

சிறுதேயிலைத் தோடடங்கள் மற்றும் தேயிலை கைத்தொழில்சாலைகளில் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு இலங்கை தேயிலை சபை, தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து கைத்தொழில் சாலைகளை அடிப்படையாகக் கொண்ட தேயிலை அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இவ்வேலைத்திட்டங்களின் கீழ் சிறு தேயிலை தோட்டங்களில் உற்பத்தித் திறன் மற்றும் பச்சை தேயிலைக் கொழுந்து நிர்வாகம் தொடர்பிலான மேற்பார்வைகளை மேற்கொள்வதற்காக பரவலாக்கல் உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் தேயிலைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் சகல பிரதேசங்களிலும் இச்செயற்திட்டத்தை அமுல்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது.

## தேயிலைக் கைத்தொழில் சாலைகளில் சிறந்த உற்பத்தி முறைகளை ஏற்படுத்தல்.

இத்திட்டத்தின் கீழ் 308 கைத்தொழில்சாலைகள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவற்றில் உற்பத்திச் செயற்பாடுகளை விருத்தி செய்யும் வகையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

அட்டவணை 3.5 பிரதேசங்களுக்கமைய சிறந்த உற்பத்தி முறைகள் தொடர்பான மதிப்பீடுகள்

| பிரதேசம் | □MP மதிப்பீடு |
|---|---|
| பண்டாரவெல | 11 |
| கம்பஹா / ஹட்டன் | 148 |
| இரத்தினபுரி | 25 |
| மாத்தறை | 60 |
| காலி | 51 |
| மதுகம | 13 |
| மொத்தம் | 308 |

## பச்சைக் கொழுந்து வர்த்தகர்களுக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

தேயிலை நிர்வாகச் சட்டத்திற்கமைய சகல பச்சைக் கொழுந்து வர்த்தகர்களினால் தேயிலை ஆணையாளர் பிரிவினால் வருடாந்தம் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அட்டவணை 3.6. 2013 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை

| பிரதேசம் | 2013.01.01ஆம் திகதியன்று வெளியிடப் பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்தல் | புதிய அனுமதிப் பத்திர ங்களை வெளியிடல் | 2013.12.31 ஆம் திகதியன்று பச்சைத் தேயிலை கொழுந்து வர்த்தக த்திற்காக வழங்கப்பட்டள் அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பண்டாரவெல | 152 | 141 | 15 | 156 |
| கம்பஹா / ஹட்டன் | 262 | 242 | 57 | 299 |
| மாத்தறை | 341 | 307 | 35 | 342 |
| காலி | 350 | 319 | 38 | 357 |
| இரத்தினபுரி | 597 | 521 | 72 | 593 |
| மதுகம | 280 | 261 | 39 | 300 |
| மொத்தம் | 2,007 | 1,791 | 256 | 2,047 |

## கழிவுத் தேயிலைச் செயற்பாடுகள்

| மோட்டார் வாகனம் மற்றும் ஏனைய வாகங்கள் | 42,918,419 | 9,916,736 | 20,000 | - | 52,815,155 |
| நூலகப் புத்தகம் | 383,044 | - | - | - | 383,044 |
| கணணி / வன்பொருள் | 24,950,858 | 7,227,650 | 413,702 | - | 31,764,806 |
| பரிசோதனை ஆய்வுகூட உபகரணம் | 89,400,053 | 378,560 | - | - | 89,778,613 |
| | 828,125,061 | 24,761,971 | 4,122,248 | 2,556,676 | 846,208,107 |
| அமுலில் உள்ள பணிகள் | | | | | |
| கட்டிடம் | - | 19,341,215 | - | - | 19,341,215 |
| கணணி மென்பொருள் | 1,056,519 | - | - | - | 1,056,519 |
| | 1,056,519 | 19,341,215 | - | - | 20,397,734 |
| | 829,181,580 | 44,103,186 | 4,122,248 | 2,556,676 | 866,605,841 |
| தேய்மானத்திற்கான ஒதுக்கீடுகள் | 2013.01.01 ஆம் திகதியன்று திரண்ட தேய்மானம் | ஆண்டுக்குள் மாற்றங்கள் | வெளியேற்றம் | ஒப்பீடுகள் | 2013.12.31 ஆம் திகதியன்று திரண்ட தேய்மானம் |
| கட்டிடம் | 22,827,722 | 4,988,897 | - | | 27,816,619 |
| ஆதனங்கள் மற்றும் உபகணரங்கள் | 37,875,204 | 3,521,081 | 3,425,509 | - | 37,970,775 |
| மனைப் பொருட்கள் மற்றும் பொருத்துதல்கள் | 11,403,253 | 1,596,342 | 219,656 | - | 12,779,939 |
| மோட்டார் வாகனம் மற்றும் ஏனைய வாகனம் | 10,032,903 | 4,867,137 | 4,500 | - | 14,895,540 |
| நூலகப் புத்தகம் | 361,174 | 17,881 | - | - | 379,055 |
| கணணி / வன்பொருள் | 20,829,856 | 2,557,695 | 413,702 | - | 22,973,849 |
| பரிசோதனை ஆய்வுகூட உபகரணங்கள் | 56,776,544 | 9,452,256 | - | - | 66,228,800 |
| | 160,106,656 | 27,001,289 | 4,063,367 | - | 183,044,577 |
| தேறிய புத்தகப் பெறுமதி | 669,074,924 | | | | 683,561,264 |

# நிதி வெளிப்பாடுகள் தொடர்பான குறிப்பு
## 2013 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான

| 8 நிதிச்சொத்துக்கள் | 2013.12.31 அன்று ரூபா | 2013.12.31 அன்று ரூபா |
|---|---|---|
| ஏனையவை | 4,813 | 4,813 |
| | 4,813 | 4,813 |

| 9 பொருள் இருப்பு | 2013.12.31 அன்று ரூபா | 2013.12.31 அன்று ரூபா |
|---|---|---|
| இரசாயனகூடம் மற்றும் ஏனைய பொருட்கள் | 12,639,602 | 6,527,173 |
| தேயிலை | 2,651,000 | 2,919,562 |
| பயன்பாட்டு உபகரணங்கள் | 9,451,093 | 2,040,555 |
| ஏனையவை | 38,910,090 | 8,461,572 |
| | 63,651,786 | 19,948,861 |

| 10 வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய நிதி | 2013.12.31 அன்று ரூபா | 2013.12.31 அன்று ரூபா |
|---|---|---|
| வர்த்தகக் கிடைக்க வேண்டியவைகள் | 7,732,541 | 961,175 |
| கைத்தொழில்சாலைகளின் நவீன மயப்படுத்தல் மற்றும் மீள் பயிர்ச் செய்கை மானிய உதவிகள் கிடைக்கவேண்டியவைகள் | - | 2,669,759 |
| பணியாளர் சபையின் கிடைக்கவேண்டியவைகள் மற்றும் ஏனைய முற்பணம் | 30,916,725 | 31,760,973 |
| கிடைக்க வேண்டியவைகள் - தே.தோ.ச | 25,000,000 | 25,000,000 |
| பணியாளர் சபைச் செலவினம் முற்கொடுப்பனவு | 2,637,639 | 2,637,639 |
| முற்பணம் மற்றும் ஏனையவை | 13,006,847 | 990,025.00 |
| கழி – | | |
| அறவிட முடியாக்கடன் மற்றும் ஐயக்கடனுக்கான ஒதுக்கீடு | (25,000,000) | (25,000,000) |
| | 54,293,751 | 39,019,571 |

| 11 ஏனைய நிதிச் சொத்துக்கள் | 2013 .12.31 அன்று ரூபா | 2013.12.31 அன்று ரூபா |
|---|---|---|
| குறுகிய கால முதலீடு | 4,032,781,237 | 2,804,609,593 |
| | 4,032,781,237 | 2,804,609,593 |

| 12 ஊழியர் பிரதிலாபக் கட்டுப்பாடுகள் | 2013.12.31 அன்று ரூபா | 2013.12.31 அன்று ரூபா. |
|---|---|---|
| பணிக்கொடை ஆரம்ப நிலுவை | 44,034,691 | 45,640,715 |
| ஆண்டுக்குள் பணிக்கொடைக் கட்டணம் | 3,434,335 | 5,859,469 |
| ஆண்டுக்குள் செலுத்தப்பட்ட / செலுத்த வேண்டிய பிரதிலாபம் | (4,385,452) | (7,465,493) |
| | 43,083,575 | 44,034,691 |

| 13 காணிக்கான முற்கொடுப்பனவு குத்தகை நிலுவை | 2013.12.31 அன்று ரூபா | 2013.12.31 அன்று ரூபா. |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை | 3,007,283 | 3,079,183 |
| தேய்மானம் | (71,900) | (71,900) |
| இறுதி நிலுவை | 2,935,383 | 3,007,283 |

| 14 கற்புலனாகும் சொத்துக்கள் | 2013.12.31 அன்று ரூபா | 2013.12.31 அன்று ரூபா. |
|---|---|---|
| மென் பொருள் | 1,157,598 | 1,077,307 |
| அமுலில் உள்ள மென்பொருள் பணிகள் | 8,877,081 | 8,233,971 |
| | 10,034,678 | 9,311,278 |

| 15 வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைள் | 2013.12.31 அன்று ரூபா | 2013.12.31 அன்று ரூபா |
|---|---|---|
| சந்தை மற்றும் செலுத்த வேண்டியவைகள் | 98,087,455 | 41,016,920 |
| ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 102,946,581 | 51,128,665 |
| திரண்ட செலவினம் | 22,819,401.67 | 12,105,463 |
| | 223,853,438 | 104,251,048 |

# நிதி வெளிப்பாடுகள் தொடர்பான குறிப்புக்கள்

## 16. 2013 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மூலதனம் மற்றும் ஒதுக்கீடு

2013 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்குள் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்தில் மாற்றங்கள் இடம் பெறவில்லை

**பங்காளர் மூலதனம்**

2013 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் ரூபா. 652,067,602 அரச வழங்கல் மூலம் பங்காளர் மூலதனம் தயாரிக்கப்பட்டிருந்தது.

**ஊக்குவிப்பு மற்றும் விற்பனை வரி**

இலங்கைத் தேயிலை சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் தேயிலை ஏற்றுமதிக்காக அனுமதி வழங்கி CUSDEC இற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் சகல பதிவு செய்யப்பட்ட தேயிலை ஏற்றுமதியாளர்களினால் சகல தேயிலை கிலோ கிராமிற்கும் ரூபா. 3.50 சதவீதம் வரி செலுத்த வேண்டும். உரிய கோவையின் ஒழுங்கு விதிகளுக்கமைய சேகரிக்கப்படும் சகல நிதி இலங்கைத் தேயிலை சபையினால் தீர்மானிக்கப்படும் உரிய கணக்கில் வைப்பிலிட வேண்டியதுடன் இதன் மூலம் சபையின் மூலதன நிதியத்தின் ஒரு பகுதி தயாரிக்கப்படுகிறது.

இக்கோவையினை அமுல்படுத்தும் போது உரிய கணக்கில் இலங்கைத் தேயிலை சபைக்கு வைப்பிலிடப்பட்டுள்ள சகல நிதிச் சபையினாலும் இலங்கையில் மற்றும் வெளியில் மேற்கொள்ளப்படும் ஊக்குவிப்பு உட்பட விற்பனை செயற்பாடுகளுக்குரிய பணிகளுக்காக மாத்திரம் பயன்படுத்த வேண்டும்.

## நிதி வெளிப்பாடுகள் தொடர்பான குறிப்பு
## 2013 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான

| | 2013.12.31 அன்று ரூபா | 2013.12.31 அன்று ரூபா |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை | 2,710,683,851 | 1,348,778,067 |
| ஏற்றுமதிகள் மூலம் சேகரிக்கப்பட்ட நிதி | 1,156,368,343 | 1,186,445,976 |
| முதலீட்டு மீதான வட்டி | 363,797,757 | 211,481,173 |
| கிரிக்கட் ரீ-சேட் விற்பனை | 3,521,500 | - |
| கோளமய விற்பனைப் பிரச்சாரம் | 75,000.00 | - |
| | 4,234,446,451 | 2,746,705,216 |
| ஊக்குவிப்புப் பணிகள் | 850,809 | 45,310 |
| பிரச்சாரம், உள்நாட்டு ஊடகங்களில் பிரசுரித்தல் | 1,736,255 | 221,758 |
| தூது சபைக்கான விருது தேயிலை, ஏனைய பரிசுத் தேயிலை | 3,447,419 | 3,036,776 |
| விசேட ஊக்குவிப்பு வர்த்தகம் | 1,678,787 | 2,297,111 |
| உள்நாட்டுக் கண்காட்சி மற்றும் சந்தைகளில் பங்கேற்றல் | 5,113,668 | 2,901,453 |
| தேயிலை வெளிநாடு / உள்நாட்டு ஊக்குவிப்புப் பணிகளுக்காக கருத்தரங்கு / செயலமர்வினை நடாத்துதல் | 253,389 | 942,509 |
| ஊக்குவிப்புப் படிவங்கள், சுவரொட்டி மற்றும் ஏனைய துண்டுப்பிரசுரங்களை அச்சிடல் | 2,903,205 | 831,170 |
| சர்வதேச சந்தையில் மற்றும் கண்காட்சிகளில் பங்கேற்றல் | 15,437,560 | 7,650,352 |
| வெளிநாடு ஜூன் - தேசிய ஊக்குவிப்பு | 42,185,553 | 2,416,398 |
| சர்வதேச தேயிலை சபை – சங்கங்களுக்கான பங்களிப்பு | 1,854,270 | 2,900,111 |
| சிங்க இலட்சனையினைப் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் | 4,341,507 | 8,243,308 |
| சந்தை அறிவு மற்றும் ஆராய்ச்சி | 3,866,148 | 709,813 |
| சர்வதேச தேயிலை உற்பத்தி அமைப்பு | 5,593,116 | - |
| இலங்கைத் தேயிலைக் கோளமய ஊக்குவிப்ப | 2,175,005 | - |
| வங்கிக் கட்டணம் | 760,213 | - |
| இலங்கைக் கிரிக்கட் குழுவிற்கு அனுசரனை | 207,959,798 | - |
| ரீ ஹவுஸ் செயற்பாடுகள் | 1,819,734 | - |
| G. I. பதிவு | 975,293 | 3,825,294 |
| தேயிலை நூதன சாலைக்கான வழங்கல் | 1,500,000 | - |
| செலவினம் - தே.ச. மொஸ்கோ | 6,266,849 | - |
| செலவினம் - தே.ச , ஐ.அ.எ.இ | 10,129,752 | - |
| பிரயாண செலவினம் - வெளிநாடு | 15,473,557 | - |
| | 336,321,888 | 36,021,365 |
| | 3,898,124,563 | 2,710,683,851 |

# நிதி வெளிப்பாடுகள் தொடர்பான குறிப்புக்கள்

## விசேட ஒதுக்கீடு

ரூபா. 481,935,543 வெளிநாட்டு ஒதுக்கீட்டினை ஏற்படுத்த சபை தீர்மானித்துள்ளதுடன் பொருத்தமானவாறு அதன் பயன்பாடுகள் தொடர்பாக சபையினால் தீர்மானிக்கப்படும்.

## 17 பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கீடுகள்

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் பிணக்குகளை தீர்க்கும் சபையினால் விசாரனை செய்யப்பட்ட வழக்குகளின் போது ரூபா. 15,556,335 நிதி செலுத்துமாறு இலங்கைத் தேயிலை சபைக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டது. இது எவ்வாறாக இருப்பினும் இத்தீர்மானத்திற்கு எதிராக இலங்தைகத் தேயிலை சபையினால் மேன் முறையீடு சமர்ப்பிக்கப்பட்டதுடன் வழக்கு தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

2012 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் மேற்கூறப்பட்ட வழக்கு உட்பட நிறுவனத்திற்கு எதிராக உள்ள வழக்குகள் தொடர்பில் சட்ட சபை இலங்கை தேயிலை சபைக்கு ஆலோசனை வழங்கியிருந்தது அனோனமாக அவ்வழக்குகள் தேயிலை சபைக்கு இலாபகரமாக அமையும் என்றும்.

இதற்கமைய இந்நிதி வெளிப்பாட்டுக் கூற்றுக்களில் அது தொடர்பில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

## 18 நிதி அபாய முகாமைத்துவம் , நோக்கங்கள் மற்றும் கொள்ளைகள்

சபையின் பிரதான நிதிப் பொறுப்புக்கள் வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளை கொண்டமைந்துள்ளது. இப்பொறுப்புக்களின் பிராதன பணிகளாக அமைவது இலங்கைத் தேயிலை சபையின் செயற்பாடுகளுக்காக நிதி வகுப்பதாகும். இலங்கைத் தேயிலை சபையிடம் அதன் செயற்பாடுகள் மூலம் நேரடியாகக் கிடைக்கும் வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகள், நிதி மற்றும் குறுகிய கால வைப்புக்கள் காணப்படுகின்றன. இலங்கைத் தேயிலை சபை துரித பாதிப்புக்களுக்கு உட்பட்டுள்ளது. இலங்கை தேயிலை சபையின் சிரேஷ்ட முகாமைத்துவம் இதனை முகாமைத்துவப் படுத்துவது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை இனங்காண்கின்றது. சபையின் அங்கத்தவர்கள் கீழே சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி முகாமைத்துவத்திற்குரியதான கொள்கை மீளாய்வுகளை மேற்கொண்டு இணக்கங்களை வெளியிட்டுள்ளது

## துரித பாதிப்புக்கள்

இலங்கை தேயிலை சபையின் நோக்கமாக அமைவது நிதியத்தை வகுப்பதை சமநிலைப்படுத்தி தொடர்ந்தும் முன்னெடுப்பதாகும். ஒப்பந்தம், கழிவுக் கொடுப்பனவை அடிப்படையகாக் கொண்டு இலங்கைத் தேயிலை சபையின் நிதிப் பொறுப்புக்கள் தொடர்பான பக்கத் தோற்றங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## 19 உரிய தரப்பினருடானான கொடுக்கல் வாங்கல்கள்

### 19.1 அரச மற்றும் அரச நிருவாகத்தின் கீழ் காணப்படடும் நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளல்

இலங்கைத் தேயிலை சபை இதன் பொதுவான செயற்பாட்டுப் பணிகளின் போது உரிய தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல்களை எட்டுகின்றது. உரிய தரப்பினர் என்பது இலங்கை அரசின் (அரச : இ.தே.ச உரிமையாளராக) அரசின் பல்வேறுபட்ட திணைக்களங்கள் மற்றும் அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ள நிறுவனங்கள் அடங்குகின்றன. தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்த ஏனைய கொடுக்கல் வாங்கல் தொடர்பில் தனித்தனியாக அன்றி கூட்ட அடிப்படையில் முக்கியமான கொடுக்கல் வாங்கல்களுக்குரியதாக இலங்கை தேயிலை சபையினால் அரச மற்றும் அரச நிருவாகத்தின் கீழ் காணப்படும் நிறுவனங்களுடன் உட்பட்டு தீர்மானங்கள் மற்றும் வேலைதிட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றன.

| கொடுக்கல் வாங்கலின் தன்மை | 2013.12.31 அன்று ரூபா | 2012.12.31 அன்று ரூபா |
|---|---|---|
| கொடுக்கல் வாங்கல்கள் | | |
| வருமானம் | 120,000,000 | 117,110,000 |
| பயன்பாட்டுச் செலவினம் | 19,338,503 | 17,880,913 |
| நிலுவைக் கிடைப்பனவுகள் | | |
| தே.தோ.ச. (பெருந்தோட்ட அமைச்சு) | 25,000,000 | 25,000,000 |

### 19.2 பிரதான முகாமைத்துவ உள்ளீடுகள்

இலங்கை தேயிலை சபையின் பிரதான முகாமைத்துவப் பணியாளர் சபையில் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களும் அடங்குகின்றனர்.

| | 2013.12.31 அன்று ரூபா | 2012.12.31 அன்று ரூபா. |
|---|---|---|
| குறுகிய கால தொழில் வாய்ப்புப் பிரதிலாபங்கள் | 776,479 | 750,000 |

## 20. ஐந்தொகை தினத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் இடம் பெற்ற சகல முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் நிதி வெளிப்பாடுகளில் பொருத்தமான ஒப்பீடுகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# இலங்கைத் தேயிலை சபையின் அலுவலகம்

பிரதான அலுவலகம்

574, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை

த.பொ. இல : 1750, கொழும்பு,
இலங்கை
தொலைபேசி: 011 2582121
011 2583687
அலுவலகம்: 011 2587814

பெக்ஸ்: 0112582122
மின்னஞ்சல் :teaboard@pureceylonte. com
இணையத்தளம்: www. pureceylontea.com

தலைவர்

தொலைபேசி: 011 2587814 /2590968
பெக்ஸ்: 0112585701
மின்னஞ்சல்:Chairman@pureceylontea.com

பணிப்பாளர் நாயகம்

தொலைபேசி: 011 2587814 /2508991
பெக்ஸ்: 0112582122
மின்னஞ்சல்:dgsltb@pureceylontea.com

தேயிலைஆணையாளர் பிரி

தேயிலை ஆணையாளர்
தொலைபேசி: 0112580182/2580152/2502485/ 2584845/ 2587814/ 2587773
பெக்ஸ்:0112580161
மின்னஞ்சல்: tcd@pureceylontea.com

தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு

பணிப்பாளர் (தேயிலை ஊக்குவிப்பு)
தொலைபேசி: 0112583343/2587814/2581418/ 2580169
பெக்ஸ்:0112587341
மின்னஞ்சல்: promotion@pureceylontea.com

தேயிலை ஏற்றுமதிப் பிரிவு

பிரதி தேயிலை ஆணையாளர் (ஏற்றுமதி)

: தொலைபேசி 0112502485/2584845/2587814/
2504090/2587773
தொலைநகல் : Comtea
பெக்: 0112584844
மின்னஞ்சல்:exports@pureceylontea.com

பகுப்பாய்வு பரிசோதனை ஆய்வு கூடம்

பணிப்பாளர் (ஆய்வு கூடம்)
தொலைபேசி: 0112587814/2581576
பெக்ஸ்:: 0112581576
மின்னஞ்சல்: lab@pureceylontea.com

## பிராந்திய அலுவலகங்கள்

**கம்பஹா**

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கைத் தேயிலை சபை
140, அம்பகமுவ வீதி, கம்பஹா
தொலைபேசி / பெக்ஸ்: 081-2352279
மின்னஞ்சல்: atcgp@pureceylontea.com

**மாத்தறை**

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கைத் தேயிலை சபை
46, வில்ப்ரெட் குணசேகர மாவத்தை, துறைமுகம்,
மாத்தறை.
தொலைபேசி. / Fax: 041-2222636
மின்னஞ்சல்: atcmt@pureceylontea.com

**மதுகம**

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கைத் தேயிலை சபை
281, அகலவத்த வீதி, மதுகம
தொலைபேசி.: 034-2247444
மின்னஞ்சல்: atcgl@pureceylontea.com

**இரத்தினபுரி**

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கைத் தேயிலை சபை
61/1, புதிய நகரம், இரத்தினபுரி
தொலைபேசி. / Fax: 045-
2222136
மின்னஞ்சல்: atcrt@pureceylontea.com

**பண்டாரவெல**

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கைத் தேயிலை சபை
விசாக மாவத்தை, புதிய பதுளை வீதி,
பண்டாறவெல
தொலை / பெக்ஸ்: 057-2222812
மின்னஞ்சல்: atcbw@pureceylontea.com

**காலி**

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கைத் தேயிலை சபை
20, தாழ் டிக்சன் வீதி, காலி
தொலைபேசி. / Fax: 091-2232052
மின்னஞ்சல்: atcgl@pureceylontea.com

## வெளிநாட்டுக் கிளை

| | | |
|---|---|---|
| | இலங்கை தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு<br><br>ஐக்கிய அரபு எமிர் இராட்சியம் | பணிப்பாளர் (தேயிலை ஊக்குவிப்பு)<br>தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு<br>இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்<br>கவுன்சளர் ஜெனரல் அலுவலம்<br>த.பொட்டி 51528 ,<br>டுபாய், ஐ.அ.எ.இ<br><br>தொலைபேசி: 00971 4<br>3987871<br>தொலைபேசி (நேரடி): 00971 4 3989349<br>பெக்ஸ்: 00971 4 3987872<br>மின்னஞ்சல்:ctbureau@emirates.net.ae /<br>ceylonte@eim.ae |
| இரஷ்ட | இலங்கை தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு<br><br>ரஷ்யா / CIS | தேயிலை ஊக்குவிப்பு உத்தியோகத்தர்<br>தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு<br>இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்<br>தூதரக அலுவலகம்<br>யுலிட்டிசா சுவபேகினா – 24<br>மொஸ்கோ – 129030<br>ரஷ்யா<br><br>தொலைபேசி: 007 495-688-1620/<br>495-6881651/ 495-688-1463<br>பெக்ஸ்: 007-495-688-1757<br>மின்னஞ்சல்:tea@srilankaembassy.org |

මගේ අංකය
எனது இல.
My No. } எல்பி/ஐ/எஸ்எல்ரீபீ/1/13/07

ඔබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2015 மே 27

தலைவர்,

இலங்கை தேயிலைச் சபை

**இலங்கை தேயிலைச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தேயிலைச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கையொன்று காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, இலங்கை தேயிலை சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்எவ்ஆர்எஸ் /எல்கேஏஎஸ்)

(அ) எல்கேஏஎஸ் 16- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

(i) நியமங்களில் வேண்டப்பட்டவாறு நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் இதன் விளைவால் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் சில சொத்துக்களின் சந்தைப் பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், கம்பளைப் பிராந்திய அலுவலகத்தின் காணியின் பெறுமதியானது ரூபா 17,000 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) ரூபா 68.13 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டதும் தற்போதும் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகின்றதுமான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எல்கேஏஎஸ் 39- நிதிக்கருவிகள்- அங்கீகாரம் மற்றும் அளவைகள்

1995 ஆம் ஆண்டிலிருந்து தேயிலை தொழிற்சாலையொன்றிலிருந்து பெறவேண்டிய ரூபா 4,239,769 தொகை அறவீட்டின் சாத்தியத் தன்மையை கருத்திற்கொள்ளாமல் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட ரூபா 693,257 மொத்தமான இடைப்போக்கிலுள்ள பொருட்கள் பின்னர் பெறப்பட்டிருந்த போதிலும் அந்தப் பொருட்களை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெறும் வேலைகள் மற்றும் கடன்கொடுத்தோரின் கீழ் மத்துகம பிராந்திய அலுவலகத்தின் நிர்மாண வேலைகளாக ரூபா 8,000,000 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் இந்த நிர்மாண வேலைகளிற்காக மீளாய்வாண்டின் போது எவ்வித கொடுப்பனவுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த நிர்மாண வேலைகளின் உடன்படிக்கை 2014 சனவரி 08 இலேயே கைசாத்திடப்பட்டிருந்தது, ஆதலால் இந்த கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வாண்டுடன் தொடர்புபட்டிருக்கவில்லை.

(இ) பண்டாரவளை பிராந்திய அலுவலகத்தில் ரூபா 224,280 தொகையான குத்தகையுடைமைக் காணிகளின் பெறுமதி குத்தகையுடமை காணிகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக இறையில் காணியின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் பெறவேண்டிய ரூபா 97,368 தொகையான வட்டி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்காததுடன் அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மிகை அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான ரூபா 22,896,392 தொகையான வட்டி வருமானம் மீதான பிடித்துவைத்தல் வரி கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்ததுடன் இதன் விளைவால் மீளாய்வாண்டிற்கான நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் மிகைகள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) தேயிலை இல்லத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 344,321 பெறுமதியான திரவ பெற்றோலிய எரிவாயு மூலதனமாக்கப்படாமல் மேம்படுத்தல் செலவினமாகக் கருதப்பட்டிருந்தது.

(எ) 13 நிறுவனங்களிடமிருந்து தனியுரிமை வாடகை முற்பணமாகப் பெறப்பட்ட ரூபா 900,000 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆகவே, மீளாய்வாண்டிற்கான வருமானம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) சபையானது 2013 யூன் முதல் 2014 மே மாதம் வரையான காலத்திற்காக அனுசரணையாளர் கட்டணமாக இலங்கை கிறிக்கெட்டிற்கு ரூபா 205,060,800 ஆன தொகை செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், முற்பணமாக ரூபா 85,442,000 காட்டப்படுகின்றதற்குப் பதிலாக ஒட்டுமொத்தத் தொகையும் மீளாய்வாண்டிற்கான செலவினமாக கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஐ) இருப்பு மெய்மையாய்வு கணக்கின் பிரகாரம் காகிதாதி இருப்புக்களின் பெறுமதி ரூபா 1,392,775 ஆன போதிலும் இது ரூபா 3,178,836 ஆக கணக்கிற்கு எடுத்திருந்தது. ஆகவே, காகிதாதி இருப்புக்கள் கணக்குகளில் ரூபா 1,786,061 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) சபையினால் மீளாய்வாண்டின் இறுதிவரை பொருட் கட்டளையிடப்பட்டிருக்காத போதிலும், இடைப்போக்கிலுள்ள பொருட்களாக ரூபா 35,986,763 ஆன தொகை மீளாய்வாண்டின் இறுதியில் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஓ) மொஸ்கோ மற்றுத் துபாயில் உள்ள தேயிலை மேம்பாட்டுப் பிரிவுகளின் முறையே ரூபா 403,153 மற்றும் ரூபா 801,119 பெறுமதியான நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் கணக்குகளிற்குள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஔ) மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 16,930,787 தொகையான 2012 ஆம் ஆண்டிற்கான தற்காலிக மிகைகள் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் வட்டி மீளாய்வாண்டிற்கான வருமானமாக எடுக்கப்பட்டிருந்தது. ஆகவே, மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(க) மீள் கொள்வனவுக்குரிய ரூபா 363,851 ஆன வட்டி வருமானத்தின் மீதான தேச வரி வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபையிடமிருந்து ஐந்து ஆண்டுகளிற்கு அதிகமான காலமாக பெறவேண்டியவையாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 25 மில்லியன் தொகை மீளாய்வாண்டு இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அறவீடு ஐயத்திற்கிடமாக இருந்தமையால் நட்ட மற்றும் ஐயக் கடன்களின் கீழ் இந்தத் தொகைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும்,

2012 யூன் 19 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் செயற்பாட்டுக் குழு கூட்டத்தின் பதிவுகளின் பிரகாரம், ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்கு தேயிலை ரூபா 16 மில்லியன் பெறுமதியான கந்தானவிலுள்ள ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான இலங்கை தேயிலை அருங்காட்சியத்தின் உரிமையாண்மையை பெறுவதற்கும் மிகுதி ரூபா 8 மில்லியனைப் பதிவழிப்பதற்கும் தீர்மானத்திற்கு வந்திருந்தன. எவ்வாறாயினும், இந்த நடைமுறை 2014 ஒக்தோபர் 31 இல் கணக்காய்வு திகதிவரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 4,225,671 தொகையான பச்சை தேயிலை வழங்குநர்களின் வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் தகராறு எழும் போது அவை கொடுப்பனவு செய்வதற்காக பிடித்துவைத்திருக்க வேண்டியிருந்தமையால் ரூபா 2,599,793 தொகை மீளளிக்க முடியாதிருந்ததென தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

(இ) சிரியாவில் "FODEXPO" வர்த்தக கண்காட்சியை நடாத்துவதற்கு 2011 ஆம் ஆண்டின் போது சபையால் செலுத்தப்பட்ட ரூபா 631,737 ஆன முற்பணம் அது நடாத்தப்பட்டிருக்காமையால் மீளஅறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தொகை | உறுதிப்படுத்தல்கள்/ தொடர்புபட்ட பதிவேடுகள்/ பட்டோலைகளின் பிரகாரம் தொகை | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கடன்கொடுத்தோர் (உத்தியோகபூர்வ தேயிலை பொதி) | 7,878,879 | 3,961,506 | 3,917,373 |
| பிடிகாசு | 4,171,495 | 1,270,371 | 2,901,124 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் (துபாயிலுள்ள தேயிலை மேம்படுத்தல் பிரிவு) | 1,003,151 | 1,371,000 | 367,949 |

| | | | |
|---|---|---|---|
| பச்சை தேயிலை விநியோகத்தர்களின் வைப்புக்கள் | 15,195,743 | 15,060,580 | 135,163 |

## 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்ட ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | மீளளிக்க வேண்டிய வைப்புக்கள் | 316,493 | பட்டோலைகள் மற்றும் ஆதாரமான ஆவணங்கள் |
| (ஆ) | பண்டாரவளை பிராந்திய அலுவலக காணி | 224,800 | குத்தகை உடன்படிக்கைகள் |
| (இ) | மத்துக்கம பிராந்திய அலுவலக காணி | - | காணியின் உரித்துறுதி |
| (ஈ) | பொது வைப்புக்கள் | 74,383 | பட்டோலைகள் மற்றும் ஆதாரமான ஆவணங்கள் |
| (உ) | உத்தியோகத்தர் தேயிலை அறவீடுகள் | 257,382 | |
| (ஊ) | முற்பணக் கொடுப்பனவுகள் | 7,105,299 | |
| (எ) | வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | 207,360 | |
| (ஏ) | வங்கி மீதி - யூஏஈ | 1,003,151 | வங்கி உறுதிப்படுத்தல்கள் |
| | - மொஸ்கோ | 416,229 | |
| (ஐ) | தூதரக கணக்கு - யூகே | 16,566 | |
| | - கனடா | 134,377 | |
| | - போலந்து | 135,426 | |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றிக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) (i) 1957 இன் 51 ஆம் இலக்க தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின் 49 ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபை கட்டளைச் சட்டத்தின் 25(3) ஆம் பிரிவு | அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் 2010 யூலை 29 இல் சபைத் தீர்மானத்தின் பிரகாரம், பதிவுக் கட்டணம், பதிவு புதுப்பித்தல் கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திர கட்டணம் என்பன அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரச் சட்டங்களின் பிரகாரம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்றன. |
| (ii) 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபை கட்டளைச் சட்டத்தின் 13 மற்றும் 14 ஆம் பிரிவுகள் | செஸ்வரி நிதியத்தின் தாபிப்பு மற்றும் செயற்பாடு என்பன அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 132 ஆம் பிரிவு | 2012 ஆகஸ்ட் 02 முதல் 2013 ஆகஸ்ட் 01 வரையான காலத்திற்காக தேயிலை மேம்பாட்டுச் பிரிவுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு செயற்திட்ட ஆலோசனையாளரிடமிருந்து ரூபா 1,560,000 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (இ) அரசாங்க நிதிப் பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 507 | நிதிப் பிரமாண அறிவுறுத்தல்களின் பிரகாரம், நிலையான சொத்துக்களின் புத்தக மீதிகள் மற்றும் பெறுமதிகள் என்பன கணிப்பீட்டுச் சபை அறிக்கைகளிற்குள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. ஆகவே, புத்தகத்தில் பதியப்பட்ட அளவிற்கும் பௌதீக |

| | | |
|---|---|---|
| | | ரீதியாகவுள்ள மீதிக்கும் இடையிலான முரண்பாடுகள் கணிப்பீட்டுச் சபை அறிக்கைகளில் காட்டப்பட்டிருக்காமையின் விளைவாக கணிப்பீட்டுச் சபையின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1978 திசெம்பர் 12 ஆம்திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம், நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2012 திசெம்பர் 24 ஆந் திகதிய 2012 எம்எஸ்டி 49 மற்றும் 2013 திசெம்பர் 09 ஆந் திகதிய 01/2013(i) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மிகையூதியம் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை பின்பற்றாமல் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 11,390,437 ஆன பற்றாக்குறைக்கு எதிராக ரூபா 19,071,236 ஆன தேறிய மிகையில் விளைவித்திருந்தது, ஆதலால், அது நிதிசார் விளைவுகளில் ரூபா 30,461,673 ஆன முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டிற்காக சபையின் பதிவு மற்றும் புதுப்பித்தல் வருமானம் அதிகரித்தமை மற்றும் நிர்வாகம் மற்றும் செயற்பாட்டு செலவினம் வீழ்ச்சியடைந்தமை என்ற காரணங்கள் இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதி மற்றும் பௌதீக இலக்குகளின் அடைதல்

மீளாய்வாண்டிற்கான சபையின் முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் இலக்ககளை அடைதல் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அபிவிருத்தி நடவடிக்கைகள்

| | நடவடிக்கை | ஒதுக்கீடு | | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | நிதி இலக்குகள் | பௌதீக இலக்குகள் | நிதி இலக்குகள் | பௌதீக இலக்குகள் |
| | | ரூபா மில் | | ரூபா மில் | |
| 1 | தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் உதவுதொகைத் திட்டம் | 16 | 65 தொழிற் சாலைகள் | 17.96 | 39 தொழிற் சாலைகள் |
| ii | தேயிலை மீள்நடுகை உதவுதொகைத் திட்டம் | 16 | 250 ஹெட்டெயர் | 14.36 | 259 ஹெட்டெயர் |
| iii | அறுவடைக்கு பிந்திய நடவடிக்கைகளைக் குறைத்தல் | 12 | 35 தொழிற் சாலைகள் | 1.42 | 15 தொழிற் சாலைகள் |
| iv | எஸ்எல்எஸ்ஐ/எஸ்எல்ரீபீ தர உற்பத்திச் சான்றிதழ் | 01 | 35 நிகழ்ச்சி திட்டங்கள் | 0.46 | - |
| v | தொழிற்சாலை அடிப்படை தேயிலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 0.30 | 35 நிகழ்ச்சி திட்டங்கள் | 1.79 | 15 நிகழ்ச்சிச் திட்டங்கள் |
| | மொத்தம் | 45.30 | | 36.00 | |

மேற்குறிப்பிட்ட தகவல்களின்மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், தேயிலை மீள்நடுகை உதவு தொகை உத்தேசத் திட்டத்தின் நடவடிக்கைகள் மாத்திரம் திட்டமிட்டவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினுள் உதவு தொகை உத்தேசத் திட்டத்தின் கீழ் நவீனமயப்படுத்தலுக்காக 65 தொழிற்சாலைகள் இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 1.96 மில்லியன் ஆன தொகை ஒதுக்கீட்டினை விஞ்சி 39 தொழிற்சாலைகள் மாத்திரம் நவீனமயப்படுத்தப்பட்டிருந்தன.

### (ஆ) கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்

| நடவடிக்கை | ஒதுக்கீடு | முன்னேற்றம் நிதி இலக்குகள் | முன்னேற்றம் பௌதீக இலக்குகள் |
|---|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| 1 கேட்போர் கூடம் மற்றும் தலைமை அலுவலகத்தினை புதுப்பித்தல் | 20 | - | - |
| ii களுத்தறையில் மாவட்ட அலுவலகத்தின் நிர்மாணம் | 08 | - | - |
| iii நுவரெலியாவில் மாவட்ட அலுவலகத்தின் நிர்மாணம் | 12 | 0.05 | செயற்பாட்டில் உள்ளது |
| மொத்தம் | 40 | 0.05 | |

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. தலைவரின் பதிலின் பிரகாரம் "கேட்போர் கூடத்தின் நிர்மாணம் தொடர்பில் நிதி அமைச்சருக்கு நிதிப் பிரமாணத்தின் விதப்புரைகளுக்கமைய அனுமதிக்காக மேன்மை தகு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரின் இணக்கப்பாடு வழங்கப்படாமையால் நிர்மாண வேலைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது"

### (இ) மூலதனச் சொத்துக்களின் கையேற்பு

மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் பின்வரும் சொத்துக்கள் திட்டமிட்டவாறு கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

| சொத்துக்கள் | பெறுமதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| தகவல் தொழில்நுட்ப பிரிவு உபகரணம் | 12.11 |
| ஆய்வுகூட உபகரணம் | 7.80 |
| | 19.91 |

## .2 தேயிலை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களிற்கான வரிவிதிப்பு

தேயிலை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களிற்காக 2010 ஒக்தோபர் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் தேயிலைக்கு ரூபா 3.50 படி ஏற்றுமதியாளர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற கட்டணங்கள் மற்றும் சபையால் 2010 நவம்பர் 01 முதல் 2013 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் தேயிலை ஊக்கவிப்பு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | சேகரிக்கப்பட்ட வரி | முதலீடுகள் மீதான வட்டி | ஏனைய வருமானம் | மொத்த வருமானம் | மொத்தச் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2013 | 1,156.37 | 363.80 | 3.60 | 1,523.76 | 336.32 |
| 2012 | 1,186.45 | 211.48 | - | 1,397.93 | 36.02 |
| 2011 | 1,113.81 | 66.44 | - | 1,180.26 | 25.76 |
| 2010 | 194.28 | - | - | 199.28 | - |
| மொத்தம் | 3,650.91 | 641.72 | 3.60 | 4,296.23 | 398.10 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையான திட்டம் மற்றும் முகாமைத்துவம் இன்மையால், ரூபா 4,296.23 மில்லியன் மொத்த வருமானத்தில் ரூபா 398.10 மில்லியன் அல்லது 9.27 சதவீதம் மாத்திரம் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் நடாத்தப்படுவதிலுள்ள தாமதம் காரணமாக மீளாய்வாண்டின் இறுதிவரை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வரி சேகரிப்பின் பிரதான நோக்கம் தேயிலை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களில் பயன்படுத்தலெனினும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் நடாத்தப்படுவதிலுள்ள தாமதம் காரணமாக மீளாய்வாண்டின் போது அப்பணம் குறுகியகால முதலீடுகளில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் வட்டியாக ரூபா 641.72 மில்லியன் தொகை உழைக்கப்பட்டிருந்தது.

(இ) 2013 ஆம் ஆண்டிற்கான பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சந்தைப் புலனாய்வு நடவடிக்கைகளிற்காக ரூபா 19.95 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் 2013 ஆம் ஆண்டிற்கான யூரோ மேற்பார்வை உலகளாவிள தரவு சேகரிப்புக்கு செய்யப்பட்ட ரூபா 2.45 மில்லியன் கொடுப்பனவுகளைத் தவிர மீளாய்வாண்டின் போது ஆராய்ச்சி நடவடிக்கைகள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் புதிய சந்தைப்படுத்தல் பகுதிக்காக பிரச்சார தணிக்கை நாடுபூராவும் பரிந்துரைக்கப்பட்ட ஊக்குவிப்பு நடவடிக்கைகாக 2012 ஆகஸ்ட் 02 இல் ரூபா 130,000 மற்றும் ரூபா 31,500 மாதாந்த சம்பளத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் முறையே செயற்திட்ட ஆலோசனையாளர் மற்றும் விரிவான வடிவமைப்பாளரொருவர் நியமிக்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், இந்த நடவடிக்கை 2013 ஆகஸ்ட் 30 வரை அமுலாக்கப்பட்டிருக்காததுடன் ஆண்டின் போது சம்பளங்களாக ரூபா 1,406,391 தொகை செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட ஆலோசனையாளர் 2013 ஆகஸ்ட் 01 இல் அவருடைய ஒப்பந்த காலம் பூர்த்தியான பின்னர் சேவையிலிருந்தும் இராஜினாமா செய்திருந்தார்.

(ஈ) மீளாய்வாண்டிற்காக ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களிற்காக ரூபா 1,995 மில்லியன் பாதீட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 336.32 மில்லியன் அல்லது 16.85 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(உ) 28 நாடுகளில் ஒரே தேசிய நடவடிக்கைகளிற்காக ரூபா 1,197 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நடவடிக்கைகளிற்காக ரூபா 42.18 மில்லயன் (3.5 சதவீதம்) மாத்திரம் செலவழிக்கப்பட்டிருந்தது. ஒரே தேசிய நடவடிக்கைகளின் கீழ் 2013 இல் நடைபெற்ற பொதுநலவாய அரசாங்க தலைவர்கள் (சீஎச்ஓஜீஎம்) கூட்டங்களிற்காக பெருமளவு கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ஊ) வாடகை அடிப்படையில் கொழும்பு ரேஸ் கோஸ் கட்டிடத்தில் தேயிலை இல்லமொன்று தாபிப்பதற்கு மீனாய்வாண்டின் போது பின்வரும் செலவினங்கள் ஏற்பட்டிருந்ததுடன் 2014 பெப்ரவரி 28 இலிருந்து தொடங்கி 10 ஆண்டுகளாக மீளளிக்க தேவையற்ற வாடகை வைப்பின் 50 சதவீதத்தை செலுத்தியிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | ரூபா |
|---|---|
| 10 ஆண்டுகளாக மீளளிக்க தேவையற்ற வாடகை வைப்பின் ஐம்பது சதவீதம் | 8,571,360 |
| நிர்மாணம் மற்றும் உள்ளக வேலைகள் (ஒளியூட்டல், நிலம் கொங்றீட் மற்றும் கம்பளமிடல், குழாய்கள் பொருத்துல், வெள்ளையடித்தல் போன்றன) | 11,934,325 |
| சமையலறை உபகரணக் கொள்வனவு | 6,635,547 |
| குளிரூட்டல் சாதனம் பொருத்துதல் | 1,482,819 |
| தளபாடங்கள் மற்றும் சமையலறை விடயங்கள் தொடர்பான இடையிலுள்ள பொருட்கள் | 16,813,383 |
| | 45,437,434 |

மேற்குறிப்பிட்ட செலவினத்திற்கு மேலதிகமாக, தேயிலை இல்லத்தின் செயற்பாடுகளிற்காக ஆரம்ப காசு மானியம், மாதாந்த வாடகை மற்றும் மாதாந்த முகாமைத்துவ கட்டணமாக முறையே ரூபா 4,000,000 ரூபா 270,000 மற்றும் ரூபா 300,000 ஆன தொகைகள் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தேயிலை இல்லத்தின் செயற்பாடுகளிற்காக சாத்தியவளக் கற்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக 2014 மார்ச் முதல் ஒக்தோபர் வரையான ஆறு மாத காலத்தின் போது ரூபா 4.59 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது இலங்கை கிறிக்கெட்டிற்காக ரூபா 665 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இந்த நடவடிக்கைக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 207.96 மில்லியன் மாத்திரமே செலவழிக்கப்பட்டிருந்தது. ஆகவே, இது தொடர்பில் ரூபா 457 மில்லியன் ஆன மிகை ஒதுக்கீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) கிறிக்கெட் அனுசரனை உடன்படிக்கையின் பிரகாரம், 9,943 ரீ சேட்கள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 9,943,000 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த ரீ சேட்கள் ஆண்டின்

போது எதிர்பார்க்கப்பட்டவாறு விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. ரீ சேட்கள் விற்பனை மீதான இலாபமாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,521,500 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டில் ரூபா 1,229,000 கிரயத்திலான 1,229 ரீ சேட்கள் மீள நிருப்பியலுடப்பட்டிருந்தது. ஆகவே, ரீ சேட்கள் விற்பனை மீதான இலாபம் ரூபா 1,711,200 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், உலக சந்தையில் இலங்கை தேயிலையின் நிலமை உலக தேயிலை ஏற்றுமதி செய்கின்ற நாடுகளிற்கு இடையில் கடந்த ஐந்து ஆண்டுகளாக தொடர்ச்சியாக மூன்றாவது இடத்தில் இருந்ததுடன் நிதிகள் கிடைத்திருந்த போதிலும் சபையால் முறையான ஊக்குவிப்பு நடவடிக்கைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 4.3 மனிதவள முகாமைத்துவம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாம், பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) பிரதி/ உதவிப்பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்), பிரதி மற்றும் உதவி தேயிலை ஆணையாளர்கள், (பிராந்திய) சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட தேயிலை ஆணையாளர்கள், 08 தொழில்நுட்ப உதவியாளர்கள் (ஆய்வுகூடம்) போன்றோர் உள்ளடங்கலாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 79 வெற்றிடங்களாக இருந்தன. மேலும் 3 தேவைக்கு அதிகமான பதவிகள் உள்ளபடியான பதவியணியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆட்சேர்ப்புத் திட்டத்தின் 5.4 ஆம் பந்தியின் பிரகாரம், அரச விளம்பரங்கள் அல்லது புதினப்பத்திரிகை விளம்பரங்கள் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்படாமல் மீளாய்வாண்டின் போது பதின்நான்கு முகாமைத்துவ உதவியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். மேலும் நியமனம் தொடர்பில் 5.4.1 ஆம் பந்தியில் பிரகாரம் அறிவு தொடர்பில் பரீட்சையொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 இல் நியமிக்கப்பட்ட 09 முகாமைத்துவ உதவியாளர்களில், நியமிக்கப்பட்ட ஐந்து நபர்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் 5.3.1 ஆம் பந்தியில் வேண்டப்பட்ட தகமைகளைக் கொண்டிருக்காததுடன் அவர்கள் வேண்டப்பட்ட தகமைகளை இன்னமும் பூர்த்தியாக்காமல் சேவையான்றுகின்றனர்.

(iii) ரூபா 87,024 கிரயத்தில் 2013 ஏப்ரல் 07 இல் பணிப்பாளர் பதவிக்கு (நிதி மற்றும் நிர்வாகம்) ஆட்சேர்ப்பதற்காக புதினப்பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும், உத்தியோகத்தர் எவரும் நியமிக்கப்பட்டிருக்காததுடன் விளம்பரத்திற்காக செலவழித்த பணம் பயனற்ற செலவினமாக இருந்தது.

(iv) சபையால் முறையான உத்தியோகத்தர் சுழற்சி முறையொன்று பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 4.4. முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேயிலை ஆணையாளர் பிரிவு குடியிருந்த கட்டிடம் 2002 திசெம்பர் 31 இல் காலிசெய்யப்பட்டிருந்ததுடன் 2005 இலிருந்து 2011 மே மாதம் வரை ரூபா 2.8 மில்லியன் செலவழித்து நடுவர்தீர்ப்பு ஊடாக வளவின் உடமையாளரிடம் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 2.4 மில்லியன் தொகையான வாடகை முற்பணம் சபையால் அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வளவின் உடமையாளர் கட்டிடத்திற்கான சேதங்களிற்காகவும் 2003 சனவரியிலிருந்து செப்தெம்பர் வரை கட்டிடத்தை குத்தகைக்கு விடப்படவேண்டிய பகுதியை மீளமைப்பதற்கு தவறியிருந்ததற்காகவும் 20 சதவீத வட்டி மற்றும் 15 சதவீத பெறுமதி சேர் வரியுடன் ரூபா 4.9 மில்லியன் கோருவதற்காக 2008 ஒக்தோபர் மாதத்தில் சபைக்கு எதிராக நடுவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். சபையானது இந்த வழக்கிற்கு எதிராக மேன்முறையீடு செய்திருந்ததுடன் விசாரணைகள் இன்னமும் செயற்பாட்டில் உள்ளன. தலைவரின் பதிலின் பிரகாரம் உடமையாளருக்கு மொத்தக் கொடுப்பனவுகள் ரூபா 14 மில்லியனாக இருக்க வேண்டுமென தீர்பளித்துள்ளது. எவ்வாறாயினும் இலங்கை தேயிலைச் சபையானது இந்த தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்திருந்தது.

(ஆ) 2009 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 32 மில்லியன் பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள் (எல்சீஎம்சீ) 2014 யூலை 14 ஆன கணக்காய்வு திகதிவரை பயன்பாடற்றிருந்தது. தற்போது உபகரணங்கள் முறைப்படி செயற்படுகின்றதுடன் பரிசோதனை அறிக்கைகள் எடுக்கப்படுகின்றன எனவும் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்டவற்றிக்கும் உள்ளபடியானவற்றிற்கும் இடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையெனக் அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் பொழுது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் தலைவியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பதிவேட்டுப் பொருளிருப்புக் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) பெறவேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும்
(ஈ) ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*M*